நீதி போதனைப் பாட
புத்தகம்

# நீதி போதனைப் பாட புத்தகம்

## முதற் படிவம்

ஆசிரியர் :
**வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்,**
*தமிழ் விரிவுரையாளர், புதுக் கல்லூரி,*
*சென்னை – 14.*

*பிரசுரகர்த்தர் :*
**ராஜா ராம்சந்தர் அண்டு கம்பெனி,**
**திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை–5.**
**1954**

முதற் பதிப்பு – 1954.

உரிமை பிரசுரகர்த்தர்களுடையது.

விலை அணா 9

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

திருக்குறள் ஒரு சிறந்த நீதிநூல். அந்நூல் கருத்துக்களை கதையின் மூலம் இளைய மாணவர்களுக்குப் புகட்டுதல் ஒரு நல்ல முறையாகும். அம்முறைக்கிணங்கவே, இந்நூலில் திருக்குறள் பாக்கள் சிலவற்றின் கருத்துக்கள் முன்னர் விளக்கப் பட்டு, அக்குறட் பொருளை விளக்கவல்ல கதையும் கொடுக்கப்பட்டுள்ளது. குறட்பாவின் பொருளை உணர்வதற்கு நூலின் இறுதியில் அருஞ்சொற் பொருள்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கால அட்டவணையில் வாரத்தில் நீதி போதனையை நடத்த ஒரு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்நேரத்தில் இத்தகைய நீதிகளும், கதைகளும் உதவக்கூடும் என்ற எண்ணத்துடன் இது வெளிவருதலின், பள்ளிக்கூட அதிகாரிகளும், ஆசிரியர்களும் இதனைப் பெரிதும் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஆசிரியர்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிவுடை மகனை அனைவரும் விரும்புவர் ... | 1 |
| 2. | நன்றி மறப்பது நன்று அன்று ... | 5 |
| 3. | பெரியோரை இகழ்ந்து பேசுதல் கூடாது ... | 8 |
| 4. | ஆடம்பரம் அற்ற அறமே உண்மை அறம் ... | 11 |
| 5. | பொறுத்தவர் என்றும் புகழே பெறுவர் ... | 16 |
| 6. | இன்சொல் இருக்க வன்சொல் ஏன்? ... | 21 |
| 7. | கேள்வி ஞானமும் சிறந்த ஞானம் ... | 24 |
| 8. | விடாமுயற்சி வெற்றிக்கு வழி ... | 28 |
| 9. | அழுது புரண்டாலும் மாண்டார் மீளார் ... | 31 |
| 10. | ஆராய்ந்து நடத்தும் அரசே அரசு ... | 35 |
| 11. | அன்புடையார் அருமைக் குணம் ... | 38 |
| 12. | பேசும் முன்பு நன்கு ஆராய்ந்து பேசு ... | 41 |
| 13. | எண்ணியே எந்தக் காரியமும் செய்க ... | 45 |
| 14. | சூது இல்லாமல் தூது செல்க ... | 49 |
| 15. | தீமை செய்தவற்கும் நன்மையே செய்க ... | 52 |
| 16. | மனோதிடம் இருந்தால் மாட்சி பெறலாம் ... | 55 |
| 17. | கோபம் கொள்ளுதல் பாபம் ஆகும் ... | 58 |



## 1. அறிவுடை மகனை அனைவரும் விரும்புவர்

உலகிலுள்ள தந்தைமார்களுக்கெல்லாம் உள்ள ஆசை பல. அவற்றுள் ஒன்று, தம் மக்கள் கல்வி அறிவில் தம்மைவிட அறிவுடையவராய் இருக்கவேண்டும் என்பது. இப்படித் தம் மக்கள் அறிவுடையவராய் இருப்பதால் தமக்கு மட்டும் இனிமை தருவதன்றி உலகில் உள்ள யாவர்க்கும் அவ்வறிவு இன்பம் தருவதாகும். இதனால், தந்தையாரைவிட மகனது கல்வி அறிவு கண்டு உலகத்தார் மகிழ்வர். இதற்கு உதாரணமாக ஒரு வரலாற்றைப் பாருங்கள்.

சீர்காழி என்னும் பதியில் சிவபாத இருதயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவரது மனைவியார் பகவதியார். இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையைப் பெற்றோர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். அதற்குப் பாலூட்டி, சீராட்டி, பாராட்டித் தாலாட்டி இன்பமாக வளர்த்து வந்தனர். குழந்தையும் தவழ்ந்தும், நடந்தும் மழலைச் சொற்களைப் பேசியும் பெற்றோரை மகிழச் செய்து வந்தது.

சிவபாத இருதயர் நிரம்பிய தெய்வபக்தியுடையவர். தினமும் சீர்காழிக் கோவிலுக்குச் சென்று குளத்தில் நீராடி, தோணியப்பரை வணங்கிவருவர். வழக்கப்படி ஒரு நாள் காலை, தாம் நீராடி ஆலயம் புகுந்து ஆண்டவனை வணங்கிவரப் புறப்பட்டார். அப்போது, அவரது குழந்தையும் உடன் வருவதாகத் தொந்தரவு செய்தது. சிவபாத இருதயர் அக்குழந்தையையும் அழைத்துக் கொண்டு ஆலயம் சென்றார். அப்போது குழந்தைக்கு வயது மூன்று. சென்றவர் குளக்கரையில் குழந்தையை உட்கார்ந்திருக்கும்படி கூறித் தாம் குளத்தில் குளிக்க இறங்கினார். குளத்தில் குளிப்பவர் சிறிது நேரம் குளப்படியில் உட்கார்ந்து கொண்டும், சில படிகள் கடந்து நின்றுகொண்டும், சிலர் தண்ணீரில் மூழ்கியும் குளிப்பர் அல்லவா? அந்த விதமாகச் சிவபாத இருதயர் குளத்தில் இறங்கி நீருள் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தனர். குளக் கரையில் இருந்த குழந்தை குளத்தில் இறங்கிய தம் தந்தையார் குளத்துள் மறைந்திருப்பதை அறியாமல், "அம்மா,

அப்பா," என்று அழத் தொடங்கியது. இப்படிக் குழந்தை, "அம்மா, அப்பா", என்று சொல்லி அழைத்ததைச் சீர்காழியில் உள்ள தோணியப்பர் கேட்டுத் தம் பக்கத்தில் உள்ள உமாதேவியாருடன் குளக்கரைக்கு வந்து, குழந்தையைப் பார்த்து, பார்வதியை நோக்கிப் பால் தருமாறு கட்டளை இட்டார். அப்படியே உமா தேவியார் பொன் கிண்ணத்தில் பாலை நிரப்பிக் குழந்தையின் கையில் கொடுத்தனர். குழந்தையும் பாலைக் குடித்துப் பரவசமாக இருந்தது. இதற்குள் சிவபாத இருதயரும் தம் குளியலை முடித்துக் கொண்டு கரை ஏறிவந்தார்.

சிவபாத இருதயர் தம் குழந்தையின் கையில் பால் கிண்ணம் இருப்பதைப் பார்த்து, யாரோ கொடுத்த பாலை இவன் குடித்துவிட்டான் என்று கோபங் கொண்டு, "யார் கொடுத்த பாலைக் குடித்தாய்?" என்று அதட்டிக் கேட்டார். அப்போது குழந்தை, உமா தேவியார் கொடுத்த பால் வெறும் பாலாக இல்லாமல் ஞானப் பாலாக இருந்ததால், ஞானம் வரப்பெற்றுத் "தோடுடைய செவியன்" என்று தொடங்கிப் பாடல்பாடி, "இதோ! ஆகாயத்தில் தோன்றும் கடவுள்தான் பாலைத் தந்தார்." என்று சுட்டிக் காட்டியது. சிவபாத இருதயரும் கண்டார்; மகிழ்ந்தார். தந்தையார் தம் மகன் இந்தச் சிறுவயதில் கடவுளைக் காணும் அறிவும், பாடும் அருளும் பெற்றனே என்று மகிழ்ந்தார். பிறகு அக்குழந்தையே ஞானசம்பந்தர் என்ற திருப்பெயர் பெற்று, தேவாரத்தைப் பாடி உலக மக்களுக்கு இன்பம் செய்தது.

பாடினர்மு ஆண்டினில்சம் பந்தர்என யாவோரும்
சூடும் மகிழ்ச்சிமெய்யே சோமேசா—நாடியிடில்
தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

## பயிற்சி வினாக்கள்

1. தந்தையாரை விடப் பிள்ளைகள் அறிவுடையவராய் இருந்தால் யார் யார் மகிழ்வர்?
2. திருஞானசம்பந்தர் எங்கு யாருக்குப் பிள்ளையாகப் பிறந்தார்? அவர் வளர்க்கப்பட்ட முறைகளையும் குறிப்பிடு.
3. சீர்காழிக் குளக்கரையில் நடந்த நிகழ்ச்சி யாது?
4. திருஞான சம்பந்தருக்கு எதனால் இப்பெயர் ஏற்பட்டது?
5. திருஞான சம்பந்தர் அறிவு பெற்றார் என்பது எப்படித் தெரிகிறது.

## 2. நன்றி மறப்பது நன்று அன்று

அறிவுடையவர்கள் என்பது எப்படித் தெரியும்? அவர்கள் செய்யும் செயல்கள் மூலமாகத்தானே தெரியும்? அவர்கள் தமக்கு யாராகிலும் தினை அரிசி போன்று சிறிதளவான நன்றி செய்தாலும், அதனைப் பனம்பழம் அளவுபோலப் பெரிதாகவே எண்ணி என்றைக்கும் மறக்கமாட்டார்கள். அவர்களுக்கு அந்தச் சிறிய உதவியின் பயன் நன்றாகத் தெரியும். அந்தத் தெளிந்த அறிவுதான் சிறிய உதவியைப் பெரிய அளவாக நினைக்கும்படி செய்யும். இதனை ஔவையார் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றால் விளக்கமாகக் காணலாம்.

ஔவையார் ஒப்பற்ற தமிழ் அறிவு பெற்றவர். அருமையான பாடல்களைப் பாடியவர். அவர்களை ஆண்டி முதல் அரசர் வரை அன்புடன் வரவேற்று உபசரிப்பார்கள். அந்த அம்மையாரும் "இவன் ஏழை; இவன் பணக்காரன்." என்று வித்தியாசம் பார்ப்பதே இல்லை. எல்லோரையும் ஒரே விதமாகவே எண்ணுபவர்; தம் வாயால் வாழ்த்துபவர்.

ஔவையார் ஓர் இடத்தில் நிலையாக இருப்பவர் அல்லர். பல இடங்களுக்கும் போகின்றவர். "பணம் கொடுப்பவர்க்குமட்டும்தான் பாட்டுப் பாடுவோம்; மற்றவர்கள் மீது பாட்டுப் பாடமாட்டோம்" என்று நினைக்கமாட்டார். "ஔவையார் கூழுக்குப்

பாடுபவர்." என்ற பழமொழியும் வழங்கிவருகிறது என்றால், வேறு என்ன சொல்லவேண்டும்? தமிழ் அன்பும், உதவி செய்யும் குணமும், இல்லாதவர்கள் எவ்வளவு கெஞ்சிக் கேட்டுக்கொண்டாலும் அவர்கள் மீது பாட்டுப் பாடமாட்டார்.

ஒரு சமயம் ஔவையார் பாண்டிய நாட்டில் ஒரு காட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அந்த வேளை நல்ல உச்சி வேளை. வெயில் கடுமையாக இருந்தது. அம்மையாரோ வயது முதிர்ந்தவர்; உடல் தளர்ந்தவர். பசியும் வந்துமூண்டது. ஆகவே, மிகவும் களைத்துப்போனார். இந்த நிலையில் காட்டில் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த இடையனைப் பார்த்தார். அவனையாகிலும் ஏதேனும் கேட்டுப் பசியை நீக்கிக்கொள்ள எண்ணினார். அவன் அருகே போனார். "தம்பி, பசி காதை அடைக்கிறது. கூழ் இருந்தால் கொஞ்சம் கொடுக்க முடியுமா?" என்று கேட்டார்.

இடையன் நல்லவன். கிழவி இருக்கும் இரக்கமான நிலையைப் பார்த்தான். தனக்கு வைத்திருந்த கூழை ஔவையார்க்குக் கொடுத்துவிடத் தீர்மானித்தான். உடனே ஔவையார் கையைப் பிடித்து மெல்ல ஒரு மரத்தின் நிழலில் உட்காரவைத்து, குடுவையில் இருந்த கூழை ஔவையாருக்குக் கொடுத்தான். காலமோ வெயில் காலம். கூழோ ஜில் என்று குளிர்ச்சியாக இருந்தது. ஔவையாருக்கும் வயிறு குளிர்ந்தது. முகத்தில் தெளிவு தோன்றியது. இந்தக் காட்டில் நடுப்பகலில் உணவு கொடுத்து உபசரித்த இடையனுக்குத் தாம் ஏதே

னும் நன்றி செலுத்தவேண்டும் அல்லவா ? ஆனல், புலவர்கள் எப்படித் தம் நன்றியைக் காட்டுவர். பாட்டுப் பாடித்தான் காட்டுவர். ஆகவே, அவனைப் பார்த்து, "உன்பேர் என்ன தம்பி?" என்று ஔவையார் கேட்டார். அவன் தன் பெயரை மறந்திருந்த தால் "அசதி" என்றனன். அவனது அறியாமைக்கு ஔவையார் இரக்கம்கொண்டு, தம் நன்றியைக் காட்ட அசதி என்பதையே பெயராகக் கொண்டு "அசதிக்கோவை" என்ற ஒரு நூலைப்பாடினர். பார்த்தீர்களா?கூழைக்கொடுத்து ஒருபெரு நூலையே தம்மீது பாடும் பேறு பெற்றதை!

பன்னும் அசதிநன்றி பாராட்டிக் கோவைநூல்
சொன்னளே ஔவைமுன்பு சோமேசா—மன்னுத்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

## பயிற்சி வினக்கள்

1. பெரியோர்கள் தமக்குப் பிறர் செய்யும் நன்றியை எவ்வாறு எண்ணுவர்?
2. ஔவையாரைப் பற்றி நீ அறிந்துள்ளவை எவை?
3. ஔவையார் இடையனை ஏன் கூழ் கேட்டார்?
4. இடையன் ஔவையாரை எப்படி உபசரித்தான்?
5. ஔவையார் நன்றி மறவாதவர் என்பது எப்படித் தெரிகிறது?

# 3. பெரியோரை இகழ்ந்து பேசுதல்கூடாது

நல்ல நடத்தை உடையவர்களே ஒழுக்க முடையவர்கள். அவர்கள் ஒழுக்கமுடையவர்கள் என்பதைத் தம் நடக்கையாலும் வாய் மொழியாலும் காட்டி வருவர். அவர்கள் தப்பித் தவறிக் கூடத் தீமையான சொற்களைச் சொல்லமாட்டார்கள். ஏன்? மறந்தும் கூடத் தம் வாயால் சொல்லமாட்டார்கள். சொல்லவும் வாய் வராது. சொல்லவும் முடியாது. ஆனால், ஒழுக்கமற்றவர் தீய சொற்களைக் கூறச் சிறிதும் அஞ்சமாட்டார். இதனைச் சிசுபாலன் நிகழ்ச்சியின் மூலமாக நிலை நிறுத்தலாம்.

பஞ்ச பாண்டவர் ஒரு யாகம் செய்தனர். அந்த யாகம் இராஜ சூய யாகம் என்று சொல்லப்படும். அப்போது எல்லாத் தகுதியும் உடையோர் முதல் பூசை பெறவேண்டும். "இந்த முதல் பூசை பெறுபவர், யார்"? என்ற கேள்வி எழுந்தது. அப்போது வேதவியாசர் எழுந்து, தருமராஜரைப் பார்த்து, "தருமா! முதல் பூசையினைக் கிருஷ்ணனுக்குச் செய்க" என்று கூறினார். இவ்வாறு வேதவியாசர் சொன்னதை இராஜசூய யாகத்திற்கு வந்த எல்லோரும் ஒப்புக் கொண்டனர். ஆனால், அங்கு வந்திருந்த சிசுபாலன் என்பவன் மட்டும் இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதித்திலன்; தான் சம்மதிக்கவில்லை என்பதற்குக் காரணமும் சொல்லத் தொடங்கிச் சபையோர்களைப் பார்த்து, "சபையோர்களே,

அரசர்கள் கூடி இருக்கும் இந்த இராச சபையில் காட்டில் ஆடுமாடுகளை மேய்க்கும் இடையர் குலத் தவரா முதற் பூசை பெறத்தக்கவர்? சூரிய குலத் தவர், சந்திரக் குலத்தவர், அக்கினிக் குலத்தவர் கள் இங்கு இல்லையா? இருக்கிறார்களே. இக் கிருஷ்ணன் தன் மாமனை கம்ஸனையே கொன் றவன். தனக்குப் பால் கொடுக்கவந்த பூதகியை அழித்தவன். இடையர் வீடுதோறும் சென்று வெண் ணெய் திருடி உண்டு வயிறு வளர்த்தவன். இதைக் கண்ட தாய் இவனுடைய குறும்புகளை அடக்க உர லோடு கட்டி வைக்க அதில் கட்டுண்டவன். கன்று காலிகளுக்குப்பின் காட்டில் திரிந்தவன். கன்றை யும், விளாமரத்தையும் ஒன்றாக அழித்தவன். காளிங்கன் என்னும் பாம்பின் முதுகில் நின்று ஆடி அதன் விஷம் ஒழிய ஒடுக்கினவன். கோபிகளுடைய துணிகளை எல்லாம் திருடிக் கொண்டு புன்னை மரத் தில் ஒளித்து வைத்தவன். சராசந்தனுக்குப் பயந்து வட மதுரையைக் கைவிட்டுக் கடலில் ஒரு தீவாகிய துவாரகா புரியில் ஒளிந்து வாழ்ந்தவன். தனக்கு முன்னே பிறந்த ஆறுபேரைக் கம்ஸனால் கொல்லும் நிலைக்கு வழி செய்தவன். இப்படிப்பட்டவனுக்கா இந்தப்பெரிய யாகத்தில் முதல் பூசை கொடுப்பது?" என்று வாய்க்கு வந்தபடி வசைமொழிகளை வாரி இறைத்தான். அந்தச் சமயத்தில் தன் வாயால் கிருஷ்ணன் எந்தவிதமான தீய சொற்களையும் சொல்லவில்லை. இதனால், ஒழுக்கமுடையவர்கள் தம் வாயால் தவறியும் தீய வார்த்தைகளைச் சொல்ல மாட்டார்கள் என்பது தெரிகிறதல்லவா?

தீயனவே சொல்லும் சிசுபாலன் முன்புகண்ணன்
தூயதலாச் சொல்உரையான் சோமேசா—ஆயின்
ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

## பயிற்சி வினாக்கள்

1. ஒழுக்கமுடையவர்களுக்கும் ஒழுக்கம் இல்லாத வர்க்கும் உள்ள வேறுபாடு யாது?
2. வேதவியாசர் எக் கேள்விக்குப் பதில் கூறினர்?
3. சிசுபாலன் எதனைச் சம்மதித்திலன்?
4. சிசுபாலன் கிருஷ்ணனை எவ்வெவ்வாறு இழித்துப் பேசினன்?
5. கிருஷ்ணன் பெருமை எதனால் தெரிகிறது?

# 4. ஆடம்பரம் அற்ற அறமே உண்மை அறம்

தருமம் என்பது ஆடம்பரமாகச் செய்யப் படுவது என்பது அன்று. பொருளை மிகுதியாகவாரி இறைத்துத் தம் புகழ் வெளிவருமாறு செய்வதும் அறம் அன்று. அத்தகைய தருமங்கள் ஆரவார மான தருமம் என்பது வள்ளுவர் கருத்து. ஆனால், "அவ் வள்ளுவர் எதைத்தான் தருமம் என்கிறார்." என்று நீங்கள் கேட்கலாம். அவர், 'மனத்தில் கள்ளம் கபடு இல்லாமல் இருப்பதே உண்மை அறம்; இதுவே நல்லறம்' என்று குறிப்பிடுகிறார். இந்த அறமே தெய்வத்திற்கும் ஏற்புடையதாகும். இவ்வாறு உண்மையன்புடன் அறம்செய்த ஒரு கிழவியின் செயலை இங்குப் பார்ப்பீர்களாக.

கான்ஸ்டாண்டி நோபில் என்னும் நகரில் சால மன் அரசர் ஆண்டவனைத் தொழுதற்கு ஆலயம் ஒன்று அமைக்க எண்ணினார். அதாவது அது வரை எவராலும் கட்டி முடித்திராத அளவுக் குப் பெரியதும், சிறந்ததும் ஆகிய மாதா கோவிலைக் கட்டத் திட்டம் போட்டார். "நான் இத்தகைய கோவிலைப் பிறர் உதவிபெறாமல் கட்டி முடிப்பேன். இக்கோவில் சிலாசாஸனத்திலும், 'என்னால் இது கட்டப்பட்டது.' என்ற வாக்கியம் திகழவேண்டும்" என்று முடிவு கட்டினார்.

ஆலயம் கட்டத் தொடங்கப்பட்டது. ஏழு வருடங்களாக வேலையாட்கள் வேலை செய்துவந்

தனர். வளைவுகளும், கோபுரங்களும் நல்லமுறையில் கட்டப்பட்டன. சுவர்களும், மேல் தளங்களும்,



தூண்களும், கண்களைப்பறிக்கும் நிலையில் அமைக்கப்பட்டன. இம்முறையில் ஆலயம் கட்டி முற்றுப் பெற்றது. சாலமன் எண்ணிய எண்ணம் நிறை

வேறியது குறித்து, கொண்டாட்டம் கொண்டாட நன்னாள் ஒன்று குறிப்பிடப்பட்டது. அந்த நாளில் பொதுமக்கள் ஆலயத்தில் திரள்திரளாகக் கூடினர். சாலமன் மன்னர் அக்கூட்டத்திற்கு இடையே கம்பீரத் தோற்றத்தோடு காட்சி அளித்தார். தாம் கட்டிய ஆலயத்தின் ஒவ்வொரு பாகத்தையும் பார்வையிட்டு வந்தனர். அவருக்குச் சலவைக் கல்லில், தாம்தான் இந்தக் கோவிலைக் கட்டினேம் என்பது எழுத்தால் எழுதப்பட்டுச் சுவரில் புதைக்கப்பட்டு இருக்கிறதா? என்பதைக் காணவேண்டும் என்பது முதல் ஆசை.

இந்த ஆசையோடு சலவைக்கல் புதைக்கப் பட்ட இடத்தைப் பார்வையிட்டபோது, அங்கு இக் கோவில் கிழவி ஒருத்தியினுல் கட்டப்பட்டது என் பது எழுதப்பட்டிருந்தது. இதைக் கண்ட சாலமன் சக்ரவர்த்திக்குக் கோபம் பொங்கி எழுந்தது. உடனே சிற்பியை அழைத்து, "என்னுல் கட்டப் பட்டது என்பதை எழுதாமல், கிழவி ஒருத்தியால் கட்டப்பட்டது, என்று எழுதியுள்ளாயே? உனக்கு என்ன தைரியம்?" என்று அதட்டிக் கேட்டனர்.

சிற்பி பயந்து போனுன். "அரசே, நான் உம் பெயரைத்தான் எழுதினேன். இவ்வாறு நான் எழுதவில்லை. எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது!" என்று பதில் கூறினுன்.

இந்தச் சமயத்தில் ஒரு மதபோதகர் அங்கு வந்து, "மன்னு, இந்தச் சிற்பி உம் பெயரை எழுதியதை நான் என் கண்ணுல் பார்த்தேன். ஆனுல்,

அதனை அழித்து வேறு யாரோ இப்படி எழுதி இருக்கின்றனர்.'' என்று கூறினர்.

சாலமன் அரசர், ''அப்படியா? அந்தக் கிழவி யாவள்? அவளை அழைத்து வருக'' என்று கட்டளை இட்டனர். அரசர் கட்டளை பெற்ற வேளையாட்கள் கிழவியைக் கொண்டு வந்து அரசன் முன்பு நிறுத்தினர். அக் கிழவி மிகவும் வயது முதிர்ந்தவளாய், கால் முடமாய், உடல் மெலிந்து, கிழிந்த ஆடையும் உடுத்தி இருந்தவளாய்க் காணப்பட்டாள்.

சாலமன் மன்னர் அக் கிழவியைப் பார்த்து, ''உனக்கு எங்கு இருந்து இந்தத் துணிவு வந்தது? என் கட்டளையை மீறி உன்னை யார் இக் கோவில் கட்ட காணிக்கை கொடுக்கக் கூறியவர்?'' என்று கேட்டனர்.

கிழவி அரசரைப் பார்த்து, ''நான் காணிக்கை ஒன்றும் கொடுக்கவில்லை; இக் கோவில் கட்டக் கற்களை ஏற்றிவந்த வண்டிகளில் பூட்டப்பட்ட எருதுகளுக்குக் கொஞ்சம் வைக்கோல் கொடுத்தேன். இதுதான் நான் கொடுத்த காணிக்கை.'' என்று கூறினள்.

அப்போதுதான் தற்பெருமையும் தன் மதிப்பும் கடவுள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்போலும்! குற்றமற்ற மனத்தோடு ஆடம்பரம் இல்லாமல் தருமம் செய்த கிழவி கடவுள் எண்ணத்திற்கு உரியவளானள் போலும் என்பதை சாலமன் உணர்ந்தார்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல், அனைத்துஅறன்
ஆகுலநீர பிற.

## பயிற்சி வினாக்கள்

1. எது உண்மை அறம்?
2. சாலமன் மன்னர் கொண்ட எண்ணம் என்ன?
3. கோயில் எம்முறையில் கட்டப்பட்டது?
4. சாலமன் மன்னருக்கு எப்போது கோபம் வந்தது?
5. சாலமன் மன்னர் எந்த உண்மையை எப்போது உணர்ந்தார்?

## 5. பொறுத்தவர் என்றும் புகழே பெறுவர்

பொறுமைக் குணம் ஒரு சிறந்த குணம். "பொறுத்தவர் நாடு ஆள்வார் ; பொங்கினவர் காடு ஆள்வார்" என்பதும் நம் நாட்டுப் பழமொழி. பிறர் நமக்குத் தீங்கு செய்யக்கூடும். அதன் பொருட்டு அவர்களை நாம் தண்டிக்க முயல்வோம். அப்படித் தண்டிப்பதால் நாம் அடையும் இன்பம், பல நாளைக்கு நிலைத்திருக்கும் இன்பமாக இருக்காது. அந்த ஒரு நாளில் மட்டும் 'நமக்குத் தீமை செய்தவரைத் தண்டித்துவிட்டோம்,' என்று எண்ணி இன்பம் அடைவோம். ஆனால், நமக்குத்தீமைசெய்தவரை நாம் தண்டனை ஒன்றும் செய்யாமல் பொறுத்து வந்தோமானால், உலகம் அழியும் வரைக்கும் புகழையே அடைவோம். இதைக் கீழ்வரும் நிகழ்ச்சியினால் அறிந்துகொள்ளலாம்.

நடுநாட்டைச் சேர்ந்த சேதி நன்னாட்டில் திருக்கோவலூரில் ஒரு மன்னர் வாழ்ந்து வந்தார். அவர் கடவுள் பக்தியில் சிறந்தவர். விபூதியினிடத்திலும், சிவனடியார்களிடத்திலும் நிரம்பிய அன்புடையவர். அவற்றை மெய்ப்பொருள் என்று எண்ணி வந்ததால், அவர் மெய்ப்பொருள் நாயனார் என்று கூறப்பட்டார். அவருக்கு மலாடர் கோமான் என்பதும் பெயர். அவர் நல்ல படைபலம் பெற்றவர். தாமும் போரில் நின்று பின்வாங்காது போரிடக்கூடியவர்.

மலாடர் கோமானுக்கு ஒரு பகைவன் இருந்தான். அவனது பெயர் முத்தநாதன் என்பது. அவனுக்கு மலாடர் கோமானரை வென்று அவருடைய நாடுநகரங்களை எல்லாம் தான் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்பது எண்ணம். அதற்காகப் பல முறை சேதிநாட்டு மன்னரோடு போரிட்டான். போர் செய்த ஒவ்வொரு முறையும் தோற்றுப்போனன். கடைசியில் சேதிநாட்டு மன்னரை வஞ்சனையால் வெல்ல எண்ணினன்.

முத்தநாதனுக்கு மலாடர் கோமானது சைவப் பற்று நன்ருகத் தெரியும். ஆகவே, சிவவேடம் பூண்டு அவரை அணுகித் தன் கருததை முடித்துக் கொள்ளத் திட்டமிட்டான். காவியுடை உடுத்திக் கொண்டான்; சடைமுடி தரித்துக்கொண்டான்; நெற்றியில் விபூதியினைப் பூசிக்கொண்டான்; கையில் ஒரு கவளிகையை எடுத்துக்கொண்டான்; அக் கவளிகை ஒரு புத்தகம் ஒன்று வைக்கப்பட்டு மூடப்பட்டு இருந்தாற்போல் காணப்பட்டது. ஆனல், அது புத்தகக்கவளி அன்று; அது ஒரு சிறு கத்தி ஒளித்துவைக்கப்பட்ட கட்டாகும். இந்த விதமான வேடத்தோடு மலாடர்கோமான் அரண்மனையை அடைந்தான் முத்தநாதன்.

முத்தநாதன் வாயிற்காவலர்களைக் கடந்து மன்னர் படுக்கை அறைக்குச் சென்றுவிட்டான். மலாடர் கோமான் சிவவேடதாரியைப் பார்த்ததும் நல்லவிதமாக வரவேற்று உபசரித்தார். " பெரியீர், என்னைத் தேடிவந்த கருத்து என்னவோ ?" என்று

வாய்மூடி, கைகட்டிக் கேட்டார். அந்தச் சமயம் முத்தநாதன், "மன்ன, இதுவரையில் வெளிவராத சிவ ஆகமம் ஒன்று எனக்குக் கிடைத்தது. அதனை உனக்கு உபதேசம் செய்ய வந்தேன்." என்று பதில் கூறினன்.

இவ்வாறு முத்தநாதன் சொன்னல் சைவ அன்புடைய மலாடர் கோமான் சும்மா இருப்பாரோ? மிகவும் சந்தோஷம் கொண்டு "குருமூர்த்தி! அந்த ஆகமத்தை உபதேசியுங்கள்" என்று தலை வணங்கிக் கேட்டார். இதுதான் சமயம் என்று எண்ணிய முத்தநாதன், உடனே புத்தகம் அவிழ்ப்பவன்போல் கட்டை அவிழ்த்தான்; கத்தியை எடுத்தான். நாயனரைக் குத்திவிட்டான்.

தத்தன் என்னும் வாயில் காவலன் இதனைக் கண்டு சகியாதவனய்த் தன் வாளினல் முத்தநாதனைக் கொல்லக் கையெடுத்தான். அந்தத் தருணம் மலாடர் கோமான், "தத்தா, இவரை ஒன்றும் செய்யாதே. இவர் நம்மவர்" என்று தடுத்தார். அரசனது ஆணையை மறுக்க அஞ்சித் தத்தன் வாளை உறையில் இட்டுக்கொண்டான். பிறகு அரசர் முத்தநாதனுக்கு வழியில் ஒரு தீங்கும் நேராதபடி தொலைதூரம் உயிருடன் சேருமாறு விட்டுவரும்படி சொன்னர். அவனும் அவ்வாறே செய்தான். மலாடர் கோமான் திருநீற்றையும் சிவவேடத்தையும் மெய்ப்பொருளாக எண்ணி வந்ததால் மெய்ப்பொருளார் என்றே அழைக்கப்பட்டார்; அழியாப் புகழையும் பெற்றர்.

ஒட்டலன்செய் திமைக்கு ஒருதுநமர் என்றுகூறைத்தார்
சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா—முட்ட
ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

## பயிற்சி வினாக்கள்

1. பொறுத்தவர் அடையும் பேறும், பொறுக்காதவர் பெறும் பேறும் எவை?
2. மலாடர் கோமானைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
3. முத்தநாதன் யாவன்?
4. அவன் எப்படி மலாடர் கோமானை வெல்ல ஏற்பாடு செய்தான்?
5. மலாடர் கோமான் பொறுமையாளர் என்பது எப்படித் தெரிகிறது?



## 6. இன் சொல் இருக்க வன்சொல் ஏன் ?

நாம் எப்போதும் இனிய சொற்களையே பேச வேண்டும். இனிய சொற்களைப் பேசுவதால் இனிமையே ஏற்படும். இதனை நாம் நம் வாழ்வில் நம் கண்முன் பார்க்கலாம். வன்மையான சொற்களைப் பேசவே கூடாது. இனிய சொற்கள் இனிமை தரும்போது ஏன் வன்சொற்களைப் பேசவேண்டும்?

இராமனைப்பற்றி உங்களுக்கு நன்ருகத் தெரியும். அவன் மிகவும் நல்லவன். தாய் தந்தையர் சொல்படி நடப்பவன். அவனை எல்லோரும் விரும்

புவர். ஏன் முனிவர்களும் விரும்புவர். ஒரு சமயம் விசுவாமித்திரர் அயோத்திக்கு வந்தார். தசரதமகாராசனைக் கண்டார். தசரதனை நோக்கி, "தசரதா, உன் மூத்த மகனுன இராமனை என்னோடு அனுப்பு" என்று கேட்டார். தசரதனுக்கு இராமனைச் சிறிதும் பிரிந்திருக்க முடியாது. என்றாலும், பெரியவர் அழைக்கிறார். என் செய்வான்? கடைசியில் தன் குலகுருவான வசிஷ்டர் அனுப்புமாறு கட்டளை இட்ட பிறகு, தசரதன் விசுவாமித்திரருடன் இராமனை அனுப்பினான். இராமனுடன் இலக்குமணனையும் அனுப்பினான்.

விசுவாமித்திரர் இராம இலக்குமணர்களை அழைத்துச் சென்று அவர்களுக்குச் சிறந்த வில்வித்தைகளைக் கற்பித்தார். அவர்களைக் கொண்டு தாடகை என்னும் இராட்சசியைக் கொல்வித்தார். பிறகு அவர்களை மிதிலாபுரிக்கு அழைத்துச் சென்றார்.

மிதிலையில் ஜனகமகாராஜன் அரசு செய்துவந்தான். அவனுடைய மகளே சீதை. அவன் ஒரு வில் வைத்து இருந்தான். "அதை யார் எடுத்து வளைக்கின்றார்களோ, அவர்கள் என் மகள் சீதையைக் கலியாணம் செய்து கொள்ளலாம்." என்று கூறியிருந்தான். பலரும் அவ் வில்லை வளைக்க முயன்றும் அவர்களால் முடியாமல் போயிற்று. இராமன் எழுந்தான்; வில்லை எடுத்தான்; வளைக்கத் தொடங்கினான். அது வளைப்பதற்கு முன் ஒடிந்துவிட்டது. என்றாலும், சீதை இராமனுக்கு மாலை இட்டாள். சீதை இராமனுக்கு மனைவியாயினாள். திருமணமும் சிறப்பாக நடந்தது.

இராமன் தன் மனையாளான சீதையை அழைத்துக்கொண்டு தன் உறவினருடன் வரும்போது, வழியில் பரசுராமர் தசரதராமனைச் சந்தித்தார். "அடே தசரத ராமா? நீ ஏதோ சிவ தனுசை ஒடித்துவிட்டோம்" என்று எண்ணுகிருய்! அது பழைய வில். செல்லரித்த வில். அதனுல்தான் நீ கையில் எடுத்து வளைக்கத் தொடங்கும்போதே அது முறிந்துவிட்டது. இதோ என் கையில் விஷ்ணு தனுசு இருக்கிறது. இதை வளை பார்க்கலாம். அப்போதுதான் உன் ஆண்மையை மெச்சுவேன். உன் தோள்வலியைச் சோதிக்க வந்தேன். என் தோளும் சிறிது தினவு கொண்டுள்ளது. இதற்காகவே இப்போது வந்தேன்" என்று கோபத்துடன் பரசுராமர் பேசினுர்.

தசரதராமன் பரசுராமர் பேசிய வார்த்தைகளைப் பொறுமையாகக் கேட்டான். பரசுராமரைப் போலப் படபட என்று பேசவில்லை. தசரதராமன் இனிய சொற்களையே பேசலானுன், "முனிவரே! நீர் இப்பூமியில்உள்ள அரசர்களை எல்லாம் அழித்துவிட்டீர் என்றுலும், நீர் ஜமதக்கினி முனிவரின் பிள்ளை. மேலும், தவவிரதத்தை மேற்கொண்டுள்ளீர். உம்மையே நீர் கொடுத்து வளைக்கச்சொன்ன வில்லுக்குப் பலியாக்க நான் எண்ணவில்லை. ஆகவே, இந்த விஷ்ணு தனுசை வளைத்து அம்பு செலுத்துவதற்கு இலக்குக் கூறுக" என்று இனிமையுடன் கேட்டனன். இப்படியல்லவோ இன்சொல் கூற வேண்டும்?

இன்சொல் இராமன் இயம்ப இரேணுகைசேய்
துன்பமொழி யேபுகன்ருன் சோமேசா—அன்புடைய
இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

## பயிற்சி விஞக்கள்

1. நாம் எவ்வாறு பேசுதல் வேண்டும்? ஏன்?
2. இராமனை ஏன் விஸ்வாமித்திரர் அழைத்துச சென்ருர்.
3. ஜனகமகாராஜனைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
4. பரசுராமர் இராமனை நோக்கி என்ன கூறினுர்?
5. இராமன் எம்முறையில் பேசினுன்?

## 7. கேள்வி ஞானமும் சிறந்த ஞானம்

மக்கள் வேறு, மிருகங்கள் வேறு என்பதை எப்படி அறியலாம். படித்தவர்களைத்தான் மக்கள் என்றுகூற வேண்டும்; படிக்காதவர்களை மிருகங்கள் என்று கூறவேண்டும். ஆகவே, மக்களாகப் பிறந்தவர் படித்து அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். படிக்க வசதி இல்லாதவர், படித்தவர்கள் சொல்வதையேனும் நன்ருகக் கேட்டுவரவேண்டும். அப்படிக் கேட்பதனுலும், அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். இந்தக் கேள்வி அறிவு மனச்சோர்வு ஏற்பட்டபோது, வழுக்கி விழுங்காலத்தில் எப்படி ஊன்றுகோல் உதவுகிறதோ, அதுபோல் கேள்வி அறிவு உதவி செய்யும். அதற்கு உதாரணமாக ஒரு பழங்காலத்து வரலாற்றைப் பாருங்கள்.

இந்தியாவில் பொத்தப்பிநாடு என்பது ஒன்று. அந்நாட்டின் தலைநகர் உடுப்பி என்பது. அந்நாட்டின் அரசன் நாகன் என்பவன், இவன் வேடர்குலத்தைச் சேர்ந்தவன். இவன் மனைவி தத்தை என்பவள். இவ்விருவருக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை நல் உடலுடன் வன்மையாக இருந்ததால், திண்ணன் என்று பெயரிட்டு இன்பமாக வளர்த்து வந்தனர்.

திண்ணன் நன்கு வளர்ந்து வேட்டையாடும் வயதும் பெற்றனன். நல்ல நாளில் தன் தோழர்களான காடன், நாணன் என்பவருடன் காட்டிற்குக்

கன்னி வேட்டையாடச் சென்றன். முதல் முதல் ஆடும் வேட்டை கன்னிவேட்டை என்று சொல்லப் படும். திண்ணன் காட்டில் வேட்டையாடிப் பல மிருகங்களைக் கொன்றன். கடைசியில் ஒரு பன்றி திண்ணனுக்குப் பெருந்தொந்தரவு கொடுத்தது. அதனை விடாது தொடர்ந்து அதையும் கொன்ற னன். கொன்ற பன்றியைச் சமைத்து உண்பதற் காகப் பக்குவப்படுத்தச் சொல்லித் தம் கண்ணுக்கு எதிரே தோன்றும் காளத்தி மலைமேல் கடவுளைக் காண நாணனும் திண்ணனும் சென்றனர்.

நாணன் மலைமேல் சிவலிங்கம் இருக்கக்கண்டு, அதனை விட்டுவர மனம் இல்லாமல், தனியே காட் டில் சிவபெருமான் இருக்கிறரே, என்று இரக்கங் கொண்டு அவருக்கு உணவு கொடுக்கவும் எண்ணி ஞன். சிவலிங்கத்தின் மீது மலரும், நீரும் இருப் பதைப்பார்த்து, "இவை ஏன் இருக்கின்றன? என்று கேட்டான். நாணன் "திண்ணு! சிவ கோசரியார் என்னும் அர்ச்சகர் இந்த லிங்கத்தை நீராட்டி மலர் இட்டுப் பூசைபண்ணுகிறர்." என்று சொல்லி ஞன். தானும் அவ்வாறே செய்ய எண்ணிக் காடன் பக்குவம் செய்த பன்றி மாமிசத்தில் சதையான பாகங்களை எடுத்துக்கொண்டான். அதனைத் தேனில் தோய்த்து வைத்துக்கொண்டான். வாயில் நீரும், தலையில் மலர்களையும் கொண்டுவந்தான். செருப்புக் காலால் சிவன் முடியில் இருந்த மலர்களைத் தள்ளினன். வாயில் நீரைச் சிவலிங்கத்தின் தலை யில் உமிழ்ந்தான். தலையில் இருந்த மலர்களைக் கொட்டினன். மாமிசத்தையும் அன்புடன் ஊட்

டினுன். இரவில் மிருகங்களால் சிவலிங்கத்திற்குத் தீங்கு வராமல்படி காத்துவந்தான்.

சிவ கோசரியார், 'கோவிலில் ஏதோ அசுத்த மாகக் காரியம் நடக்கிறது. இதனை நடத்த ஒட்டா மல்படி பார்த்துக்கொள்ள வேண்டு'மென்று எண்ணி இறைவனிடம் முறையிட்டார். காளத்தியப்பர் சிவ கோசரியார் கனவில் சென்று " அசுத்தம் செய்பவன் எவனோ என்று எண்ணுதே. அவன் என்னிடம் கொண்ட அன்பினை அளவிட்டுக் கூறமுடியாது. அதனை நாளை ஒளிந்து நின்று பார்" என்றனர். சிவ கோசரியார் மறுநாள் ஒரு மரத்தின் பின்புறம் மறைந்து கொண்டிருந்தார்.

திண்ணன் உணவு கொணர வெளியே போய் மீண்டபோது, சிவலிங்கத்தின் கண் ஒன்றில் இரத்தம் ஒழுகக்கண்டான். " ஐயோ, நாம் இல்லாத போது, ஏதோ தீங்கு இறையவர்க்கு நேர்ந்தது" என்று எண்ணி வருந்திக் காட்டில் உள்ள மூலிகை களைப் பலவற்றையும் பிழிந்து இரத்தத்தை நிறுத் தப்பார்த்தான். இரத்தம் நிற்கவில்லை. கடைசியில் அவனுக்கு, "ஊனுக்கு ஊன் இடல் உசிதம்" என்று கேள்விப்பட்ட பழமொழி நினைவு வந்தது. உடனே, " கண்ணுக்குக் கண்ணை வைப்போம்" என்று தன் கண்ணைப் பிடுங்கி இறைவர் கண்ணில் அப்பினுன். இரத்தம் நின்றது. திண்ணன் அடைந்த சந்தோ ஷத்திற்கு அளவே இல்லை. மற்ரெரு கண்ணில் இரத்தம் வர, அது கண்டு பயந்திலன். மற்ரெரு கண்ணையும் பிடுங்கி வைக்கத் தீர்மானித்துப் பிடுங் கும்போது, கடவுள் தடுத்துவிட்டார். திண்ணன்

கடவுளுக்குக் கண்ணைக் கொடுத்ததால் கண்ணப்ப ராஞர்.

ஊனுக்குஊன் என்னும் உரைகண்டு உவந்தனரே
தூநல்சீர்க் கண்ணப்பர் சோமேசா—ஆனதனுல்
கற்றிலன் ஆயினும் கேட்க அஃது ஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்ரும் துணை.

## பயிற்சி விஞக்கள்

1. மக்கள் எப்போது மக்களாக எண்ணப்படுவார்?
2. திண்ணன் எங்கு யாருக்குத் திருமகஞகப் பிறந்தான்?
3. திண்ணன் மலை மீது கண்டவை எவை?
4. திண்ணன் எங்கனம் சிவ லிங்கத்தைப் பூசனை செய்து வந்தான்.
5. திண்ணன் எதனுல் கண்ணப்பர் ஆஞன்?

## 8. விடாமுயற்சி வெற்றிக்கு வழி

ஔவைப் பிராட்டியார் நமக்காகச் சொன்ன நீதிமொழிகள் பல. அவற்றுள் ஒன்று, "ஊக்கமது கைவிடேல்." என்பது. இதன் அர்த்தம் யாது? முயற்சியைக் கைவிடாதே என்பதுதானே? ஏன்? இப்படி, "ஊக்கமது கைவிடேல்" என்று ஔவை யார் கூறினார்? ஊக்கத்தைக் கைவிடாமல் இருந் தால் அவ்வூக்கம் நமக்கு மேல்மேலும் செல்வத்தை உண்டுபண்ணும். ஊக்கம் இல்லாமல் சோம்பேறி களாக இருந்தால் தரித்திரம்தான் ஏற்படும். சோம்பல் தரித்திரத்தில்தான் கொண்டுபோய்விடும். முயற்சியே வெற்றிக்கு வழி காட்டுவது. இதோ பாருங்கள்!

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் கூற்றுவநாயனார் என்பவர். அவர் களந்தை என்னும் ஊரின் தலைவராக இருந்தார். ஆகவே, அவர் ஒரு குறுநில மன்னர். அவர் களந்தைப் பதிக்கு மட்டும் தலைவராக இருக்க விரும்பவில்லை. பல நாடு நகரங் களையும் வென்று அவற்றைத் தம் ஆட்சியின்கீழ் அமைக்க விரும்பினார். ஒன்றைப்பெற விரும்புகிறவர் ஊக்கமுடையவராயும் மனோபலம் உள்ளவராயும் இருந்தால், எண்ணியபடி தடையில்லாமல் பெறு வர். அந்த முறைப்படி கூற்றுவநாயனார் தமது நால்வகைச் சேனைகளான தேர்ப்படை, யானைப் படை, குதிரைப்படை, காலாட்படைகளைக் கொண்டு பல நாடு நகரங்களை வென்றார். தம் நாட்டுடன்

சேர்த்தார். ஆனால், அவருக்கு ஒரு குறைமட்டும் இருந்தது. அதாவது தாம் சிற்றரசராக இருப்பதால், அதாவது குறுநில மன்னராக இருப்பதால், தாம் நாடு, நகரங்களையும், சதுரங்க சேனைகளையும் பெற்றிருந்தும் முடியுடைய மூவேந்தர்களான சேர சோழ, பாண்டியர்களைப் போலப் பரம்பரையான அரச முடியைப் பெற்றிருக்கவில்லையே என்ற குறைபாடேயாகும். அதற்காகத் தாம் தக்க பெரியவர்களால் முடிசூட்டப்பட்டுவிட்டால், தமக்குப் பின்னால் வருபவர்க்கு அது பரம்பரை உரிமை யுடையதாகி விடும் என்று யோசித்து, சிதம்பரத்தில் இருந்த அந்தணர்களிடம் தமக்கு முடிசூட்டும்படி வேண்டினார்.

தில்லைவாழ் அந்தணர்கள் ஒரு கொள்கை வைத்திருந்தனர். அதாவது சோழ மன்னர்களுக்குத்தான் தாம் முடிசூட்டுவது என்றும், மற்றவர்களுக்குச் சூட்டுவது இல்லை என்றும் கொண்டிருந்த கொள்கையாகும். அதன்படி கூற்றுவ நாயனார்க்கு முடிசூட்ட மறுத்தனர். தில்லைவாழ் அந்தணர் இப்படிச் சொன்னதும் அதன்பொருட்டுச் சிறிதும் மனம் சோர்ந்திலர் கூற்றுவ நாயனார். அவர் விடாமுயற்சி வெற்றிக்கு வழி என்பதை நன்கு அறிந்தவர். ஆதலின், சிதம்பர நடராஜப் பெருமானையே வேண்டி, அவர் கூறும் ஆணைப்படி நடப்போம் என்று தீர்மானித்து, நடராஜப் பெருமானிடம் வேண்டிக் கொண்டார். நடராஜப் பெருமான் அவர் கனவில் தோன்றி " அன்பனே ! உனக்குச் சாதாரண மன்னர் முடி, முடியாக அமைய வேண்டா. என் திருவடியே

உன் சிரசுக்கு ஏற்றமுடி. அதனைச்சூடி அரசு செய்க'' என்று ஆணையிட்டார். நாயனாரும் மனம் மிக மகிழ்ந்தார். தம் எண்ணம் மிக மிக நல்ல முறையில் நடந்தேறியது என்று மகிழ்ந்தார். நடராஜப் பெருமான் திருவடிகளையே முடியாகத் தாங்கினார். முடியுடைய மன்னராய் விளங்கினார். திருவடியாகிய முடியினைச் சூட்டிக்கொண்டு தாம் வென்ற நாடு நகரங்களுக்கு எல்லாம் மன்னராய் அரசு செய்து வந்தார். இந் நாயனார் எண்ணியவற்றை எப்படிப் பெற்றார்? இடைவிடா முயற்சியால் அல்லவா? ஆகவே, நாமும் முயன்று வெற்றியைப் பெற வேண்டும்.

கூற்றுவர் மூவேந்தர் நிலமும்கைக் கொண்டாரே
தோற்றும்தா ளாண்மையினால் சோமேசா—சாற்றும்
முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

## பயிற்சி வினாக்கள்

1. ஔவையார் ஊக்கத்தைப் பற்றி என்ன உரைத்துள்ளார்? அதன் பொருள் யாது?
2. ஊக்கத்தாலும் சோம்பலாலும் முறையே என்ன கிடைக்கும்?
3. கூற்றுவ நாயனார் யாவர்? அவரைப் பற்றி அறிந்தவை யாவை?
4. அவர் கொண்ட துயரம் யாது?
5. அவர் துயரம் யாரால் எப்படித் தீர்ந்தது?



## 9. அழுதுபுரண்டாலும் மாண்டார் மீளார்

உடம்பு ஒரு பறவையின் முட்டை போன்றது. உயிர் அம் முட்டையினுள் இருக்கும் பறவைக் குஞ்சு போன்றது. இவ்வுயிராகிய பறவைக்குஞ்சு தன் உடம்பாகிய முட்டையைத் தனியே போட்டு விட்டுப் போய்விடும்; இம் முட்டை தான் இருப்பதற்கு இருப்பிடமாய் இருந்ததே என்று கூட எண்ணுது. இதனுல் நாம் அறிவது யாது? உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்பு நீடித்திருக்காது. அது திடீர் என்று நீங்கிப் போகும் என்பதல்லவா? அப்படி நீங்கிய போது நாம் வருந்துவதில் பலனில்லே. இறப்பு என்பது எந்த வயதிலோ எந்த நேரத்திலோ வரும் என்பதையும் எண்ணிக்கொள்ள

வேண்டும். முட்டையைப் போட்டுவிட்டுப் போன பறவைக்குஞ்சு மீண்டும் அதே முட்டையினுள் வந்து சேராததுபோல, முன்னிருந்த உடலைவிட்டுப் போன உயிர் மீண்டும் அதே உடலில் வந்து புகாது என்பதையும் அறிதல்வேண்டும். இந்த உண்மை யினை அறியாத ஒரு மாது தன் குழந்தை இறந் தமைக்காக வருந்தி, அதன் உயிரை மீண்டும் பெற அலைந்ததைப்பற்றி நீங்கள் அறிந்து கொள்வீர் களாக.

கௌதமி என்பவள் ஒரு நல்ல மாது. அவளுக்குக் கடவுள் அருளால் ஓர் அருமையான குழந்தை பிறந்தது. ஐயோ! அக்குழந்தை நீண்ட ஆயுளைப் பெருமல் இறந்து போயிற்று. நீண்ட நாள் பிள்ளை இல்லாமல் பெற்ற குழந்தை நீடித்திருக்கா மல் இறந்து போனதைக் குறித்து, "கோ" என்று அழுதாள் கௌதமி. அழுது என்ன பயன்? ஆண் டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? வரார் அல்லவா ? இந்த உண்மையை அவள் அறிந்து கொள்ளவில்லை. தன் குழந்தை எப்படியும் உயிர் பெற்று எழ வேண்டும் என்று எண்ணிப் புத்தர் பெருமானிடம் சென்ருள்.

புத்தர் கௌதமியைப் பார்த்து "மாதே ஏன் என்னிடம் வந்தாய்?" என்று கேட்டார். உடனே கௌதமி, "ஐயா நான் நீண்ட நாள் பிள்ளைப்பேறு இல்லாமல் சமீபத்தில்தான் பிள்ளையைப் பெற்றேன். ஆனுல், அப்பிள்ளை உயிருடன் இருந்து என்கவலை தீர்க்க இராமல், இறந்து போயிற்று. உம்மிடம் சாவைப்போக்கும் மருந்திருப்பதாகக் கேள்விப்

பட்டேன். ஆகவே, அம்மருந்து கொடுத்து எம் மகவை எழுப்புக" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டனள்.

புத்தர் பெருமான் கௌதமியின் வார்த்தைகளைக் கேட்டுச் சிரித்துத் தம் முள்ளத்தில் அவளது அறியாமைக்கு இறங்கி அவளுக்கு நல்ல முறையில், 'இறப்பு என்பது உலகில் இயற்கை' என்பதை அறிவிக்க எண்ணங் கொண்டார். இப்படி எண்ணியவர், கௌதமியை நோக்கி, "அம்மா! நீ சென்று யாரும் இறக்காத வீட்டிலிருந்து கடுகு கொண்டுவா. அதன்பின் உன் பிள்ளையை எழுப்புகிறேன்." என்றனர்.

கௌதமி மிகவும் சந்தோஷத்துடன் அதுவரை எவரும் இறவாத வீட்டிலிருந்து கடுகு கொண்டு வரப் புறப்பட்டாள். கௌதமி ஒவ்வொரு வீடு தோறும் சென்று "ஐயா இவ்வீட்டில் இதுவரை எவராகிலும் இறவாது இருக்கின்றனரா! அம்மா இந்த வீட்டில் யாராகிலும் இதுவரை இறவாமல் இருக்கின்றனரா?" என்று கேட்டுக் கொண்டே போனாள். இவள் பல வீடுகளை விசாரித்தும் இறவாதவர் வீடு எதுவும் கிடைக்கவில்லை. அவள் கேட்ட ஒவ்வொரு வீட்டாரும், இவளைப் பார்த்து, "பைத்தியக்காரி! உலகில் இறவாதவர் யார் இருக்கின்றனர்? போ, போ" என்று கூறி அனுப்பி விட்டனர்.

கௌதமி மிகவும் வருத்தத்துடன் புத்த பிரானை அடைந்து, தான் கேட்ட எந்த வீட்டிலும் இறவாதவர் இல்லை என்றும், அதனால் கடுகு கொண்டுவர

இயலவில்லை என்றும் கூறினள். உடனே புத்தபிரான் அவளை நோக்கி, "அம்மணி! இப்போதாகிலும் உணர்ந்துகொள். இறப்பது உலக இயற்கை. அந்த இயற்கைப்படி உன் குழந்தை இறந்தது. உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு பறவைக்கும் அதன் முட்டைக்கும் உள்ள தொடர்பு போன்றது. முட்டையைப் போட்டுவிட்டுப் பறவை பறந்து போவது போன்று உயிர் உடலை விட்டுப் போய்விடும்" என்று கூறி அவளை அனுப்பினர்.

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு.

## பயிற்சி வினாக்கள்

1. நம் உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை எதனோடு ஒப்பிடலாம்?
2. கௌதமி என்பவள் யாவள்? அவள் கொண்ட துன்பம் எது?
3. அவள் ஏன் புத்தரை அணுகினாள்? அப்போது அவர் என்ன கூறினார்?
4. கௌதமி வீடுகள் தோறும் சென்று எந்த உண்மையினை அறிந்து கொண்டாள்?
5. புத்தர் கௌதமிக்கு உரைத்த உபதேசம் யாது?

## 10. ஆராய்ந்து நடத்தும் அரசே அரசு

பிள்ளைகளுக்குத் தெய்வம் தாய் தந்தையர். சிஷ்யனுக்குத் தெய்வம் குரு. மனைவிக்குத் தெய்வம் அவளுடைய புருஷன். ஆனால், எல்லா உயிர்களுக்கும் தெய்வம் அரசன். ஆகவே, அரசன் குடிமக்களுக்குச் செய்யவேண்டிய கடமை அதிகம். அவன் யார் யாருக்கு எது நடக்கிறது? என்பதை எப்போதும் அறிந்து வருபவனாக இருக்கவேண்டும். இது அவனுக்கு இருக்கும் பலவிதமான தொழில்களில் ஒன்றாகும். அப்படி அறிந்துகொள்ளும்போது வெகு சாமர்த்தியமாக அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு அறிந்து அரசு புரிந்த மன்னன் ஒருவனைப்பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள்.

பாண்டிய நாட்டில் அனந்தகுண பாண்டியன் அரசு செய்துவந்தான். அவன் காலத்தில் திருப்புத்தூரில் இருந்த ஒரு பிராமணன் தன் மனையாளையும் கைக் குழந்தையையும் அழைத்துக்கொண்டு, தன் மாமனார் வீட்டில் சில நாள் தங்கி இருக்கப் புறப்பட்டான். இவர்கள் இடைவழியில் ஒரு பெரிய ஆலமரத்தடியில் சிறிது களைப்பாறத் தங்கினர். பிராம்மணனுடைய மனைவிக்குத் தண்ணீர் தாகம் இருந்ததால் தண்ணீர் கொண்டுவரப் பிராம்மணன் சென்றான்.

விதியின் காரணமாக ஆலமரத்தில் பொத்திக் கொண்டிருந்த ஓர் அம்பு காற்றினால் அசைந்து கீழே விழும்போது, பிராம்மணன் மனைவியின் மார்பில் நேரே விழவே அவள் இறந்தாள். தண்ணீர் கொண்டுவரச் சென்ற பிராம்மணன் திரும்பிவந்து

பார்க்கும்போது மனைவி இறந்துகிடப்பதைக் கண்டான். அவன் யார் நம் மனைவியைக் கொன்றவர் என்று சுற்றிச்சுற்றிப் பார்க்கும்போது, ஒரு வேடன் வெயிலுக்குப் பயந்து அந்த ஆலமரத்தின் ஒரு பக்கம் நின்றுகொண்டிருந்ததைக் கண்டான். உடனே பிராமணன் இவன்தான் தன் மனைவியைக் கொன்றவன் என்று தீர்மானித்து அவனைப் பாண்டியனிடம் இழுத்துக்கொண்டுபோய் நடந்தவற்றைச் சொன்னான். வேடன் தான் கொல்லவில்லை என்றும், வெயிலுக்கு மர நிழலில் ஒதுங்கியதாகவும் கூறினான். என்றாலும், உண்மை ஒன்றும் வெளிவரவில்லை. மன்னன் வேடனைச் சிறையில் அடைப்பித்தனன்.

அரசர்கள் எங்கு எது நடக்கிறது என்பதை அறியவேண்டியது கடமை ஆதலின், இதைப்பற்றி எப்படி அறிவது என்று யோசித்துக் கடைசியில் மதுரைச் சொக்கலிங்கப் பெருமானிடம் வேண்டிக் கொண்டான். சொக்கலிங்கப் பெருமான் 'மன்னா! கவலைப்படாதே, நாளைக்கு உன்நாட்டில் வணிகர் தெருவில் ஒரு கலியாணம் நடக்கும். அங்கு நீயும் பிராம்மணனுமாக உருமறைந்து செல்லுங்கள். உண்மை தெரிந்துவிடும்' என்று அசரீரியாகச் சொன்னார்.

அனந்தகுண பாண்டியன் அப்படியே பிராம்மணனுடன் திருமணத்திற்குப் போனான். அங்கு இரண்டு இயம தூதரும் கலியாணத்திற்கு வந்தவர்போல் வந்திருந்தனர். அவர்களுள் ஒருவன், "நண்பா, நம் எமதருமர் இந்தக் கலியாண மாப்பிள்ளையின் உயிரைக் கொண்டு வரும்படி

சொல்லி இருக்கிறார். இவன் உயிரை எப்படிப் பிரிப்பது?'' என்று கேட்டான். அதற்கு மற்றவன், "அடே பயித்தியமே! நமக்கு இது முடியாத காரியமா? எப்போதோ ஆலமரத்தில் பொத்திக் கொண்டிருந்த அம்பைக் காற்றால் அசைத்துப் பிராம்மணனுடைய மனைவியின் மார்பில் பாயு மாறு செய்து அவள் உயிரைப் பிரிக்கவில்லையா? அதுபோலக் காளைமாட்டை விரட்டி விட்டு, அது நேரே மணமகனைக் குத்தும்படி செய்து இவனைக் கொன்றுவிடுவோம்'' என்றனன். இயம தூதர் அப்படியே காளைமாட்டை மருண்டு வருமாறு செய்தனர். குத்துமாறும் செய்தனர். மணமகனைப் பிணமாக்கினர். இந்நிகழ்ச்சிகள் யாவற்றையும் நேராகக் கேட்ட, கண்ட அரசனும் பிராம்மணனும் வேடன் மீதும் தவறில்லை என்பதை உணர்ந்து அவனை விடுதலை செய்தனர். அரசன் சும்மா இல் லாமல் எல்லாவற்றையும் தீர ஆராய்ந்து அறிந்த தனால் அல்லவா உண்மை உணர்ந்தான்.

வேதன் இல்லாள் வீந்துஇற மீனவற்கு நீதெரித்தாய்
சோதி பழி அஞ்சும் சோமேசா—பூதலத்தின்
எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்அறிதல் வேந்தன் தொழில்.

## பயிற்சி வினாக்கள்

1. யார் யாருக்கு யாவர் தெய்வம்?
2. பிராமணன் ஏன் வேடனை அரசனிடம் அழைத்துச் சென்றான்?
3. வேடன் ஏன் சிறைப்பட்டான்?
4. அசரீரியாக அரசன் கேட்டவை யாவை?
5. மணமகன் எப்படிப் பிணமானான்?



## 11. அன்புடையார் அருமைக் குணம்

அன்பு என்பது ஓர் அருங்குணம். ஆனால், அவ் வன்பைத் தன்னைச் சார்ந்தவர்களிடத்தில் காட்டு கின்றவர்கள் பலராக இருந்தாலும், பிறரிடத்திலும் பிற உயிர்களிடத்தும் இவ்வன்பைக் காட்டுகின்ற வர்களும் உண்டு. அவ்வன்பு என்னும் அருங்குணம் உடையார் தன் உயிரையும் உடலையும் கூடப் பிறருக் குக் கொடுத்துவிடுவர். இந்த அன்பைப் பெறாத வர்கள் எல்லாவற்றையும் தாமே அனுபவிக்க வேண்டுமென்ற காரணத்தால் இம்மி அளவு கூடப் பிறருக்குக் கொடுக்கமாட்டார். இங்குத் தந்தையார் தம் மகனிடத்தில் தன் நாட்டின் நன்மை காரண மாகக் காட்டிய அன்பைப்பற்றி அறிவோமாக.

வட தேசத்தைப் பாபர் என்னும் முஸ்லிம் இனத்தைச் சார்ந்த மன்னர் அரசுபுரிந்து வந்தார். இவர் வீர முடையவர். இதன் காரணமாகப் பல நாடுகளை வென்று அரசு செலுத்தியவர். தம் குடிகளுக்குத் துன்பம் வராதபடி அரசு செய்தவர். கடவுளிடத்தில் பக்தி பொருந்தியவர். அத்தகைய நற் குணம் பெற்ற பாபர் அரசருக்கு ஆண்டவன் அருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையை அன்புடன் வளர்த்து வந்தார்.

பாபரின் குழந்தையே ஹுமாயூன் என்பது. ஹுமாயூன் நன்கு வளர்ந்துகாளைப் பருவம் எய்தினன். இளமைமுதல், அறிவு அமையப்பெற்று, கற்க வேண்டிய கல்விமுறைகளைக் கற்றுத் தேர்ந்தனன். என்றாலும், கூடத்தகாத நண்பர்களுடன் சேர்ந்து குடி, சூது முதலிய தீய பழக்கங்களில் ஈடுபட்டான். இவ்வாறு தம் மகன், அதுவும் தமக்குப் பின்னல் அரசு புரியவேண்டிய மகன், தீயவர்களுடன் கூடிக் கெட்டொழிந்தானே என்று மிகவும் வருந்தினர் பாபர் மன்னர்; தம் மகனுடைய இழிசெயல்களுக்காக அவனை வெறுக்கவும் தொடங்கினர்.

இவ்வாறு மகனும் தந்தையாரும் வெறுப்புடன் வாழும் நாளில், ஹுமாயூனுக்கு நோய் வந்தது. அந்நோயை நீக்க வைத்தியர்கள் மருந்துகளைத் தந்தனர். எப்படிப்பட்ட உயர்ந்த மருந்துகள் கொடுத்தும் நோய் நீங்கவில்லை. தந்தையாருடைய வெறுப்பு நீங்கித் தம் மகன்படும் நோய்கண்டு தாமும் வருந்தினர். பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம், கல்லுதானே? வைத்தியர்களும் கைவிட்ட

னர். அவர்கள் "ஹுமாயூன் இந்நோயாயிலிருந்து தப்ப முடியாது." என்று சொல்லிவிட்டனர். பாபர் இந்த வார்த்தைகளைக் கேட்டு மிகவும் வருந்தினர். தாம் உயிருடன் இருப்பதைவிடத் தம்மகன் உயிருடன் வாழ்ந்தால் தமக்குப் பிறகு தம் சந்ததி அரசு புரியவில்லை என்ற அபவாதம் இல்லாமல், தம்மகன் சிங்காதனம் ஏறி அரசுசெய்யக்கூடும் என்று எண்ணினர். உடனே தாம் வணங்கும் ஆண்டவனை நோக்கி, "என் மகன் படும் நோய் என்னைப் பற்றட்டும். என் மகன் நோயில்லாமல் சுகமாக இருக்கட்டும்" என்று பிரார்த்தனை செய்து, தம்மகன் படுத்திருந்த கட்டிலை ஒருமுறை சுற்றிவந்தனர். அவ்வளவுதான் ஹுமாயூனைப்பற்றியிருந்த நோய் பாபர் சக்கரவர்த்தியைப் பற்றியது. அவர் அந்நோயால் வருந்தினர். ஹுமாயூன் நோய் நீங்கிச் சுகமுற்றான். இவ்வாறு ஹுமாயூன் சுகமுற்றதனால் தன் தந்தைக்குப் பிறகு அரசை ஏற்றான்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

## பயிற்சி வினாக்கள்

1. அன்புடையார்க்கும் அன்பிலார்க்கும் உள்ள வேறுபாடு யாது?
2. பாபர் யாவர்? அவரைப்பற்றி அறிந்ததை எழுது.
8. பாபர் ஏன் தம்மகன்மீது சில காலம் வெறுப்புக் கொண்டிருந்தார்?
4. ஹுமாயூனுக்கு நேர்ந்த துன்பம் யாது?
5. ஹுமாயூன் எப்படிப் பிழைத்தான்?

## 12. பேசும் முன்பு நன்கு ஆராய்ந்து பேசு

உலகில் "பேசப் புகுந்தனையோ சாகப் புகுந்தனையோ" என்று ஒரு பழமொழி வழங்கிவருகிறது. இதன் அர்த்தம் யாது? பேசுவது என்றால் மிகவும் ஜாக்ரதையாகப் பேசவேண்டும். அப்படிப் பேசாமல் போனால், உனக்கு நீயே அழிவைத் தேடிக்கொள்பவன் ஆவாய் என்பது. பேச்சுத்தான் ஒருவனுக்கு உயர்வையும் தாழ்வையும் கொடுக்கவல்லது. பேச்சில் விழிப்பாக இருந்து நாம் பேசும் சொற்களில் சோர்வு வராதபடி பார்த்துக் கவனித்துப் பேசவேண்டும். அதாவது சொல் குற்றமோ பொருள் குற்றமோ தோன்றாமல் பேசவேண்டும். இப்படிப் பேசாததனால்தான் கும்பகர்ணன் நல்வாழ்வு பெறுவதை விட்டுச் சோம்பல் வாழ்வாகிய உறக்கத்தையே மேற்கொள்ள நேர்ந்தது. அவனைப்பற்றிச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

இலங்காபுரியின் இருப்பிடம் ஒரு காலத்தில் இராட்சதர்களுக்கு இருப்பிடமாக இருந்தது. அதற்கு அரசனாக இருந்தவன் இராவணன் என்பவன். அவன் பத்துத்தலைகளும் இருபது கைகளும் உடையவனாய் இருந்தான். அவனுக்குத் தம்பிமார் இருவர். அவர்களுள் ஒருவன் பெயர் கும்பகர்ணன் என்பது. மற்றொருவன் பெயர் விபீஷணன் என்பது.

இந்த மூவர்களும் தெய்வங்களை நோக்கித் தவம் செய்தனர். அவர்கள் தவம் செய்ததனுடைய

நோக்கம், பல வரங்களைப் பெற்றுச் சுகமாக வாழ்வதற்காக என்க.

இராவணன் தவம் செய்தான். அவனது தவத்தைக் கண்டு பிரம்மதேவர் அவன்முன் வந்து நின்றார். அப்படி நின்ற பிரம்மதேவரைப் பார்த்து, "சுவாமி நான் சாகாமல் இந்த உலகில் வாழ வேண்டும். எனக்குத் தேவர்களால் சாவு ஏற்படக் கூடாது. மிருகங்களால் இறப்பு ஏற்படக்கூடாது. காற்று, நெருப்பு, நீர் முதலியவற்றாலும் அழிவு ஏற்படக்கூடாது என்றெல்லாம் கேட்டுக்கொண்டே வந்தான். பிரம்மதேவரும் அவன் செய்த கடுந்தவம் காரணமாக, 'அப்படியே ஆகட்டும்' என்று கூறி அவன் வேண்டிய வரங்களை எல்லாம் கொடுத்தார். இராவணனுக்கு மிகவும் சந்தோஷம் உண்டாயிற்று. தான் விரும்பியபடி எல்லாம் கிடைத்துவிட்டன என்று மகிழ்ந்தான்.

"இவ்வாறு தன் அண்ணனை இராவணன் ஒவ்வொரு வரமாகக் கேட்டுக்கொண்டான். இப்படிக் கேட்ட வரங்களில் சிலவிட்டுப்போய் இருக்கின்றன. விட்டுப்போன ஒன்றால் சாவு ஏற்பட்டால் என் செய்வார். நமக்கு வேண்டுவது சாகாமல் எப்போதும் நித்தியமாய் இருக்கவேண்டும் என்பது. அப்படி நித்தியமாய் இருப்பதற்கு ஏற்றாற்போல ஒரே சொல்லில் எல்லா வரங்களிலும் அடங்கிய பொருளைக் கேட்கவேண்டும். அதற்கு ஏற்ற சொல் நித்தியத்துவம் என்பது!" என்று கும்பகர்ணன் தீர்மானம் செய்தான். பிரம்மதேவர் அருகில் வந்து "உனக்கு எந்த வரம் வேண்டும்" என்று கேட்கும்போது, மற

வாமல் கேட்கவேண்டும் என்பதற்காக நித்தியத் துவம், நித்தியத்துவம் என்று வாய்க்குள் சொல்லிக் கொண்டே இருந்தான். கும்பகர்ணனுடைய எண் ணத்தைத் தேவர்கள் தெரிந்து கொண்டார்கள். "ஐயோ! இந்த இராட்சதன் நித்தியத்துவம் என்னும் வரம்கேட்டு, அதன்படி அழியாமல் இருந்து வருவானுனல், தேவர்களாகிய நம் முடைய கதியும் முனிவர்கள், ரிஷிகள் முதலிய வர்களின் கதியும், அதோ கதிதான். ஆகையினுல், இவன் இந்த வரத்தைப்பெருமல் இருக்க வழி செய்யவேண்டும்." என்று யோசனை செய்தனர். அப்படி யோசனை செய்து, "கல்விக்குத் தெய்வ மாகிய சரஸ்வதி தேவியை வேண்டி, அவன் வரம் கேட்கும்போது, நித்தியத்துவம் என்று கேட்காத படி, நித்திரத்துவம் என்று கேட்கும்படி செய் வோம்" என்று தீர்மானித்தனர். அப்படியே கலை மகளிடம் சென்று தம் எண்ணத்தைத் தேவர்கள் சொல்லச் சரஸ்வதியும் அப்படியே கும்பகர்ணன் நாவில் இருந்து, நித்தியத்துவம் என்று கேட்பதற் குப் பதிலாக நித்திரத்துவம் என்று கேட்கும்படி செய்வதாகக் கூறினுள். நித்திரத்துவம் என்ருல் சதா தூங்கிக் கொண்டிருக்கவேண்டும் என்பது.

பிரம்மதேவர் கும்பகர்ணன் அருகே வந்தார். வந்து "கும்பகர்ணு, உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்ருர். அதுவரையில், நித்தியத்துவம் என்று கேட்கத் தான் வாயினுள் சொல்லிச் சொல் லிப் பயிற்சி செய்தவன், "சுவாமி, நித்திரத்துவம் வேண்டும்" என்று கேட்டுவிட்டான். உடனே பிரம்ம

தேவர் "அன்ப! அப்படியே ஆகட்டும்." என்று கூறிவிட்டு மறைந்தனர். இதனால் கும்பகர்ணன் தன் வாயினாலேயே கெட்டான் என்பது தெரிகிற தல்லவா ?

நித்தியத்து வங்கேட்பான் நித்திரைஎன் றேமயக்கம்
துய்த்தனனும் கும்பகன்னன் சோமேசா—எத்திறத்தும்
ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

## பயிற்சி வினாக்கள்

1. ஏன் பேச்சில் விழிப்பாக இருக்கவேண்டும் ?
2. இராவணன் கேட்ட வரங்கள் எவை ?
3. தேவர்கள் கொண்ட கவலை யாது ?
4. ஏன் கும்பகர்ணன் நித்திரையில் ஆழ்ந்தான் ?
5. இப்பாடத்தின் திரண்ட கருத்து யாது ?

# 13. எண்ணியே எந்தக்காரியமும் செய்க

நாம் ஒரு காரியம் செய்வதற்கு முன் நன்கு யோசித்துச் செய்யத் தொடங்கவேண்டும். "நாம் செய்யப்போகும் காரியத்திற்கு எந்த அளவு முயற்சி வேண்டும்? அப்படி முயன்ருல் இடையில் எந்தெந்தத் துன்பங்கள் வரலாம்? இக்காரியம் முற்றுப் பெற்ருல் நாம் பெறக்கூடிய பயன் யாது?" என்பன போன்றவைகளை எல்லாம் முன்னதாகச் சிந்தித்து அதன்பின் காரியத்தைச் செய்யத் தொடங்கவேண்டும். இப்படி எல்லாம் நாம் செய்யவில்லை என்ருல், இறுதியில் துன்பம்தான் அடைவோம். இதற்கு உதாரணமாக இராவணன் பட்ட பாட்டை இங்கே பாருங்கள்.

இராவணனைப்பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டியது இல்லை. அவனைப்பற்றிக் கேட்டுக் கேட்டு உங்கள் காதுகளும் செவிடுபட்டு இருக்கும். அவன் மிகுந்த பலசாலி. அவனைக் கண்டால் யாவரும் பயப்படுவார். அவன் தனது பத்துத் தலைகளோடும் இருபது கைகளோடும் நடப்பதைப்பார்த்தால் ஒரு மலைதான் கால்பெற்று நடக்கிறதோ என்று நினைக்க எண்ணம் வரும்.

அவனுக்கு ஒரு விமானம் உண்டு. அது குபேரனுல் கொடுக்கப்பட்டது. அவ்விமானத்தின் பெயர் புஷ்பக விமானம் என்பது. அதில் ஏறிக்கொண்டு இராவணன் தன் இஷ்டமான இடங்களுக்குப்

போவான். அப்படிப் போகின்றவன் ஒருநாள் சிவ பெருமான் அமர்ந்திருக்கும் திருக்கைலாய மலேப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தான். அம்மலே இவனுடைய போக்குவரவுக்குத் தடையாக இருக்கிறது என்று எண்ணினன். அம்மலே குறுக்கே இருப்பதால் சுற்றிக்கொண்டு போகவேண்டும். அதனைத் தூக்கி அப்பால் வேறு ஓர் இடத்தில் வைத்துவிட்டால் நாம் தாராளமாக நேரேபோய் நேரே வரலாம் என்று எண்ணினன். ஐயோ பாவம்! இந்த விதமான எண்ணம் இவனுக்கு ஏன் வந்ததோ தெரியவில்லே! என்ன செய்வது? கேடுவரும் பின்னே, மதிகெட்டுவரும் முன்னே" அல்லவா?

இராவணன் புஜபல பராக்கிரமசாலி என்றுதான் நாம் கேட்டிருக்கிருேமே! மேலும், அவன் நினைத்ததை நினைத்தபடி செய்பவன் என்று கூடத்தெரிந்து இருக்கிருேமே? ஆகவே, எல்லாம் வல்ல இறைவனும் சிவபெருமான் வீற்றிருக்கும் மலேயைத் தூக்க முயன்ருன். தனது இருபது தோள்களேயும் இம் முயற்சிக்குப் பயன்படுத்தினன். தன் பத்துத் தலேகளேயும் முட்டுக்கொடுத்து வெள்ளிமலேயை எடுக்கத் துணிந்தான். அவன் துணிவு என்ன செய்யும்? கல்லேக் குத்தினல் கைதானே நோகும்? யானே முன், பூனேயின் பலம் செல்லுமோ? அதுபோலச் சிவபெருமான் வீற்றிருக்கும் மலேயை எடுக்க இவனல் முடியுமா? ஒருவேளே சாதாரண மலேயை வேண்டுமானல் இவனல் பெயர்த்து எடுக்கமுடியும் என்று சொல்லலாம். சிவபெருமான் அமர்ந்துள்ள மலேயை இவனல் எடுக்கத், தூக்க முடியுமா? முடி

யவே முடியாது. ஆகவே, இராவணன் முயற்சி என்ன ஆயிற்று? விழலுக்கு இறைத்த நீர் ஆயிற்று.

இராவணன் தன் இருபது கைகளையும் பத்துத் தலைகளையும், தன் மலைபோன்ற உடலையும்கொண்டு பார்வதி பங்கன் வீற்றிருந்த வெள்ளி மலையைத் தூக்க முயன்றான். அப்போது சிவபெருமான், தமது கால் பெருவிரலால் சிறிது அழுத்தினார். அவ்வளவு தான், இராவணன் ஆலையில் அகப்பட்ட கரும்பு போல் நசுங்கத் தொடங்கினான். அப்போது அவனது நல்லவேளையாக வாகீச முனிவர் மலையைச் சுற்றி வந்துகொண்டிருந்தவர், இவன் படும் துன்பத்தைப்பார்த்து இரக்கங்கொண்டு "சுவாமி சாம வேதப்பிரியன்" என்று சொல்லிக் கொண்டே போனார். இவ்வாறு ஏன் சொன்னார் தெரியுமோ? சாமவேதம் பாடினால் சிவபெருமான் மகிழ்ந்து அருள் செய்வார் என்பதை அறிவிப்பதற்காக என்க. அவர் சொன்ன குறிப்பை அறிந்தனன் இராவணன். உடனே சாமவேதம் பாடத் தொடங்கினான். அதனைக் கேட்ட சிவபெருமான் மனம் உருகித் தான் ஊன்றிய கால் பெருவிரலை எடுத்ததும் இராவணன் தப்பிப் பிழைத்தான்.

வெள்ளிவெற்பை என்னுடைது எடுப்பன்என வீறெய்தித்
துள்ளிஅழிந் தான்அரக்கன் சோமேசா—மெள்ள
முடிவும் இடையூறும் முற்றிஆங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

## பயிற்சி வினாக்கள்

1. நாம் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கும் முன் எவ்வெவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்?

2. இராவணன் யாவன்? அவனைப் பற்றித் தெரிந்ததை எழுது.

3. இராவணன் என்ன செய்யத் தீர்மானித்தான்? ஏன்?

4. வாகீச முனிவர் இராவணன் பிழைக்க என்ன கூறினார்?

5. இராவணன் எப்படி நசுக்கப்படாமல் தன் உயிர் தப்பினான்?

# 14. சூது இல்லாமல் தூது செல்க

தூதர்கள் நல்ல பண்புடையவர்களாய் இருத்தல் வேண்டும். அவர்கள் தம் மனத்தில் கள்ளம் கபடு அற்றவர்களாய் இருக்கவேண்டும். யார் தூது மொழி உரைத்து வரும்படி சொல்லி அனுப்பினுர்களோ, அவர்கள் பொருட்டு உரைக்கவேண்டிய தூதுரைகளை ஒளிக்காமல் குறைக்காமல் உரைக்க வேண்டியவரிடம் உணர்த்துதல் வேண்டும். அத் தூதுரைகள் கேட்பவர்க்குச் சுடுசொற்களாக இருக்கலாம். அதனுல் தூதுரைக்கச் சென்றவர்களுக்கு ஆபத்து நேர்ந்தாலும் நேரலாம். தம் உயிர்க்கே தீங்கு நேரிடினும் நேரும். இத்தகைய நிலைகள் ஏற்பட்டாலும், இவற்றினைப் பொருட்படுத்தலாகாது. தம் தலைவர்க்கு மேன்மை தரும் முறையில் தூது உரைகளைக் கூறியே வருதல் வேண்டும். இவை தூதுரைப்பவர் பண்புகள்.

நளமகாராசன் தூதுவனுகச் செல்ல வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது. அவன் மேலே கூறிய தூதர் இலட்சணத்திற்கு ஏற்பத் தூதுரைத்து மீண்டனன். அவன் யாருக்காக யாரிடத்தில், ஏன் தூது சென்றுன் என்பனவற்றைப் பாருங்கள்.

தமயந்தி என்பவள் விதர்ப்ப தேசத்து மன்னனது மகள்; அழகில் மிகுந்தவள். அவள் நளனை மணக்க விரும்பி இருந்தாள். அவ்வாறே நளனும் தமயந்தியைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பி

இருந்தான். இவர்கள் விருப்பப்படி திருமணத்தை முடிக்க விதர்ப்ப தேச மன்னனுகிய வீமராசனுக்கு இஷ்டம் இருந்தாலும், அரசர்களின் வழக்கப்படி சுயம்வரம் என்ற ஒன்றை ஏற்பாடு செய்து, எல்லா அரசர்களுக்கும் இந்நச் செய்தியை அறிவித்து, அவர்களை வரவழைத்து அவர்களுள் யாருக்குத் தமயந்தி மாலை போடுகிருளோ, அவ்வரசன் அவளைக் கலியாணம் செய்து கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்தான். ஆகவே, இந்த ஏற்பாட்டின்படி நளன் சுயம் வரத்திற்குப் புறப்பட்டான்.

தமயந்தி மிகுந்த அழகுடையவள் என்று சொன்னேம் அல்லவா? அதனுல் தேவர்களுள் வருணன், அக்கினி, இந்திரன், யமன் ஆகிய நால்வரும் தமயந்தியின் சுயம்வரத்திற்குப் போகப் புறப்பட்டனர். தமயநதி தம்முள் எவர்க்கேனும் மாலை இடுவாள் என்பது அவர்கள் எண்ணம். இப்படிப் புறப்பட்டவர்கள் வழியில் நளனைப்பார்த்தனர். அவனும் தம்மைப்போல எண்ணம்கொண்டு புறப்பட்டவன் என்பது தெரிந்தும் அவனையே தமயந்தியிடம் தூது அனுப்பி, தங்களுள் எவர்க்கேனும் மணமாலை சூட்டுமாறு சொல்ல வேண்டினர்.

நளன் நற்குணம் உடையவன். பிறர் வேண்டுதலை விருப்புடன் செய்பவன். தான் கலியாணம் செய்துகொள்ளப்போகும் தமயந்தியிடம், தேவர்களுள் ஒருவருக்கு மாலை சூட்டுமாறு தன்னையே தூது அனுப்புகிருர்களே என்று கொஞ்சம் கூட யோசிக்கவில்லை. அப்படியே அவர்கள் விருப்பத்தைத் தமயந்திக்குக் கூறுவதாக வாக்களித்தான்.

ஆனால், ஓர் ஆண் மகன் பெண்கள் வாழும் இடத்திற்கு எப்படித் தனியே போக முடியும்? அதனால் தேவர்கள் அவனுக்கு ஒரு வித்தையைக் கற்பித்தனர். அதன் சக்தியால் யார் கண்ணுக்கும் தெரியாமல் தன் உருவை மறைத்துத் தயந்தி வாழும் இடத்திற்குச்சென்றான். தமயந்தியைக் கண்டான். தேவர்கள் எண்ணத்தைச்சிறிதும் அஞ்சாது, கூசாது கூறினான். ஆனால், தமயந்தி நளனைத் தவிர்த்து வேறு யாருக்கும் மாலை இடமுடியாது என்று உறுதி கொண்டிருப்பதை உணர்ந்தான். அதன்பின் தான் வற்புறுத்திப் பேசுவதில் பயனில்லை என்று திரும்பி வந்துவிட்டனன். தான் தூதுசென்று பயன் இல்லாமல் திரும்பியதைத் தேவர்களுக்குக் கூறினன். தேவர்கள் நளனுடைய உண்மைத் தன்மையினைப் பாராட்டினர்.

தன்துயர் நோக்கான் தனைவிடுத்தோர்க் கேஉறுதி
துன்றமொழிந் தான்நிடதன் சோமேசா—என்றும்
இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது.

## பயிற்சி வினாக்கள்

1. தூதர் பண்புகள் எவை?
2. நளனுக்கும் தமயந்திக்கும் இருந்த எண்ணம் என்ன?
3. வீமராசன் எந்த ஏற்பாட்டைச் செய்தான்?
4. நளன் ஏன் தமயந்தியிடம் தூதனாகப் போனான்?
5. தேவர்கள் நளனை ஏன் பாராட்டினர்?

## 15. தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்க

பெருந்தன்மை என்பது ஒரு சிறந்த குணம். இந்தக் குணம் இருக்கப்பெற்றவர்கள்தாம் பெரியவர்கள்; சிறந்தவர்கள்; உயர்ந்தவர்கள். இந்தப் பண்பு பெருதவர்கள் வயதால் பெரியவர்களாய் இருந்தும் பயனில்லை. பட்டம், பதவிகளால் சிறந்திருந்தும் பயன் இல்லை. வேறு எந்த விதத்தில் உயர்ந்திருந்தும் பயன் இல்லை. ஆனால், பெருந்தன்மை என்னும் குணத்தை எப்படிப் பெறுவது என்று நீங்கள் நினைக்கலாம்; அதனைப் பெறுவது மிகவும் சுலபம். அதனை விலை கொடுத்து வாங்க வேண்டியது இல்லை. அது நம் நடத்தை மூலமாக வருவது; அதாவது, நமக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். இதுவே பெருந்தன்மைக் குணத்தைப் பெறுவதற்கு வழி. இப்படித் தீங்கு செய்தவர்களுக்கு நன்மை செய்யாமல் நாங்களும் பெருந்தன்மை யுடையவர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தால் பயன் இல்லை.

பஞ்சபாண்டவர்களுள் மூத்தவரான தருமர் பெருந்தன்மையுடையவர். அவர் மிகவும் பொறுமை சாலி. இப்போதும் யாரேனும் பொறுமையாக இருப்பாரானல், அவர்களைத் தருமர் மாதிரி பொறுமை சாலி என்று கூறிவருவதை யாரும் அறிவர்.

பஞ்சபாண்டவர்களுக்கு நேர் விரோதி துரியோதனன். துரியோதனன் பஞ்சபாண்டவர்களுக்குச்

செய்த தீமைகளுக்கு அளவே இல்லை. அவன் அவர்களைக் கொல்வதற்குப் பல வழிகளில் முயற்சி செய்தான். அவர்களை நாட்டில் வாழவும் விடவில்லை. காட்டில் வாழும்படியும் சூழ்ச்சி செய்தான். பஞ்சபாண்டவர்களுக்கு இருந்த சொத்து, சுதந்திரம எல்லாவற்றையும் சூதாடி வென்றுகொண்டான். இருக்க இடம் இல்லாமற் செய்துவிட்டான். காட்டில் பன்னிரண்டு வருஷம் இருந்துவிட்டுப் பிறகு ஒரு வருஷம் யார் கண்ணுக்கும் தெரியாமல் உருமாறி வாழ்ந்த பிறகு நாட்டுக்கு வந்தால், சூதினால் இழந்த சொத்து, சுதந்திரங்களைத் தருவதாகச் சொன்னான்.

தருமர் முதலான பஞ்சபாண்டவர் துரியோதனன் சொன்னபடி காட்டில் வாழ்ந்துகொண் டிருந்தனர். இப்படி இவர்கள் வாழும்போது, துரியோதனன் தேவலோகத்துக் கந்தருவனால் கட்டப்பட்டு ஆகாயவழியே எடுத்துச்செல்லப்படுவதைத் தருமர் பார்த்துவிட்டார். அவர் மனம் பொறுக்கவில்லை. " நமக்குப் பல வழிகளில் தீமை செய்தவன்தானே; அவன் அழிவது நல்லதுதான்." என்று சிறிதும் எண்ணவில்லை. எப்படியும் அவனை மீட்க வேண்டும் என்று எண்ணம் கொண்டார். உடனே தன் தம்பியான அர்ச்சுனனை அழைத்தார். 'தம்பி அர்ச்சுனா, துரியோதனன் கந்தருவன் ஒருவனால் கட்டுண்டு கொண்டு செல்லப்படுகிறான். நீ கந்தருவனோடு போரிட்டு, அத்துரியோதனனை மீட்பாயாக' என்று கூறினர். " அப்போது அர்ச்சுனன், அண்ணா! துரியோதனன் மிகவும் கொடியவனாயிற்றே. உங்களுக்குப் பல தீமைகளைச் செய்தவன் அல்லவா? அவன்

அழிந்துதான் போகட்டுமே." என்றனன். அப்படித் தம் தம்பி கூறியதைக் கேட்ட தருமர், "தம்பி, அவன் தான் புத்தி இல்லாமல் செய்தால், நாமும் அப்படிச் செய்வதா? தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்வது தானே நல்ல பண்பு? ஆகவே, என் சொல்லைத் தட்டாமல் அவனை மீட்டு அனுப்புக' என்று கட்டளை இட்டனர். அர்ச்சுனன் அதற்குமேல் ஒன்றும் பேசாமல், தன் அண்ணாவின் சொல்படி கந்தருவனோடு போரிட்டு வென்று துரியோதனனை மீட்டனன்.

வன்மைச் சுயோதனற்கும் வானோர் சிறைமீட்டான்
தொன்மை நெறித்தருமன் சோமேசா – பன்முறையும்
இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

## பயிற்சி வினாக்கள்

1. பெருந்தன்மை உடையவர் என்று யாரைச் சொல்லலாம்?

2. துரியோதனன் பஞ்ச பாண்டவர்களுக்குச் செய்த தீமைகள் யாவை?

3. தருமர் காட்டில் வாழ்ந்து வருகையில் எதைக் கண்டார்?

4. அர்ச்சுனனுக்கும் தருமருக்கும் நடந்த பேச்சு வார்த்தைகள் என்ன?

5. துரியன் எங்ஙனம் மீட்கப்பட்டான்?

## 16. மனோதிடம் இருந்தால் மாட்சி பெறலாம்

கோழைமனம் கூடாது. தைரிய மனம் வேண்டும். யானையைப் பாருங்கள்: அது உடல் பெருத்து இருக்கிறது; கூர்மையான தந்தங்களையுடையதாகவும் இருக்கிறது. ஆனால், புலியோ யானையோடு ஒத்திட்டுப்பார்க்கும்போது, உடலில் சிறிதாகவே இருக்கிறது. என்றாலும், தைரியம் உடையது. புலி தாக்க வருகிறது என்றால், பெரிய உடல் பெற்ற யானை பயப்படுகிறது. இது எதைத் தெரிவிக்கிறது "தைரியம் வேண்டும். கோழைத்தனம் கூடாது" என்பனவற்றை அல்லவா தெரிவிக்கிறது? இதை விளக்க ஒருவர் செய்த செயலைக் குறிப்பிடுகிறேன் பாருங்கள்.

கருவூர் என்னும் ஊரில் எறிபத்தர் என்னும் பெயருடைய ஒரு பக்தர் இருந்தார். அவர் தம் கையில் மழு என்னும் ஆயுதம் வைத்துக்கொண்டு, சிவபெருமானிடத்தில் அன்புடைய அடியவர்களுக்கு யாராகிலும் திங்கு செய்தால் அம்மழுவாயுதத்தால் அவர்களை வெட்டிச் சாய்த்துவந்தார்.

அவர் காலத்தில் சிவகாமி ஆண்டார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானுக்கு மலர் சூட்டி வழிபட்டு வந்தார். வழக்கப்படி மலர்களைப் பறித்துக் கூடையில் நிரப்பித் தாம் வைத்திருந்த கழியில் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு, கழியைத் தோளில் சார்த்தி நடந்துகொண்டிருந்தார். அப்போது சோழ மன்னன் பட்டத்து யானை அவர்

பின்னே வந்துகொண்டிருந்தது. அது பூக்கூடையைத் தன் தும்பிக்கையால் எடுத்துக் கீழே சிந்திச் சென்றது. அதைக்கண்ட சிவகாமியாண்டார்கோபங் கொண்டு தம் கழியால் யானையை அடிக்க ஓடினர். யானை வெகுதூரம் நடந்துவிட்டது. சிவகாமியாண்டார் அன்று சிவபெருமானுக்கு மலரைச்சூட்ட முடியவில்லையே என்று வருந்தித் தரையில் அமர்ந்து விட்டார். இந்தச் சமயம் எறிபத்தர் அங்கு வர நேர்ந்தது.

எறிபத்தர், சிவாகாமியாண்டார் அருகே சென்ருர் ; வணங்கி நின்ருர் ; "என்ன நடந்தது?" என்று அன்புடன் கேட்டார். சிவகாமியாண்டார் தாம் தினமும் சிவபெருமானுக்கு மலர் பறித்து வழிபடுவது என்றும், அந்த முறைப்படி இன்று மலர்களைக் கூடையில் நிரப்பி எடுத்துக்கொண்டு வரும்போது இந் நாட்டுச் சோழ மகாராஜனுடைய யானை அக்கூடையைக் கீழே தள்ளிக் காலால் தேய்த்துச் சென்றது என்றும், அதோ அந்த யானை போகிறது பாருங்கள் என்றும் சொல்லி முறையிட்டார் எறிபத்தருக்கு மிகவும் இரக்கம் தோன்றியது. மேலும், அவர் தாம் சிவனடியார்கள் எவருக்காயினும் தீங்கு செய்பவரைத் தண்டிப்பவராயிற்றே. சிறிதும் தாமதம் செய்யாமல் யானை சென்ற வழியே விரைவாகப் பின் தொடர்ந்தார். யானையின் முன் வந்தார். சிறிதும் அஞ்சாமல் தம் மழுவால் யானையின் துதிக்கையை இரண்டு துண்டாக வெட்டினர். யானையும் பிளிறிட்டுப் பூமியில் சாய்ந்தது. யானையின் பின் வந்தவர்களும் பாகனும் எறிபத்தருடைய வீரச்செயலைக் கண்டு அவர்களுள்

சிலர் அவரை எதிர்த்தனர். சிலர் எதிர்க்கமுடியா மல், சோழ மன்னனை அடைந்து, "மன்ன உமது பட்டத்து யானையை ஒரு சிவனடியார் கொன்றனர்" என்று கூறிவிட்டனர். பார்த்தீர்களா சிவனடியார் ஒரு வர் தைரியத்தை! அவர் யானையின் உடல் பரு மனுக்கோ, யானையோடு வந்த உடல் கட்டுப்பெற்ற பாகர்க்கோ அஞ்சினரா ? இல்லை. அவர்களை எல் லாம் வெட்டி வீழ்த்தினர்.

வெங்கரியைப் பாகரைமுன் வீட்டினர் ஏகராய்த்
துங்க எறிபத்தர் சோமேசா—அங்கம்
பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

## பயிற்சி வினாக்கள்

1. தைரியமே வெற்றிதரும் என்பதற்கு எந்த விலங்கு உதாரணம் ஆகும்?
2. எறிபத்தர் மேற்கொண்ட தொண்டு யாது?
3. சிவகாமி யாண்டார் யார்?
4. சிவகாமி யாண்டார் ஏன் கதறி அழுதார்?
5. எறிபத்தர் தைரியம் எதனால் தெரிகிறது?



## 17. கோபங்கொள்ளுதல் பாபம் ஆகும்

ஔவையார் தாம் செய்த ஆத்திசூடியில் "ஆறுவது சினம்" என்று கூறியிருக்கிறார். இதன் பொருள் கோபம் வரும்போது அதனைத் தடுத்துத் தணித்துக்கொள்ள வேண்டும் என்பது. நமக்குக் கோபம் வருவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பிறர் நமக்குப் பிடிக்காத செயல்களைச் செய்த போதும், கர்வம், பதவி, முதலான காரணங் கொண்டு செய்யும் தீங்குகளைக் கண்டபோதும் கோபம் வருகிறது. ஆனால் நாயனார் "அந்தச் சம

யத்திலும் கோபம் கொள்ளுதல் கூடாது; கோபங் கொள்ளாதிருத்தல் நல்லதாகும்'' என்று அறிவுறுத்துகிருர். மேலும் அவர், "பிறர் நமக்குப் பல கூடருடைய தீ வந்து நம் உடலைத் தாக்கும்போது உண்டாகும் துன்பத்தைப் போன்ற துன்பம் செய்தாலும், அப்போதும் கோபங்கொள்ளாது இருத்தல் நல்லது'' என்கிருர். இதனை நடைமுறையில் காட்டியவர் நமது உலகத் தந்தையார் காந்திப் பெரியார் ஆவார்.

காந்தியார் வடநாட்டில் போர்பந்தர் என்னும் இடத்தில் 1869–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி கரம்சந்திர காந்தி என்னும் உத்தமருக்கும் புத்தளிபா என்னும் உத்தமியாருக்கும் திருமகனுராகப் பிறந்தார். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பதற்கு ஏற்ப, அறிவில் சிறந்து படிப்பில் மிகவும் அக்கரை காட்டிப் படிப்படியாகப் படித்து வக்கீல் தொழிலுக்குரிய படிப்புவரை பயின்ருர். இவர் அறிவு வளர்ச்சியுற்றது போலவே இவருடைய நற்குணங்களும் கூடவே வளர்ந்து வந்தன. இவரிடம் 'தந்தை தாய்ப்பேண்' என்னும் குணமும் "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை'' என்ற பண்பும் குடிகொண்டிருந்தன. இந்தப் பண்புகள் இவரிடம் பொருந்தி இருந்தன என்பதற்கு உதாரணமாக இவர் தம் வாழ்க்கையில் நடந்து காட்டிய நிகழ்ச்சி ஒன்ருலும் நன்கு நிலை நிறுத்தலாம்.

காந்தியார் தமதுவழக்கறிஞர் துறையில் வெற்றி பெற மேனுடு சென்று படிக்க விரும்பினுர். மேனுடு

செல்பவர் பெரும்பாலும் சீராக இருப்பதில்லை. குடிப் பழக்கமும், மாமிச உணவும் முதலான தீய பழக்கங் களில் மிகுதியும் ஈடுபட்டுக் கெட்டுவந்தனர். இந்தச் செய்தி காந்தியாரின் தாயாரான புத்தளிபா நன்கு அறிந்திருந்தார். ஆகவே, தம் திருமகனும் மேனாடு சென்றால் இப்பழக்கங்களில் ஈடுபடநேரிடும் என்று காந்தியார் மேல்படிப்புப் படிக்க மேனாடு செல்வதைத் தடுத்துவிட்டனர். என்றாலும், காந்தி யாருக்கு எவ்வாறேனும் மேனாடு சென்று தம் விருப் பப்படி சட்டக்கலை படித்துத் திரும்பவேண்டும் என் பது எண்ணம். இந்த நிலையில் தாயார் புத்தளிபா அம்மையார், தம் திருமகனை அழைத்து "மகனே நீ மேனாடு செல்ல வேண்டுமென்று விரும்பினால் 'புலால் புசிப்பதில்லை, மதுபானம் செய்வதில்லை' என்று எனக்குச் சத்தியம் செய்து கொடுத்தால் நீ மேனாடு போக அனுமதிப்பேன்." என்று கூறினார். காந்தியார் அப்படியே சத்தியம் செய்துகொடுத்து மேனாடு சென்றார். தம் அன்னையாருக்குக் கொடுத்த வாக்குறுதிப்படியே நடந்து வந்தார். மதுபானம் பருகுவதும் புலால் புசிப்பதும் நாகரிகம் என்று கருதி இப்பழக்கங்களில் ஈடுபட்ட பலர், காந்தியார் ஈடுபடாதிருத்தலைக் கண்டு எள்ளி ஏளனம் செய்தும் தம் தாயார் சொல்லியனுப்பிய வார்த்தைக்குப்பழுது வராவண்ணம் நடந்துகொண்டார்,

இப்படிப்பட்ட அருங்குணம் படைத்த காந்தி யார் ஒருமுறை இரயிலில் பயணப்பட்டுக் கொண்டு இருந்தார். அதே இரயிலில் புறப்பட ஓர் ஆங் கில நாட்டினரும் வந்தனர். ஆங்கிலேயர் தம்

மிடம் இருந்த பெட்டி, படுக்கை முதலானவற்றை ஏற்றி வைக்க இரயில்வே கூலியாட்களாகிய போர்டர்களைத் தேடியும் காண முடியாமையால் கஷ்டப்படுவதைக் காந்தியார் கண்டார். காந்தியார் ஆடம்பரமாக உடுப்பவர் அல்லர். எளிய உடைகளையே உடுப்பவர். இரயில் பிரயாணம் செய்யும் போதெல்லாம் மூன்றும் வகுப்பிலேயே போவது வழக்கம். ஆங்கில நாட்டினர் கூலியாள் இல்லாமல் கஷ்டப்படுவதைப் பார்த்துத் தாமே கூலியாள் போலப் பெட்டி, படுக்கை முதலான சாமான்களை ஏற்றிவைத்தார். ஆங்கிலேயருக்கு இவர் காந்தியார் என்பது தெரியாது. இவர் யாரோ கூலியாள் என்று கருதி அவர் செய்த வேலைக்காகக் கூலிகொடுத்தார், அக்கூலியைக் காந்தியார் வாங்கவில்லை. ஓ, இந்தக் கூலிபோதாது போலும் என்று எண்ணிய ஆங்கிலேய நாட்டினர் கூடச் சிறிது சேர்த்துக் கொடுத்தார். அப்போதும் அவர் அதை வாங்க மறுத்தார். ஆங்கிலேயருக்குக் கோபம் வந்தது. இவன் பேராசைக்காரனுக இருக்கிருன் என்று கருதிக் காந்தியார் தாடையில் அவர் அறைந்தார். அவ்வறையைப் பெற்ற காந்தியார் ஒன்றும் செய்யாமல் வாயால் ஒரு வார்த்தையும்கூடப் பேசாமல் இருந்துவிட்டார்.

காந்தியாரின் தியாக உணர்ச்சி எங்கும் பரவி இருந்ததால், அவர் இறங்கவேண்டிய இடத்தில் அவரை வரவேற்கப் பலரும் வந்து அவருக்கு மாலை மரியாதை செய்து கொண்டாடினர். அப்போதுதான் அவ்வாங்கிலேயர் தாம் கூலியாள் என்று கருதப் பட்டவர் காந்தியார் என்று அறிந்து தாம் அறியாமல் அறைந்துவிட்டதுபற்றி மன்னிப்புக் கேட்டுக்

கொண்டார். ஆங்கிலேயர் அறைந்தது பற்றிக் காந்தியார் சிறிதும் கோபம் கொள்ளாததைக்கண்டு அவரைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

**இணரெரி தோய்வன்ன இன்னு செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று**

## பயிற்சி வினக்கள்

1. ஔவையார் கோபத்தைப் பற்றிக் கூறியது யாது? அதன் பொருள் என்ன?

2. நாம் எந்தச் சந்தர்ப்பத்தில் கோபங் கொள்ளக் கூடாது?

8. காந்தியார் ஏன் மேனுடு போக எண்ணினர்?

4 காந்தியார் தாய் சொல் தட்டாதவர் என்பது எப்படித் தெரிகிறது?

5. காந்தியாருக்குக் கோபம் வராது என்பதை எப்படி நீ அறிகிருய்?

## அருஞ்சொற் பொருள்

செய்யுள் 1. மூஆண்டு - மூன்று வயது, மா - பெரிய, நிலத்து - உலகில், மன் - நிலைபெற்ற

செய்யுள் 2, பன்னும் - சிறப்பித்துச் சொல்லப் படும், தினைத்துணை - தினை அரிசி அளவு. பனை - பனம் பழம்.

செய்யுள் 3. தூயது அலா - நல்லது அல்லாத ஒல்லாவே - முடியா. வழுக்கியும் - மறந்தும்.

செய்யுள் 4. மனத்துக்கண் - மனத்தில், மாசு குற்றம், அனைத்து - அவ்வளவுதான், ஆகுல நீர ஆரவாரத் தன்மையுடையவை.

செய்யுள் 5. ஒட்டலன் - பகைவன், ஒருது - வருந் தாது, ஒறுத்தார்க்கு - தண்டனை செய்தவருக்கு, பொன்றும் - உலகம் அழியும்.

செய்யுள் 6. சேய் - மகன் (பரசுராமன்) புகன்றான்- சொன்னான், வழங்குவது - சொல்லுவது.

செய்யுள் 7. ஊன் - தசை உவந்தனர் - மகிழ்ந் தார், தூ - சுத்தமான ஒற்கத்தின் - தளர்ச்சியின்போது, ஊற்றும் - ஊன்றுகோல் போல் ஆகும்.

செய்யுள் 8. கூற்றுவர் - கூற்றுவ நாயனார் மூவேந்தர் - சேர சோழ பாண்டியர், தாளாண்மை - முயற்சி, சாற்றும் - சொல்லும், திருவினை-செல்வத்தை, முயற்றின்மை - சோம்பல், இன்மை - தரித்திரத்துள்.

செய்யுள் 9. குடம்பை - முட்டை, புள் - பறவை, அற்று - ஒப்பு.

செய்யுள் 10. வேதன் - பிராம்மணன் , வீந்து - அழிந்து, மீனவற்கு - பாண்டியனுக்கு எந்நாளும் - எக்காலத்தும்.

செய்யுள் 11. என்பும் - உடம்பையும்.

செய்யுள் 12. துய்த்தனன் - அனுபவித்தான். ஆக்கம் - உயர்வும்.

செய்யுள் 18 வெற்பு - மலே, வீறு - பெருமை, அரக்கன் - இராவணன், இடையூறு - துன்பம் எய்தும் - அடையும்.

செய்யுள் 14. துன்ற - பொருந்த, நிடதன் - நளன், இறுதி - உயிர்போகும் நிலே. எஞ்சாது - தளராது, இறைவற்கு - அரசனுக்கு, உறுதி - நன்மை.

செய்யுள் 15. சுயோதனன் - துரியோதனன், வானோர் - தேவர்; நெறி - நல்வழி, இன்னு - தீங்கு, பயத்தது - பயனையுடையது, சால்பு - பெருந்தன்மைக் குணம்.

செய்யுள் 16. கரி - யானே, வீட்டினுர் - வெட்டினுர், துங்க - உயர்ந்த அங்கம் - உடல் பரியது - பருத்தது கோட்டது - கொம்பை யுடையது. வெருஉம் - பயப் படும்.

செய்யுள் 17. இணர் எரி -பல சுடர். வெகுளாமை- கோபம் கொள்ளாமை.

# நீதி போதனைப் பாட புததகம

## மூன்றாம் புத்தகம்

(எட்டாம் வகுப்பு அல்லது மூன்றாம் படிவத்திற்கு)

ஆசிரியர் :

**வித்துவான் - பாலூர் கண்ணப்ப முதலியார்**

தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை-14

பிரசுரகர்த்தர் :

**ராஜா ராம்சந்தர் அண்டு கம்பெனி,**

**520, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை - 5**

முதற் பதிப்பு: 1955

உரிமை பிரசுரகர்த்தருடையது.

விலை அணா 9

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14.

# முன்னுரை

திருக்குறள் ஒரு சிறந்த நீதி நூல். அந்நூல் கருத்துக் களைக் கதையின் மூலம் இளைய மாணவர்களுக்குப் புகட்டுதல் ஒரு நல்ல முறையாகும். அம்முறைக்கிணங்கவே, இந்நூலில் திருக்குறள் பாக்கள் சிலவற்றின் கருத்துக்கள் முன்னர் விளக்கப்பட்டு, அக்குறட் பொருளை விளக்கவல்ல கதையை யும் கொடுக்கப்பட்டுள்ளது. குறட்பாவின் பொருளை உணர்வதற்கு நூலின் இறுதியில் அருஞ்சொற் பொருள் களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கால அட்டவணையில் வாரத்தில் நீதி போதனையை நடத்த ஒரு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்நேரத்தில் இத்தகைய நீதிகளும், கதைகளும் உதவக்கூடும் என்ற எண்ணத்துடன் இந்நூல் வெளி வருதலின், பள்ளிக்கூட அதிகாரிகளும், ஆசிரியர்களும் இதனைப் பெரிதும் ஆதரிப் பார்கள் என்று நம்புகிறேன்.

ஆசிரியர்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | உலகுக்கு முதல்வர் கடவுள் | ... | 1 |
| 2. | இல்லை என்னாது ஈக | ... | 10 |
| 3. | செய்ந்நன்றி மறவாமை | ... | 19 |
| 4. | தோன்றில் புகழொடு தோன்றுக | ... | 27 |
| 5. | சாதுவன் அறவுரை | ... | 35 |
| 6. | அருளும் அன்பும் | ... | 43 |
| 7. | அரசன் கடமை | ... | 50 |
| 8. | உயர்ந்த எண்ணமே உன்னத எண்ணம் | ... | 58 |

# நீதிபோதனைப் பாடபுத்தகம்

## மூன்றும் படிவம்

---

### 1. உலகுக்கு முதல்வர் கடவுள்

கடவுள் எங்கும் நிறைந்தவர். அவர் இல்லாத இடமே இல்லை. இதனை ஒரு தந்தைக்கும் மகனுக்கும் நடந்த சம்பாஷணை மூலமும் உணர்ந்து கொள்ளலாம். ஒருமுறை ஒரு தந்தையார், தம் அருமை மகனை அருகில் அழைத்து, " மகனே! நான் உன்னை ஒன்று கேட்கப் போகிறேன். இதற்கு யோசனை செய்து விடைகொடுக்க வேண்டும்." என்றார். இதனைக் கேட்ட தனயன் வணக்கத்தோடு, " அப்பா, என்னறிவுக்கு ஏற்ற கேள்வி யானல், அதற்குப் பதில் கூறுகின்றேன். என் அறிவை யும் கடந்த வினவானல், நான் எப்படிப் பதில்கொடுக்க இயலும்? என்ருலும்,கேளுங்கள். பதில் கூறுகின்றேன்.'

என்றனன். என்றதும் தந்தையார் தம் மகனைப் பார்த்து, "கடவுள் எங்கு இருக்கின்றார்" என்று கேட்டார். உடனே சிறுவன் சிறிதும் தாமதம் செய்யாமல், "தந்தையீர்! நான் ஒரு சிறு சந்தேகம் உள்ளவனாய் இருக்கிறேன். அதை முன்னர் விளக்குங்கள். பிறகு நான் நீர் கேட்ட கேள்விக்குப் பதில் கூறுகின்றேன்." என்றனன். அதனைக் கேட்ட தந்தையார், "சரி, நீ என்ன கேட்கப் போகின்றாய்? கேள்!" என்றதும் மகன், "அப்பா! நீர் கடவுள் இல்லாத இடத்தைக் கூறுங்கள். பிறகு கடவுள் உள்ள இடத்தைக் கூறுகின்றேன்" என்றான். தந்தையார் மகனது நுண்ணறிவை வியந்து கட்டித்தழுவி முத்தம் இட்டனர். இந்தக் கதையையும் நாம் அறிந்துள்ளோம்.

இந்தக் கதையின் மூலமாக நாம் அனைவரும் அறிந்து கொள்வன யாவை? கடவுள் எங்கும் இருக்கிறார். என்பதும், அவர் இல்லாத இடம் எதுவும் இல்லை என்பதும் அன்றோ? இதனையேதான் வள்ளுவர் தம் அருமைத் திருக்குறள் நூலின் முதல் பாவிலேயே, எழுத்துக்களுக்கெல்லாம் எப்படி அ என்னும் எழுத்து முதலாக இருக்கிறதோ, அதுபோல, உலகத்திற்கு முதல்வராய்க் கடவுள் இருக்கிறார் என்று அழகான உதாரணத்தின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார் அன்றோ? இனி உலகுக்குக் கடவுள் முதலாய் உள்ளார் என்பதைக் காண்போமாக.

பஞ்சபாண்டவர்களைப் பற்றி நீங்கள் யாவரும் நன்கு அறிந்திருக்கின்றீர்கள் அல்லவா? அப் பஞ்ச பாண்டவர்களுள் அர்ச்சுனன் ஒருவன் என்பதும் உங்களுக்குத் தெரியும். பஞ்சபாண்டவர்கள் காட்டில் வாழ்ந்திருந்தபோது வேதவியாசர் என்னும் முனிவர் அவர்களைக் காணவந்தார். வந்தவர் முனிவர் ஆதலின், அவரைத் தருமரும், மற்றும் உள்ள தம்பிமார்களும் நல்வரவு கூறி உபசரித்து ஆசனத்தில் அமர்த்தி வணங்கி நின்றனர். வேதவியாசரும் அப் பாண்டவர்களை ஆசீர் வதித்து, தருமரைப் பார்த்து, " தருமா! உனக்கும் உன் தம்பிமார்களுக்கும் ஏற்பட்டுள்ள கஷ்டங்களைக் குறித்து நான் வருத்தப்படுகின்றேன். என் செய்வது? என்றாலும் நான் ஒன்று கூறுகின்றேன். அதனைக் கேள். நீ உன் பகைவனை வெல்லவேண்டுமானால், சிவபெருமானிட மிருந்து பாசுபதாஸ்த்திரம் என்னும் படையினைப் பெற வேண்டும். அதனைத் தவம் செய்து பெற்றால் அன்றிப் பெறமுடியாது. அத்தவத்தை மேற்கொள்ளக்கூடியவன் அர்ச்சுனனே ஆவன். ஆக, அவனைச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்யுமாறு அனுப்பிப் பாசுபதாஸ்த் திரத்தைப் பெற வழி காண்க." என்று கட்டளையிட்டுச் சென்றார். தருமர் தம் தம்பிமார்களுடன் கலந்து பின் அர்ச்சுனனைத் தவம் புரிந்து சிவபெருமானிடமிருந்து பாசுபதாஸ்த்திரம் பெற்று வருமாறு கட்டளையிட்டனர். அர்ச்சுனனும் தன் தமையனார் மொழிக்குச் செவிசாய்த்து

அவ்வாறே தவம் செய்து பாசுபதாஸ்த்திரம் பெறப் புறப்பட்டுவிட்டனன்.

அர்ச்சுனன் தவம் மேற்கொள்ளத் தன் உடல் முழுமையும் திருநீற்றைப் பூசிக்கொண்டனன். சடையை முடித்துக் கட்டினன். நான்கு திசைகளிலும் தீயை மூட்டி இடையில் தான் நின்று ஒருகாலைப் பூமியில் பதித்து மற்ருெரு காலைத் தொடையில் ஊன்றி இரு கரங்களையும் தலைக்குமேல் குவித்துக் கண்மூடித் தவம் செய்யலானன்.

பார்த்தனும் அர்ச்சுனன், இவ்வாறு சிவபெருமானை நோக்கித் தவம் செய்கின்ருன் என்பதை அறிந்தான் துரியோதனன். அர்ச்சுனன் தவம்புரிந்து சிவபெருமானிடமிருந்து பாசுபதம் பெற்ருல், தன்னையும் தன் சுற்றத்தாரையும் வென்றுவிடுவான் என்பதையும் அறிந்தான். வெற்றி பாண்டவர்களுக்கும் தோல்வி கௌரவர்களுக்கும்தான் கிட்டும் என்பதையும் உணர்ந்தான். ஆகவே, விஜயன் கொண்ட தவத்தைக் கலைக்கத் திட்டம் இட்டான். மூகாசூரன் என்பவனை அழைத்தான். அவனிடம் எவ்வாறேனும் அர்ச்சுனுடைய தவத்தைக் கலைக்கக் கட்டளையிட்டான். மூகாசூரனும் அவ்வாறே செய்வதாக வாக்குறுதி தந்து, தான் ஒரு காட்டுப்பன்றி வடிவுடன் அர்ச்சுனன் தவத்தைக் கலைக்க அவன் தவம் செய்யும் இடத்தை நாடிவந்தான்.

இந்த நிலைமையினை எங்கும் காது உள்ளவனாய், எங்கும் கண்ணுள்ளவனாய், எங்கும் நிறைந்து உள்ளவனாய் இருக்கும் சிவபெருமான் அறிந்து, தன்னை நோக்கிக் கடுந்தவம் புரியும் அர்ச்சுனனுக்குக் காட்டுப் பன்றியால் கலக்கம் ஏற்படாதிருக்கவும், அர்ச்சுனனுடைய தவத்துக்கு இரங்கி அவனுக்குப் பாசுபதம் கொடுத்து அருள்



புரியவும் தான் ஒரு வேடவடிவில் வில்லும் அம்புமாகப் புறப்பட்டனர். மூகாசுரனாகிய பன்றி அர்ச்சுனன் தவத்தைக் கலக்க முயன்றது. அர்ச்சுனன் தன் தவ நிலையைச் சிறிது விடுத்து அப்பன்றியோடு போர் தொடுக்க முனைந்தான். சிவபெருமானும் பன்றியைக் கொல்ல, வில்லை வளைத்து அம்பைத் தொடுத்துப் பன்றி

யின் மீது ஏவினர். இருவர்க்கும் இடையே ஏனம் அகப்பட்டுக் கொண்டது. ஒரே சமயத்தில் அர்ச்சுனன் விட்ட அம்பும் சிவபெருமாஞகிய வேடன் எய்த அம்பும் வராகத்தின் உடலில் தைத்தன. ஓர் அம்பு பட்டாலே உயிர்விடக்கூடிய பன்றி ஈர் அம்பு பட்டபின்பும் உயிரை விடாது இருக்குமோ ? பன்றி இறந்தது. ஆனல், சிவ பெருமாஞகிய வேடனுக்கும், தவக்கோலத்தில் இருந்த அர்ச்சுனனுக்கும் தர்க்கம் நடக்க ஆரம்பித்தது.

சிவபெருமான் அர்ச்சுனனைப்பார்த்து“நீ பசுத்தோல் போர்த்த புலி. உன்க்கு என்னதான் ஆபத்து வந்தாலும் நீ கொண்ட தவத்தைவிட்டு வரலாமா? எனவே உன் உயிர் மேல் உனக்கு அவ்வளவு பற்று இருக்கிறது. மேலும், நான் கொன்ற பன்றியை நீ அம்புபோட்டுக் கொல்லலாமா ? இது உன் வீரத்துக்கு அடுக்குமா ? இது சுத்த வீரனுக்கு அழகா ? " என்றெல்லாம் கேட்டனர். அர்ச்சுனனுக்குக் கோபம் வந்தது. அவனுக்கு வேடஞகத் தன்முன் நிற் பவர் சிவபெருமான் என்பது தெரியாது. ஆகவே, " அடே, வேடா? அதிகமாகப் பேசாதே. உனக்கு வேண் டியது பன்றி. ஆகவே, அதனை எடுத்துச் செல். இல்லை யேல் என் அம்பால் உன்னைக் கொல்வேன்" என்றனன். என்னையா நீ கொல்லக்கூடும் ? அம்பு எய்து கொல்வது ஒரு புறம் இருக்கட்டும். என்னோடு மற்போர் செய்து முத லில் வெல் பார்க்கலாம்." என்று சிவபெருமான் கூறினர். அர்ச்சுனன் அதற்கும் சம்மதித்தனன். இருவர்க்கும் மற்

போர் நடந்தது. வலியரில் வலியனான சிவபெருமானிடம் வில் விஜயன் வன்மை என் செய்ய இயலும்? சிவபெருமானாகிய வேடர் அர்ச்சுனனைப் பந்துபோல் தூக்கித் தூக்கி எறிந்தனர். அர்ச்சுனனுக்குப் பெருங்கோபம் வந்தது. "கேவலம் ஒரு வேடன் நம்மை இப்படி அலக்கழிக்கின்றானே" என்று எண்ணினான். தன் கோபம் அடங்கப் பெறாதவனாய்த் தன் கையிலிருந்த வில்லால் ஓங்கி வேடனுடைய தலையில் அடித்தனன். அவ்வளவுதான். அந்த அடி அந்த வேடன் தலையில் மட்டும் பட்டதா ?. அர்ச்சுனன் தலையிலும் பட்டது. தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகிய எல்லா உயிர்ப்பொருள்களின்மீதும் பட்டது. தாய்மார் கருவில் இருந்த சிசுக்கள்மீதும் பட்டது. மழை, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திர சூரியர்கள்மீதும் பட்டது. உயர்திணைப் பொருள்கள்மீதும் அஃறிணைப் பொருள்கள்மீதும் பட்டது. இந்த அடி, அயர்ந்து இருந்தவர்களும் "இஃது என்ன? இஃது என்ன" என்று ஆச்சரியப்படும்படி, அவர்கள் மீதும் பட்டது. அவர் அவர் ஒருவரை ஒருவர் சந்தித்தபோது, "உமக்குத் தலையில் ஏதேனும் திடுமென ஓர் அடி விழுந்ததோ ?" என்று விசாரித்துக்கொள்ளவும் தொடங்கினர்.

இதன்பின் சிவபெருமானாக வந்த வேடர், இனியும் அர்ச்சுனனுக்குக் கோபம் வரச் செய்தல் கூடாது என்று திருவுளம் கொண்டு, அவனுக்கு அருள் செய்ய

ஆகாயத்தில் இடபத்தின்மீது தன் தேவியுடன் காட்சி தந்தார். அர்ச்சுனன் கண்ணீரும் கம்பலையுமாக இருந்து அவரைத் தரிசித்துப் போற்றினன்; அறியாமல் அடித்த தற்கும், அவதூருகப் பேசியதற்கும் மன்னிப்பு அருளு மாறு வேண்டினன். சிவபெருமான் அன்பர்க்கு எளியன் ஆதலின், அர்ச்சுனனை மன்னித்து அவன் வேண்டியபடி பாசுபதாஸ்திரத்தைத் தந்து மறைந்தருளினர்.

இறைவன் மீதுபட்ட அடி எல்லாப் பொருள் களின் மீதும் பட்டதனல் உலகுக்கு ஆதிகாரணன் கடவுள் என்பது இதனல் விளங்குகிறதல்லவா? இதனல் தானே வள்ளுவர்,

' அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு '

என்று அருளிச்செய்தார் ?

## பயிற்சி வினக்கள்

1. கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பது தந்தைக்கும் மகனுக்கும் நடந்த சம்பாஷணையினல் எப்படி விளங்குகிறது ?
2. அர்ச்சுனன் ஏன் தவம் செய்யச் சென்றன்.
3. அர்ச்சுனன் மேற்கொண்ட தவ நிலையைச் சிறிது புலப்படுத்துக ?

4. சிவபெருமான் ஏன் வேடனாகப் புறப்பட்டார்?

5. சிவபெருமானுக்கும் அர்ச்சுனனுக்கும் நடந்த சம்பாஷணை யாது?

6. கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பது எப்படித் தெரிகிறது?

7. "அகரமுதல" என்ற குறட்பாவை நன்கு விளக்குக.

## 2. இல்லை என்னாது ஈக

உலகில் மக்கள் செல்வத்தைப் பெற்றுப் பயன் இல்லை. அச் செல்வத்தினால் பெறக்கூடிய பயனை அறிந்து அதனைப் பயன்படுத்தினால்தான் செல்வத்தைப் பெற்றதனால் ஏற்படக்கூடிய பயனைப் பெறுவர். செல்வத்தினால் பெறக்கூடிய பயன்கள் பலவானாலும் சிறப்பாகச் செல்வத்தினால் புண்ணியத்தைப் பெறுதலே சாலவும் பெருமை தருவதாகும். புண்ணியம் எப்போது கிடைக்கும்? வறுமையுற்றவர் தமக்கு இல்லாத காரணத்தால் வந்து கேட்கும்போது இல்லை என்னாமல் கொடுத்து வந்தால்தான் புண்ணியம் கிடைக்கும். இன்னமும் மேலாகச் சொல்லப்போனால், ஈவதைக் கடமையாகக் கொள்ளவேண்டுமே அன்றிப் புண்ணியம் கருதி ஈகின்றோம் என்ற எண்ணமும் இல்லாதிருத்தலும் சிறப்பினும் சிறப்பாகும். தம் வாயால் இல்லை என்று கூறாமல் ஈயவேண்டும். இந்தப் பண்பு உடையவரே நற்குலத்தவர் என்பது வள்ளுவர் கருத்து. இவ்வாறு இல்லை என்று கூறாது ஈயும் பண்பு நற்குலத்தவர்பால் தான் உண்டு என்றும் கூறுகிறார். இதனால் நற்குலத்தவராக அமைய விரும்பினால் இல்லை என்னாது ஈயவேண்டும் என்பது பெறப்படுகிறதல்லவா? இதனை உதாரணத்தால் பார்ப்போமாக.

திருநின்ற ஊர் என்பது ஓர் ஊர். இது இக்காலத்தில் தின்னனூர் என்று வழங்கப்படுகிறது. இவ்வூர் குடிவளத்திற்குக் குறைவற்றது. இங்குப் பூசலார் நாயனார் என்னும் ஓர் அந்தணப் பெரியார் அமைத்த ஆலயமும் உண்டு. இது ஹிருதாலயம் என்று கூறுப்படுவது. ஆழ்வார்களின் பாடல் பெற்ற வைணவத்தலம் ஒன்றும் ஈண்டு உண்டு. இதனால் இத்தலத்தில் சைவ வைணவர்கள் கலந்து கடவுளடி பணிந்து வாழ்ந்து வந்தனர் என்பது பெறப்படுகிறதல்லவா?

இத்தகைய பெருமைக்கு உறைவிடமான திருநின்றவூரில் காளத்தியப்ப முதலியார் என்பவர் ஒருவர் கண்யமாய் வாழ்ந்து வந்தார். செல்வத்தில் ஸ்ரீமானாயும் இருந்தார். இவருக்கு நிலபுலன்கள் நிரம்ப இருந்தன. செல்வத்தில் இவர் சிறந்து விளங்கிய காரணத்தால் இவரைக் குபேரர் என்றும் அங்குள்ளார் கூறி வந்தனர். குபேர சம்பத்துடைய இவர் தம்மை அடையும் வறுமையால் வாட்டமுற்றவர்கட்குக் குறைவற ஈந்து குதூகலம் உற்றும் வந்தனர். எந்த நேரத்தில் எவர் வந்து ஏதைக் கேட்பினும் இல்லை என்னாது ஈந்து இன்பம் துய்த்து வந்தனர். இந்தக் காரணத்தால் இவரைக் கர்னமகாராஜன் என்றும் கழறி வந்தனர். ஈபவர் கிடைத்தால் எவர்தாம் இவரை நாடாதிருப்பர்? மரம்பழுத்தால் வௌவாலை வா, என்று இரந்து அழைக்க வேண்டுவதில்லை அல்லவா? பல பக்கங்களிலும் இருந்து பல ஏழை

எளியவர்கள் இவர்பால் வந்து பொருளைப் பெற்றுச் சென்றனர்.

இவ்வாறு சிறிதும் சளைக்காமல் ஈந்து வந்த இந்தக் காளத்தியப்ப முதலியார்க்கும் நாளுக்கு நாள் வறுமை ஏற்படலாயிற்று. செல்வம்தானே! அதாவது ஓர் இடத்தில் நிலைத்து நிற்காமல் செல்வோம் என்று கூறிக் கொண்டு போவதுதானே! அந்த முறையில் வளப்பம் மிக்க செல்வம் மெல்ல மாறிவந்து விரைவில் வறுமைப் பதம் இவரை வந்தடைந்தது. தமக்கு இருந்த மாடு கன்றுகளை விற்றுவிட நேர்ந்தது. வீடு வாசல்களையும் விலைப்படுத்தும் நிலை ஏற்பட்டது. இவ்வாறான தரித்திரம் ஏற்பட்ட காலத்திலும் தம் சீரிய செயலாகிய ஈயும் கடப்பாட்டில் இவர் சிறிதும் சளைத்தவரல்லர். தம்மால் ஆன பொருளுதவியினைத் தாராளமாகவே செய்து வந்தார். இப்படிக் கொடுத்துக்கொண்டு வந்தால் இன்னமும் நமக்கு வறுமை வந்துறுமே என்று எண்ணினார் இல்லை. ஈவது, ஈவதனால் இசையுடன் வாழ்வது இவற்றைத்தவிர்த்து மக்கட்குச் சிறந்த ஊதியம் வேறொன்றும் இல்லை என்பதே அவரது சீரிய கருத்து. ஆகவே, காளத்தியப்ப முதலியார், இந்த நிலையில் செல்வத்தில் சிறந்தும் பின்னர் செல்வம்அற்ற நிலையிலும் தம்மாலான உதவியினை உதவி வாழ்ந்துவர லாயினர்.

நாவின் கிழத்தியாம் கலைமகள் இருக்கும் இடத்தில் செல்வக்கிழத்தியாம் இலக்குமி நிலைத்திருப்பது நாட்டில்

அரிது. இதற்குக் காரணம் கூற வருபவர் மருகியும் மாமி யும் ஒற்றுமையுடன் இருப்பது அருமை என்பர். அதா வது திருமாலின் திருமகனார் பிரமதேவர்; அப்பிரமதேவ னார் மனைவியார் சரஸ்வதி. திருமாலின் இல்லக்கிழத்தி இலக்குமி. இந்த முறையால் கலைமகள் இலக்குமிக்கு மருகிதானே? இதைத்தான் சுருக்கமாக "நாவின்கிழத்தி உறைதலால் சேராளே பூவின்கிழத்தி புலந்து" என்று புலவர்கள் புகலத் தொடங்கினர். இதனைப் புலவர்கள் வாழ்க்கை கொண்டும் புகன்று விடலாம் அல்லவா? புலவர்கள் பலர் வறுமையால் வாட்டம் உற்றுத்தானே வாழ்கின்றனர்?

ஒரு புலவர் தாம் எவ்வளவு கல்வியால் சிறப்புற் றிருந்தும் வறுமையால் பெரிதும் வாட்டமுற்றிருந் தனர். தம் இல்லம் வறுமைக்கு உறைவிடமாக இருந் தது. எவ்வளவோ பொறுமையுடன் தம் வறுமையினை அக்கம்பக்கத்திற்கும் வெளிப்படுத்தாத நிலையில் ஒருநாள் உண்டும் பலநாள் உண்ணாதும் வாழ்ந்து வந்தார். என்ற லும் அவரை வறுமை சும்மாவிடவில்லை; அவரை ஏதேனும் எவரிடமேனும் சென்று பெற்றுவருமாறு தூண்டித் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருந்தது. இந்தக் காரணத்தால் புலவர் சிகாமணியாருக்கு, இல்லை யென்னாது ஈயும் கடப்பாட்டை மேற்கொண்டு எவர்க் கும் ஈந்து புகழை ஈட்டும் திருநின்றவூர் காளத்தியப்ப ரது நினைவு வந்துற்றது. ஆகவே, ஒருநாள் புலவர்

காளத்தியப்பரைக் காணப் புறப்பட்டனர். புலவர் இருந்த ஊருக்கும், காளத்தியப்ப முதலியார் வாழ்ந்த ஊருக்கும் இடையில் பல கல் தொலைவு இருந்தமையால் நடந்தும் வழி மாளவில்லை. மாலையும் வந்துற்றது. இருளும் சூழ்ந்தது. "இதற்குமேல் சென்று பயனில்லை. நாளை காலை அவரைச் சந்திப்போம்" என்ற எண்ணத்தினராய் வழியில் இருந்த ஒரு சத்திரத்தில் தங்கினர். இது நிற்க,

திருநின்றவூர் காளத்தியப்ப முதலியார் வறுமை அளவுக்கு மீறிவிட்டது. அவர் தமக்கு வறுமை மிஞ்சி நின்றது குறித்துக்கூட வருந்தவில்லை. தம்மை யாரேனும் அணுகிவந்து கேட்பின், இல்லை என்று சொல்ல வேண்டுமே என்ற வருத்தமே மேலிட்டது. அதைவிட "நாம் அவர்கள் கண்ணுக்கு அகப்படாமல் எங்கேனும் போய்விடுவதே சாலப் பொருத்தமாகும்" என்று தீர்மானித்தவராய்த் தாமும் தாம் குடியிருந்த வீட்டை விட்டு வெளிக்கிளம்பினார். நீள நடந்துவந்தவர்க்குக் களைப்பும், இதற்கிடையில் இருளும் சூழ்ந்து கொண்டமையினால், வறுமையுற்ற புலவர் எந்தச் சத்திரத்தில் தங்கி இருந்தனரோ அந்தச் சத்திரத்தில் தாமும் வந்து தங்கலானார்.

புலவரும் முதலியாரும் சத்திரத்தின் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தனர். புலவர்க்குத் தம் பக்கலில் படுத்திருப்பவர் காளத்தியப்ப முதலியார் என்பது தெரி

யாது. முதலியாருக்கும் தம்மருங்கு படுத்து இருப்பவர் புலவர் என்பது தெரியாது. முதலியார் ஏதேதோ எண்ணமிட்டுக்கொண்டு உறங்காது கண்ணை மட்டும் மூடிக்கொண் டிருந்தனர். புலவரும் உறக்கம் கொள்ளாது பசி தம்மை வாட்ட வருந்திக்கொண்டு இருந்தார். பசிக்கொடுமை அவரைச் சும்மா இருக்கவிடவில்லை. மிகவும் தொந்தரவு செய்ய ஆரம்பித்தது. அந்தோ பாவம்! அவரால் அந்தச் சமயம் என்ன செய்யமுடியும்? அவர் புலவர் ஆதலின், அந்த இயல்பின்படி, தம்மை வருத்தும் வறுமையுடன் உரையாடுபவர்போல, ஒரு கவியினை அப்பொழுது பாடத் தொடங்கினர். அக்கவியின் பொருளாவது:—“ஏ வறுமையே! நிழல்போல என்னை விடாது பற்றிக்கொண்டு வருகின்றாயே! உனக்கு என்னை விட்டு நீங்கும் காலம் அணுகிவிட்டது. நான் பொழுது விடிந்ததும் நாளை காலை திருநின்றவூர் வள்ளல் காளத்தியப்ப முதலியாரைப் பார்க்கப்போகிறேன். அவரைப் பார்க்க வேண்டியதுதான் தாமதம்; அவர் எனக்கு என் வறுமைதீரப் பொருள் உதவி செய்வார். அதன் பின் நீ எங்கே? நான் எங்கே? இன்றைக்கு மட்டும் கொஞ்சம் பொறுத்துக்கொள்” என்பது. இதனைக் கேட்டார் காளத்தியப்ப முதலியார். படுத்திருந்த முதலியார் எழுந்து உட்கார்ந்தார். புலவர் தோற்றத்தை உற்று நோக்கினர். புலவர் உண்மையில் வறுமைக்கு உறைவிடமாய் இருந்ததையும் அறிந்தார். “இவர் நம்மை நாடி நம் ஊருக்குச் செல்வாரே!

இவ்வளவு உறுதியுடன் செல்லும் புலவர்க்கு நாம் இல்லை என்பது தெரிந்ததும் எவ்வளவு வருத்தம் ஏற்படும். எதுவரினும் வருக. இனி நாம் இங்கு இருத்தல் கூடாது. இவர் வருவதற்குமுன் நாம் அங்கு இருந்து இவரை வரவேற்கவேண்டும்.'' என்ற எண்ணத்தவராய் அப்பொழுதுதே அவ்விருளில் புறப்பட்டுத் தம் இல்லத்தை யடைந்தார்.



விடியற்காலம் வந்துற்றது. புலவரும் எழுந்தார். திருநின்றவூர்க் காளத்தியப்பர் ஊரை நாடி அவரையும் கண்டார். முதலியார் புலவரை இன்முகம் காட்டி வரவேற்றார். உணவளித்து உபசரித்தார். இதற்குப்பின் பொருள் தந்து போகச்செய்ய வேண்டுமே! இதற்கு

என்ன செய்வார்? தம்மிடம் பொருளோ இல்லை. இல்லை என்று சொல்லவும் இவர்க்கு வாய் வராது. ஆகவே, இவ்வாறு இல்லை என்று சொல்வதைவிட உயிரைவிடுவதே நல்லது என்றே தீர்மானித்தார். இல்லத்தின் பின்புறமுள்ள தோட்டத்தில் பாம்புப்புற்று ஒன்று இருந்தது. "அதில் கையை விட்டேனும், அரவு தீண்டி இறப்போம்" என்று தம் கையை அப்புற்றில் விட்டார். தருமம் தலைகாக்கும் அல்லவா? அப்புற்றில் இருந்த பாம்பு அவரைத் தீண்டாமல் தன் நாகரத்தினத்தை அவர் கையில் இட்டது. முதலியாருக்கு ஆச்சரியமாகி விட்டது. "இது இறைவன் திருவருள் போலும்!" என்று எண்ணினர். அதைச் செல்வர் ஒருவருக்கு விற்றுப் பெரும் பொருள் பெற்றார். அந்தப் பொருளில் சிலவற்றைத் தம்மை நாடிவந்துற்ற புலவர்க்கு ஈந்து போகவிட்டார். பார்த்தீர்களா! முதலியாரது வள்ளன்மையினை. இதனால்தான் வள்ளுவனர்,

'இலம்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலமுடையார் கண்ணே உள'

என்று அருளிச் செய்தார்.

பயிற்சி வினாக்கள்

1. நற்குலத்தவர் என்று யாரைச் சொல்லலாம்? ஏன்?

2. காளத்தியப்ப முதலியார் யார்? அவரைப்பற்றி நீ அறிந்தவை யாவை?

3. “ காவின் கிழத்தி உறைதலால் சேரானே பூவின் கிழத்தி ” என்னும் இதனை நன்கு விளக்குக.

4. புலவர் ஏன் சத்திரத்தை அடைந்தார்?

5. சத்திரத்தில்இருந்த முதலியார் ஏன் உடனே புறப் பட்டுப் போய்விட்டார்?

6. முதலியார் எப்படித் தம் கொள்கையினைத் தட்டுத் தடையின்றி நடத்தினர்?

# 3. செய்ந்நன்றி மறவாமை

மக்கள் மேற்கொண்டு ஒழுகவேண்டிய பண்புகள் பலவுண்டு என்பது நம் யாவர்க்கும் தெரிந்ததே ஆகும். அவற்றுள் கூடுமானவரையில் எல்லா நற்குணங்களையும் கொண்டு ஒழுகுதல் சாலச் சிறந்ததாகும். இவ்வாறு யாவரும் நற்பண்புகள் பலவும் பெற்று ஒழுகவேண்டும் என்பதற்காகத்தான் உங்கட்கு இந்தச் சிறுநூல் மூகமாகக் கைக்கொள்ளவேண்டிய ஒழுக்கங்கள் பலவும் எடுத்து இயம்பப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் செய்ந்நன்றி மறவாத நற்பண்பு பற்றிக் கூறப்படுகிறது. வள்ளுவர் ஒவ்வொரு கருத்தையும் நன்கு வற்புறுத்திக் கூறவல்லவர் அல்லவா? அந்த முறையில் இங்குச் செய்ந்நன்றி மறவாமையைக் குறித்துச் செப்பும்போது, எந்தவிதமான உதவிகளை மறந்தவர்கட்கும், அப்படி மறந்ததனால் வரக்கூடிய பாவத்திலிருந்து தப்பிப் பிழைக்க வழி ஏற்படும். ஆனால், பிறர்செய்த நன்றியை மட்டும் மறந்தவர்கட்கு வரும் பழி பாவங்களில் இருந்து தப்பிப்பிழைப்பது அரிது." என்று கூறுகிறார். இதனால் நன்றி மறப்பது நன்று அன்று என்பது பெறப்படுகிறது. அல்லவா? இப்பண்பு அரக்கரிடத்திலும் அமைந்து இருக்கிறது என்பது கீழ்வரும் நிகழ்ச்சியினின்றும் அறிந்து கொள்ளலாம்.

கும்பகர்ணன் என்பவன் இலங்கை வேந்தனின் நேர் இளையவன். இராமாயணத்தில் ஏற்றம்பெறுதற்கு உரியவன் பேர் உறக்கத்திற்குப் பேர்போனவன். இக்காலத்திலும், எவனேனும் நீண்டநேரம் உறங்குவானாயின், அவனைக் கும்பகர்ணன்மாதிரித் தூங்குகிறான் என்றும் கூறுவதைக் கேட்கலாம். ஸ்ரீ ஆண்டாள் அம்மையாரும், தமது திருப்பாவையாம் திவ்விய நூலில், பள்ளிகொண்டு உறங்கும் ஒருத்தியைக் கண்டு, தோழீ, நீ இவ்வாறு உறங்குகின்றாயே,கும்பகர்ணன் தான் இறந்தபோது,தன் இயல்பாகிய உறங்கும் தன்மையினை உனக்குக் கொடுத்துவிட்டுச் சென்றானோ? என்று நகைச்சுவை ததும்ப நவின்றும் உள்ளார். கும்பகர்ணன் உறக்கம்தான் பெரிதும் உடையான் என்று கூறிவிடலாமா? அவன் சிறந்த உடல் வன்மையும், உளப் பண்பையும் பெற்றவன். மந்திராலோசனை சபை நடந்தபோது, அரக்கர் கோனும், இராவணன் தனக்குத் தன் உள்ளக்கிடக்கை இன்னது என்பதை உரைக்குங்கால் "குற்றமற்ற பிறர்க்கு வாழ்க்கைப்பட்ட மங்கையினைச் சிறையில் அடைக்கின்றோம். ஆனால், அதே சமயத்தில் புகழை விரும்புகிறோம்; மேலும் நாம் மானத்தைப் பற்றிப் பேசுகிறோம். இடையிடையே உலக இன்பத்தையே விடாப்பிடியாகப் பிடித்துள்ளோம்; நாம் தோள்வலி, மனவலி முதலானவற்றைப் பெற்றிருந்தும், மானிடர்களாகிய இராம இலக்குவர்க்கு அஞ்சுகிறோம். வெகு நன்றாய் இருக்கிறது நமது வீரம்! சிரேஷ்டர்கள் செய்யும் செயலை அன்றோ செயல் வேண்டும்; அதனை நீ

செய்திலேயே! நம் குலத்துக்குச் சிறுமையை அன்றோ தேடிக்கொண்டாய்? ஆகவே, சீதையை இனியாகிலும் விடுதலை செய்" என்று கூறியுள்ளான். இவ்வாறு இயம்பியவன் போர்க்களம் போகாது பின்னிட்டானா? அது தான் இல்லை. தன் கருத்தைக் கூறினன். அதன்பின் இராம இலக்குவருடன் பொருது மடியவே உறுதி கொண்டான். போரும் மூண்டது. போர் நடந்தபோது கும்பகர்ணனது வீரதீரச் செயலையும் கண்ட இராமன் அவனையும் தன்பால் எவ்வாறேனும் இணைத்துக் கொள்ள எண்ணம் கொண்டான். இவ்வெண்ணம் தவறான எண்ணம் அன்று. மன்னர்களாய் இருப்பவர் தாம் வெற்றி காண்பதற்குக் கையாளும் முறைகளுள் இதுவும் ஒன்று.

ஆகவே, கும்பகர்ணனையும் தன்னிடம் சேர்த்துக் கொள்ளத் தன்னைச் சூழ இருந்தார் அனுமதியினைப் பெற்றுக் கும்பகர்ணனுக்குக் கூறுவன கூறி அழைத்து வருமாறு தூதுவரை அனுப்ப உளங்கொண்டான். இராமன் அது சமயம் யாரைத் தூது போக்கினல் துயரம் இன்றி இவ்வெண்ணம் இனிதின் நிறைவேறும் என்று நீள நினைந்துகொண்டிருந்தான். இறுதியில் விபீடணன் தானே கும்பகர்ணன்பால் தூது போவதாகக் கூற அதனை அனைவரும் ஒவ்வினர்.

விபீடணன் இராமனிடம் விடைபெற்றுக் கும்பகர்ணன் தங்கி இருந்த பாசறையினை அணுகினன்; இவனது

வருகையினைக் காவல் காப்போர் கும்பகர்ணனிடம் கூறி னர். இவ்வல் வருகை கேட்ட இளஞ்சிங்கமாம் கும்பகர் ணன் பெருமகிழ்வு கொண்டு உள்ளே வருமாறு பணிக்க, விபீடணன் உட்சென்று தன் முன்னோன் தளிர் அடிகளில் வீழ்ந்து பணிந்தான். கும்பகர்ணனும் விபீடணனைத் தன் கைகளால் வாரி எடுத்துத் தன் முன்னமர்த்தி " தம்பி, நீ ஏன் இங்கு வந்தனை ? நம் குலத்தில் ஒருவனாகிலும் உயிர் இழக்காது தப்பினன் என்று உளம் உவந்து இருந்தேன் ; அவ்வுவகை ஒழிய நீ ஏன் மீண்டும் எம்பால் வந்து சேர்ந்தனை ?" என்று கண்ணீரும் கம்பலையுமாக வினவினன். இந்த அளவில் கூறித் தன் கூற்றை முடித்திடாமல் கும்பகர்ணன், " விபீடணா ! நீ இரகு குலதிலகனை இராமனை அடைக் கலம் புகுந்து பெற்றபேறு தேவர்கட்கும் கிடைத்தற் கரியதாயிற்றே. இச் சிறப்பை நீ அடைந்தது குறித்து யான் எவ்வளவோ மகிழ்ந்து இருந்தேனே. நாங்கள் காலன் வாயில் இருந்து களிக்கின்றோம். அமுதுண்டு வாழும் நீ நஞ்சுண்டு வாழ எண்ணலாமா ? நம் மரபு அரக்கர் மரபு என்று அறைவார் அறைக. உண்மையில் நம் மரபு புலத்தியர் வழிவந்த மரபு. அம் மரபு அடியோடு மாய்ந்துபோகாமல் இருக்க நீ ஒருவனா கிலும் உய்ந்துபோனாய் என்று அன்றோ யான் எண்ணி னேன். என் வாய் சோரச் செய்தனையே; என் உள்ளம் வருந்துகிறதே. இராம இலக்குமணர்கள் அபயம் என்று அடைந்த உன்னை விட்டுவிட எண்ணுவரே. அவர்களை நீ

சரண்புக்கமையால், நீ இறப்பையும் பிறப்பையும் எளி தில் போக்கிக்கொண்டாய் அன்றோ ? இப்படி இருக்க நீ ஏன் வந்தாய் ! பிரமனால் தவம் செய்து நீதி, தருமம் அறிவு ஆதியவற்றைப் பெற்றாய். அழியாத ஆயுளை யும் பெற்றாய். இவ்வளவு பெற்றும் நீ ஈண்டு வந்துற் றாயே? இன்னமும் இனப்பண்பு விட்டொழிந்திலதோ ?"



" விபீடணா ! நாங்கள் இராமன் அம்பால் இறத்தல் உறுதி. அவ்வாறு இறந்த பிறகு எள்ளும் நீரும் இறைக்க நீ ஒருவன் உயிர் பிழைத்து உள்ளாய் என்று எண்ணிய எண்ணத்தில் இடிவிழுந்தாற்போல இறப்பை எதிர் நோக்கி நிற்கும் எம்பால் வந்துற்றனையே ? நீ யன்றோ இலங்கைக்கு மன்னன் ஆகப் போகின்றாய் !" என்று

மாசற்ற தன் மனத்தில் எழுந்த மாற்றங்களைக் கும்பகர்ணன் கூறியிட்டான்.

இவ்வாறு தன் தமையனுன கும்பகர்ணன் கூறிய மொழிகளைக் கேட்ட விபீடணன், "அண்ணலே! யான் சில உரை பகர உன்பால் வந்தேன். அஞ்ஞான இருள் மூடிய என்னை ஏற்று இன்னருள் சுரந்த இராமனை நீயும் சாரின், அவன் உனக்கும் அருள் புரிவான்; அப்படி நீ அவனை அடைக்கலம் புகுந்தால் உன் பிறவியும் ஒழியும். இவ்வுலக வாழ்க்கையும் ஒழிந்து வீட்டின்பம் வந்தெய்தும். எனக்கு அவன் பின்னுல் இலங்கையரசைத் தருவதாகக் கூறிய அரசை உனக்கு யான் அளித்து, உன் அடிதொழுது உன் ஏவல் பூண்டு வாழ்வேன். நம் உற்ருர், உறவினர், அன்றித் தாய் தந்தையர் ஆனுலும், தீயவை செய்வாராகில் அவற்றிற்கு நாம் உடந்தையாக இருக்கலாமா? தூய செயலை நாம் மேற்கொண்டால் பழிவந்து சாருமோ? ஒருவன் தீங்கு செய்தால், அவனேடு தீங்கு செய்யாதவர்களும் கெட்டொழிதல் முறையாகுமா? நம் உடலில் ஒருபுண் உண்டாயின் அது நம் உடலில் தோன்றியதுதானே என்று நாம் சும்மா இருந்துவிடுகின்ருேமா? அதனை அறுத்து மருந்திட்டு ஆற்றச் செய்கின்ருேம் அன்ருே? கடலில் காயத்தைக் கரைத்துப் பயன் உண்டா? இது அறிவுடைச் செயலாகுமா? நீ மட்டும் இராமனைச் சரண் புக்கால் முனிவர்கள் கருணை வைப்பர். மூவுலகிலும்

உனக்குப் பகை வராது, அழிவும் வராது. தேவர்கள் நண்பர் ஆவார். இராமனே உன்மாட்டுக் கருணை வைத்து உன்னை அழைத்து வருமாறு என்னைப் பணித் தான். ஆகவே புறப்படுக" என்று கூறினன். விபீடணா! "நீ கூறுவன அனைத்தும் உண்மையே. ஆனால், உன் வார்த்தைகளுக்கு இணங்க என் மனம் இடம் கொடுக்க வில்லை. கேவலம் நீர்மேல் எழுதிய எழுத்துப் போல நிலையற்ற வாழ்வு கருதி என்னைப் பலநாள் வளர்த்து உண்டியும் உறையுளும் தந்து போருக்கு அனுப்பிய அண்ணன் பொருட்டுப் போரில் உயிர்கொடாமல் இராம னைச் சரண் புகேன்; இவ்வாறு செய்வேனாகில் யான் செய்ந்நன்றி கொன்ற பாவத்திற்கு ஆளாவேன். யான் செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுதான் எனக்கு ஆண்மை யும் புகழும் ஆகும்; யான் எமனையும் வெற்றி பெற்று வெற்றி காணத்தக்க வலியன். இத்தகைய யான் பகை வனைக் கும்பிட்டு வாழ எண்ணேன். அந்தந்தக் காலத்தில் ஆகவேண்டியது நடந்தே தீரும். அழிவது அழிந்தே தீரும். நாம் எவ்வளவு தீவிரமாக அவ்வாறு நடவா திருக்கப் பாடுபட்டாலும் நிற்கமாட்டாது" என்று கூறினான். இவ்வாறு கும்பகர்ணன் கூறியது ஏன்? அவன் செய்ந்நன்றியை மறத்தல் கூடாது என்பதற் கன்றோ? ஆகவே நாமும் நன்றிமறவாது இருத்தல் வேண்டும்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

## பயிற்சி வினாக்கள்

1. மக்கள் எப்படி வாழ எண்ணவேண்டும்?
2. நன்றியை ஏன் மறக்கக் கூடாது?
3. கும்பகர்ணனைப் பற்றிச் சிறு குறிப்பு எழுது.
4. விபீடணனைக் கண்டதும் கும்பகர்ணன் என்ன கூறினன்?
5. ஏன் விபீடணன் வந்ததாகக் கும்பகர்ணனிடம் கூறினன்?
6. கும்பகர்ணன் தன் கடமை உணர்ச்சியை எப்படிக் காட்டினன்?
7. "எந்நன்றி கொன்ருர்க்கும்" என்னும் குறளை நன்கு விளக்குக.

## 4. தோன்றில் புகழொடு தோன்றுக

உலகில் உள்ள பொருள்கள் எவையும் நிலைபேறு டையவை அல்ல. அவை யாவும் அழிந்து ஒழிந்து போகக்கூடியவை. தோன்றின மறையும் என்பது நம் முன்னோர் வாக்கு. "இப்படி அழிந்து ஒழிந்தால் நிலை பேறுடைய பொருளே இல்லையோ இவ்வுலகத்தில்?" என்று வினவலாம். அவ்வாறு நிலைபேறு இல்லாத பொருளே இல்லை என்று கூறிவிடவும் முடியாது. அந்த நிலை பேறுடைய பொருள் எது என்று அறிய உமக்கு அவா எழுகின்றதன்றோ? நிலைபேறுடைய பொருள் தான் புகழ் என்பது. பூத உடலாகிய நம் உடம்பு அழியினும், நுண் உடம்பாகிய புகழ் உடம்பு அழியாது. அத்தகைய அழியாத புகழை நாம் அடைய எவ்வாறேனும் பாடு படவேண்டும். அவ்வாறு நாம் புகழைத்தேடாது வெறும் மக்கட் பிறப்பு மட்டும் பெற்றிருந்தால் பலனில்லை. அதைவிடப் பிறவாமல் இருத்தலே நல்லது. இதுதான் வள்ளுவர் கூறும் கருத்துமாகும். முன்னர்ப் புகழை நிலை நிறுத்திய பெரியவர்கள் பலருள் ஒருவரை ஈண்டுப்பேசின் திருவள்ளுவர் கூறிய கருத்தின் உண்மை புலனாகும் அல்லவா!

பாண்டிய நாடு மிகப் பழமையான நாடு. அந்நாட்டின் துறைமுகங்களில் ஒன்று கீழ்க்கரை என்பது.

இதனைக் கீழைக்கரை என்றும் கூறுவர். இந்தக் கீழ்க் கரைப் பட்டினத்தில் இற்றைக்குச் சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்ச் சீதக்காதி என்னும் பெயருடைய முஸ்லிம் அன்பர் தோன்றினர். இவரது பெற்றோர் இவருக்கு இட்ட பிள்ளைத் திருப்பெயர் ஷெய்கு அப்துல்காதர் மரக்காயர் என்பது. இப்பெயர் நீளமாக இருக்கிறது அல்லவா? மேலும் இவர் தமிழ் அறிஞர்கள் பலராலும் பாடப்பட்ட பேறு பெற்றவர். அப்படிப் பாடிய தமிழ்ப் புலவர்கட்கு இவ்வாறான நீண்ட பெயரைத் தம் பாடலில் அமைப்பது சிறிது சிரமமாக இருந்தமையால், ஷெய்கு அப்துல்காதர் மரக் காயர் என்னும் பெயரின் மருவு மொழியாகச் சீதக்காதி என்றே கொண்டு தம் தம் பாடலில் அமைத்துக்கொண் டனர். அப்பெயரே எல்லாரும் அறிந்துகொள்ளும் முறையில் தமிழ் நாட்டில் நிலைத்துவிட்டது.

சீதக்காதி அன்பர், பிறந்த முதற் கொண்டே, இவர் பேரும் புகழும் பெற்றுத் திகழக்கூடியவர் என்பதை அறி விக்கும் முறையில் வளர்ந்து வந்தார். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் அல்லவா? சீதக்காதி நன்கு கல்வி பயின்றார். அடக்கம், ஒழுக்கம், அன்பு, ஈகை முதலிய பண்புகளுக்கு உறைவிடமாகத் திகழ்ந்துவர லானார். இந்தப் பண்புகள் இவர்பால் அமைந்து கிடந் தமையின் இவரைத் தத்துவஞானிகளும் விரும்பினர்.

இவ்வாறு விரும்பிய ஞானிகளுள் ஒருவர் ஷெய்கு சதக்கத்துல்லா அவர்களும் ஆவர். இப்பெரியார் உண்மைத் துறவி. அரபி மொழியினை ஐயம் திரிபர ஓதி உணர்ந்தவர். இத்தகைய ஞானியார் வாழ்ந்த காலத்தில் இருந்த ஔரங்கசீப் என்பார் வடநாட்டை ஆட்சி புரிந்து வந்தார். அம்மன்னர் தம் அரசை அலங்கரிக்கத் தக்க அரசப் பிரதிநிதி ஒருவர் வேண்டுமென்ற எண்ணத்தினால் சதக்கத்துல்லாவுக்கு ஒரு கடிதம் போக்கித் தம் நாட்டு அரசப் பிரதிநிதியாக இருக்குமாறு வேண்டினார்.

சதக்கத்துல்லா ஒரு சிறந்த ஞானி என்று முன்னர்க் குறிப்பிட்டோம் அல்லவா ? அவர்க்கு அரசு பிடிக்குமா? அனைத்தும் அழியக்கூடியவை என்று கருதும் அவர்க்கு இப்பதவி எப்படிப் பிடிக்கும் ? ஆகவே அப்பணியைத் தாம் ஏற்க மறுத்துத் தமக்குப் பதிலாகச் சீதக்காதியை ஏற்று அவ்வரசப் பிரதிநிதிப் பதவியினை அளிக்குமாறு ஔரங்கசீப்புக்கு ஆணையிட்டனர். இவ்வாணை ஞானியாரிடம் இருந்து வந்த ஆணையாதலின், ஔரங்கசீப்பும் எந்தவிதமான தடையும் சிறிதும் கூறாது சீதக்காதியைத் தமது அரசப் பிரதிநிதியாக ஔரங்கசீப் அமைத்துக் கொண்டார். வங்காளத்தின் மன்னராகச் சீதக்காதி நியமிக்கப்பட்டார். வினைவலி, தன்வலி, மாற்றான்வலி, துணைவலி முதலியன அறிந்து அரசபதவியினை அழகுறச் சீதக்காதி அன்பர் ஏற்று நடத்தி வந்தார். ஆனால், இப்பத

வியினை இவர் நீண்டநாள்ஏற்று இன்புற்றிலர். இவர்க்கு வங்கநாட்டின் சீதோஷ்ண நிலை பிடிக்கவில்லை. இவர்க்குப் பலவிதத்திலும் உடலுக்கு ஊறு செய்வனவாக இருந்தது. ஆகவே, அவ்வரசப்பிரதிநிதி பதவியினை விடுத்துத் தம் பிறப்பகமாகிய கீழ்க்கரைக்கே வந்து சேர்ந்துவிட்டார்.

சீதக்காதி வங்காளத்தில் அரசபதவி பூண்டு ஆட்சி புரிந்து அனுபவம் பெற்றிருந்தார் அல்லவா? இதனை இவர் காலத்து இராமநாதபுர விசயரகுநாத சேதுபதி அவர்கள் கேள்வியுற்றார். உடனே சீதக்காதியை அழைத்துவர ஆளைப் போக்கினர். சீதக்காதி இராமநாதபுரம் வந்துற்றதும், அவரை விஜயரகுநாத சேதுபதி மன்னர் சீதக்காதியை அமைச்சராகவும், அன்பராகவும் அமர்த்திக் கொண்டார். இப்பதவி ஏற்ற சீதக்காதி அன்பர் இராமநாதபுரக் கோட்டையினை அழகுற அமைத்துக் கட்டினார். இதனைக் கண்டு வியந்த சேதுபதி மன்னர், அமைச்சராகவும் அன்பராகவும் கொண்ட சீதக்காதியைத் தம் தம்பியாகவும்கருதி "விஜயரகுநாதர்" என்னும் பட்டத்தையும் தந்து பாராட்டினர். இப்பட்டம்பெற்றபின் இவர் "ஷெய்கு அப்துல்காதர் விஜயரகுநாதப் பெரியதம்பி மரக்காயர்" என்றும் அழைக்கப்பட்டார். இவ்வாறு அழைக்கப்பட்டது மக்களிடையே அன்றிப் புலவர்கள் சீதக்காதி என்றே செப்பி வந்தனர். சீதக்காதி இவ்வாறு சீரும் சிறப்பும் பேரும் புகழும்

பெற்று விளங்கினர். செல்வம் பெருவாரியாகக் குவிந்ததும், இவ்வாறு குவிந்த செல்வத்தைத் தாமே துய்க்க வேண்டும் என்று எண்ணிலர். செல்வத்துப் பயனே ஈதல் என்ற சீரிய கொள்கையினராய், தம்மை அடைந்து கேட்ட வறியவர்கள், புலவர்கள் யாவர்க்கும் இல்லை என்னாது ஈந்து வந்தார்.

இவர் வாழ்ந்த காலத்தில் பஞ்சம் ஒன்று தோன்றியது. இதனால் மக்கள் பசியால் வாடினர். இவ்வாட்டம் கண்ட சீதக்காதி பல இடங்களில் அன்ன சத்திரம் கட்டி அன்னதானம் செய்துவந்தார். இவ்வாறு இவர் அன்னதானம் செய்து புகழ்பெற்றனர் என்பதைச் சைவப் புலவராம் படிக்காசுத் தம்பிரான் அவர்கள் ஒரு தட்டிலே பொன் கொடுத்தால் அப்பொன் எடைக்கு நெல்லை விற்கும் காலமாகிய பஞ்ச காலத்திலும் தம் காரியஸ்தர்கள் தடுத்தாலும் அத்தடைகளைப் பொருட்படுத்தாது அன்னதானம் செய்த வள்ளல் சீதக்காதி என்று வாயார மனமாரப் புகழ்ந்து பாடியுள்ளார். இம்முறையில் புகழ்பெற்றுத் தமிழ்மொழி தழைக்கப் புலவர்களையும் ஆதரித்தனர்.

எவ்வளவு இருந்தும் என்ன ? முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பராகி மண்ணுவது உறுதிதானே ? அந்த முறையில் சிறக்க வாழ்ந்த சீதக்காதிக்கும் வாழ்நாள் உலர்ந்தது. அவர்

பூதவுடல் நீத்தனர். அப்படி நீப்பதற்கு முன் தம் உறவினர்களை நோக்கி, "சுற்றத்தவர்களே! நான் இறந்தால், கைவிரலில் உள்ள மோதிரத்தைக் கழற்ருமல் அப்படியே வைத்துச் சவப்பெட்டியில் அடக்கம் செய்து விடுங்கள்" என்று கூறியிருந்தார். அப்படியே உறவினர்கள் செய்தனர். சவப்பெட்டியினை இடுகாட்டில் கொண்டு சென்று புதைத்துவிட்டு வந்தனர்.

சீதக்காதி இறந்தசெய்தி படிக்காசுப் புலவர்க்குத் தெரிந்தது. துடிதுடித்தார் புலவர். ஓடோடியும் இடுகாட்டிற்கு வந்து சேர்ந்தார். சீதக்காதியின் பருவுடல் புதைக்கப்பட்ட இடத்தின் எதிர்நின்று "காயல் பட்டினத்தில் சீதக்காதி தன் புகழ்த்தம்பம் நாட்டி வாழ்ந்தான். இப்படி வாழ்ந்தவன் புலவர்களை ஓட்டாண்டி ஆக்கி, அவர்கள் வாயில் மண்ணைப்போட்டு இச் சமாதிக் குழியில் மறைந்துள்ளானே! இனி இலக்குமி இருந்து யாது பயன்? பூமிதேவி இருந்து பயன் யாது? கலைமகளும் இருந்து பயன் என்ன? நாம்தான் இருந்து பயன் யாது? நாவலர் காவலனும் சீதக்காதி இறந்த பிறகு எம் போன்ற புலவர்களுடைய புலமையும் செத்துப்போயது அல்லவா?" என்ற கருத்துக்களை அமைத்துக் கல்லும் கரையும் முறையில் கவிகளைப் பாடினர்.

இந்தப் பாடல்கள் பாடப்பட்டு நிறுத்திய சிறிது நேரத்திற்கெல்லாம் சவக்குழி பிளந்து சவப் பெட்டியிலிருந்து மோதிரம் இட்ட கை வெளியில் தோன்றியது.




இதன் குறிப்பு "இந்த மோதிரத்தைப் பெற்றுக்கொள்" என்பதாகும். இதைக்கண்ட புலவர்க்குப் பெருவியப்புத் தோன்றியது. புலவர் சன்மானம் பெற அங்குவந்தாரில்லை. தம் அனுதாபத்தைத் தெரிவிக்கவே அங்கு வந்தார். அப்படி வந்த அவர்க்குச் சன்மானமும் கிடைத்தது. இந்தச் செய்தி ஊர் எங்கும் காட்டுத் தீப்போல் பறந்தது. இதனைக்கேட்ட யாவரும் 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்று கூறத் தொடங்கினர். இவ்வாறு சொல்லத்தொடங்கிய தொடர் தொன்று தொட்ட பழமொழியாகவே நின்றுவிட்டது. இவ்வாறு அன்றோ புகழை நிலவுலகில் நிறுத்தவேண்டும்.

'தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று'

## பயிற்சி வினாக்கள்

1. பிறப்பதுண்டேல் எவ்வாறு பிறக்கவேண்டும்?
2. சீதக்காதி என்பவர் யார்?
3. இவருக்கு எப்படி அரசப் பிரதிநிதிப் பதவி கிட்டியது?
4. இவர் எப்படிச் சேதுபதி மன்னரால் சிறப்பிக்கப் பட்டார்?
5. சீதக்காதி வள்ளன்மையுடையவர் என்பது எப் படித் தெரிகிறது?
6. "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்னும் பழமொழி எதனால் உண்டாயிற்று?
7. "தோன்றில் புகழொடு..." என்று தொடங்கும் குறளை நன்கு விளக்கு.

# 5. சாதுவன் அறவுரை

'அறஞ் செயவிரும்பு' என்று அவ்வையார் கூறியுள்ளது நம் அனைவர்க்கும் தெரியும் அல்லவா? அதாவது அறத்தைச் செய்ய ஆசைப்படு என்பதன்றோ இதன் பொருள். இந்தப் பொருள் அறிந்த பலர் "தருமத்தைச் செய்வதாயின் பொருள் - அதாவது பணம் - வேண்டுமே" என்று நினைப்பார்கள். பணம் கொண்டுதான் தருமம் செய்யவேண்டும் என்பது இல்லை. தருமத்தைத் தம் வாயாலும் செய்யலாம்; கையாலும் செய்யலாம். தம் உள்ளூரிலும் செய்யலாம் வெளி இடங்களுக்குச் சென்றால் அங்கும் செய்யலாம். இதனால்தான் வள்ளுவர், "உன்னால் செய்யக் கூடிய அறச் செயலைச் சிறிதும் மறைக்காமல், செல்லும் இடங்களில் எல்லாம் செய்க" என்று கூறினார். இந்தக் குறட்கேற்பச் சாதுவன் என்னும் வாணிகன் தான் வெளியூர் சென்ற இடத்தில் தன் கடமையாக அற உரைகள் கூறித் தீய வழியில் பழகியவர்களையும் நல்வழிப் படுத்திய வரலாறே ஈண்டு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

சாதுவன் என்பவன் குலத்தால் வாணிபர் வகுப்பைச் சேர்ந்தவன். அவன் தன் வாலிபமிடுக்கில் தம் முன்னோர் சேர்த்துவைத்த செல்வங்களைப் பல வழிகளில் செலவுசெய்துவிட்டான். இவ்வாறு செலவு

செய்தபின், மீண்டும் அச்செல்வத்தைத் திரட்டவேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாய்த் தன் மரபுத் தொழிலாகிய வாணிபத்தைச் செய்யத் தீர்மானித்தான். அவ்வாணிபத்தினையும் தன் ஊரில் செய்தால் ஒருவேளை இலாபம் மிகுதியாக ஏற்படாது என்ற எண்ணங் கொண்டு, வெளிநாடு சென்று வாணிபம் செய்து பொருள் ஈட்ட மனம் கொண்டான். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பதுதானே நம் நாட்டுப் பழமொழியும் கூறுகிறது? இந்தப் பழமொழிப்படி கடல் கடந்து கருந்தனம் தேட அவன் எண்ணியதில் தவறில்லை அல்லவா?

சாதுவன் தான் தன்னந்தனியனாய்ப் போகாமல், தன் மரபினர் சிலருடன் கப்பல் ஏறிக் கடல் கடந்து சென்றனன். கப்பல் நடுக்கடலில் சென்று கொண்டிருந்தது. அந்தச் சமயம் ஒரு பெரும்புயல் தோன்றியது. கப்பலை இங்கும் அங்கும் அலைத்தது. இறுதியில் கப்பல் முறியும் நிலை அடைந்து முறிந்தும் போயது. கப்பலில் இருந்தவர்களில் சிற்சிலர் கப்பலில் இருந்த மரக்கட்டைகளைப் பற்றி அருகில் இருந்த கரையை அடைந்தனர். சாதுவனுக்கும் ஒரு கட்டை கிடைத்தது. அவனும் அதனைப் பற்றிக்கொண்டு அருகில் இருந்த ஒரு தீவினை அடைந்தனன்; மெல்ல ஒரு மரத்தடியில் போய்ப் படுத்துக்கொண்டனன். அலையால் அலைப்புண்டு இருந்தமையால் அயர்ந்து தூங்கியும்விட்டான்.

சாதுவன் இறங்கிய தீவு, நாகர் என்னும் மலைநாட்டுச் சாதியர்க்கு உரியது. ஆகவே, அச்சாதியினர் அப்பக்கம் வந்து சேர்ந்தனர். அவர்கள் சாதுவனைக் கண்டதும் மிகவும் சந்தோஷம் கொண்டனர். அவர்கள் கொண்ட சந்தோஷத்திற்குக் காரணம், "இன்று நமக்கு உண்ண நரமாமிசம் கிடைத்தது" என்பதே ஆகும். நாகர்கள் மனிதர்களைக் கொன்று தின்பவர்கள். இந்த எண்ணத்தோடு உறங்கிக்கொண்டிருந்த சாதுவனைத்



தட்டி எழுப்பினர். அவன் எழுந்ததும், அந்நாகர்களைப் பார்த்து, அவர்கள் மொழியில், தான் அந்தத் தீவுக்கு வந்து சேர்ந்த வரலாற்றை எடுத்துக் கூறினன். சாதுவன் நாகர் மொழியில் பேசியதைக் கேட்ட நாகர்கள் கொன்று தின்னும் அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டு,

அவனைத் தம் அரசனுன நாகர் தலைவனிடம் அழைத்துச் சென்றனர்.

நாகர் தலைவன், ஆண்கரடி ஒரு பெண் கரடியுடன் அமர்ந்திருப்பது போல, தன் மனைவியோடு தன்னைச் சுற்றிக் கட்குடங்கள் நிரம்பியிருக்க, எலும்புகள் குவிக்கப்பட்ட உயரிய ஆதனத்தில் அமர்ந்திருந்தான். இந்த நிலையில் கம்பீரமாக வீற்றிருந்த நாகர் தலைவனைச் சாதுவன் கண்டான். நாகர் தலைவனும் சாதுவனுடைய களைப்பையும் இளைப்பையும் கண்டு, தன் ஆட்களை ஏவிச் சாதுவனுக்கு ஊனும் கள்ளும் உதவும்படி கட்டளை இட்டான். இவ்வாறு இட்ட கட்டளையினைக் கேட்ட சாதுவன் இரு கைகளாலும் தன் இரு காதுகளையும் பொத்திக்கொண்டு, " ஆ! கெட்டேன். கள்ளும் ஊனும் எனக்குக் கொடுக்கப் போகின்றீர்களா ?" என்று கூறி, " நாகர் தலைவ! கள்ளையும் ஊனையும் பருகுவதும் உண்பதும் மகாபாவமாகும். இவ்விரண்டும் பெரியவர்களால் நீக்கப்பட்ட செயல்கள் அல்லவா? இவற்றை நீயும் உன் இனத்தவர்களும் பருகுவதும் உண்பதும் கூட அடாதாயிற்றே ? நல்லறத்தைச் செய்க. நல்லறம் செய்தால் நல் உலகு அடையலாம். தீய செயல் செய்தால், நரகத்தை அன்றோ அடைய நேரும் " என்று அறவுரைகளை எடுத்து மொழிந்தான்.

இவ்வாறு சொல்லக்கேட்ட நாகர் தலைவன், "உயிர் நரகலோகம் அடையும் நல்லுலகம் அடையும் என்று

கூறினையே. உயிர் எப்படி உடலைவிட்டுப் போய் இந்த உலகங்களை அடையும்? அதனைக் கூறுக." என்று சாதுவனை வேண்டினன்.

சாதுவன் நாகர் தலைவனை நோக்கி, 'நாகர் தலைவ! உயிர் உடம்பில் இருக்கும்வரை தன் உடம்பில் நிகழும் எல்லாவற்றையும் அறிந்துகொள்ளும் இயல்பினைப் பெற்றதாகும். இது எவ்வாறு தெரிந்துகொள்வது எனில், இவ்வுடலில், உடலைவிட்டு உயிர் நீங்கியதும் உடலைச் சுட்டெரிக்கையில் அவ்வுடல் எந்தவிதமான அசைவும் செய்யாது எரிக்கு இரையாகிப் போகிறது. அவ்வுடலே உயிரைப் பெற்றிருக்கும் போது, சிறுநெருப்புப்படினும் துள்ளித்துடித்துக் குதிக்கிறது. மேலும் நாம் உறங்குகின்றோம். உறங்கும்போது சிற்சில சமயங்களில் கனவு காண்கின்றோம். அக்கனவில் நாம் எங்கெங்கோ சென்று வருகின்றோம். அப்படிச் செல்லும்போது நம் உடல் படுக்கையில்தான் இருக்கின்றது. என்றாலும், பல இடங்களுக்குக் கனவு உலகில் சென்றுகொண்டிருக்கின்றோம். இந்தக் காரணங்களால் உடலில் உயிர் உண்டு என்பதும், அவ்வுயிர் வெளியிடங்கட்குச் சென்று மீளும் தன்மையது என்பதும் புலனாகவில்லையா? இவற்றைக் கொண்டேனும் உயிர், தான் செய்யும் நற்செயல்களுக்கேற்ப நல்லுலகையும் தீச் செயல்களுக்கேற்ப நரகலோகத்தையும் அடையும் என்பதை அறிந்துகொள்" என்று கூறினன். இந்தவாறு சாதுவன் சொல்லக் கேட்ட நாகர் தலைவ

னுடைய மனம் மாறலாயிற்று. சாதுவன் சொன்னவை உண்மை என்பதை உணரலானன். "சாதுவ! நீ பெரிய அறிவாளி. எமக்கான நல்லறங்களை நீ எடுத்துரைத்தாய். என்றாலும், நாங்கள் கள்ளையும் ஊனையும் எப்படி ஒழிப்பது? இவ்விரண்டையும் விட்டால் எங்கள் உயிர் உடலில் பொருந்தி இருக்குமோ? ஆகவே, நாங்கள் உயிர் வாழ்தற்கான அறத்தையும் கூறுக." என்று வேண்டி நின்றான்.

இவ்வாறு நாகர்தலைவன் வேண்டி நிற்பதை உளங்கொண்ட சாதுவன், நாகர் தலைவனைப் பார்த்து, "தலைவ! நீ மிகவும் நல்லவனாகக் காணப்படுகின்றாய். அறவுரைகளுக்குச் செவிசாய்க்கின்றாய்; நீயும் உன் மரபினர்களும் மேற்கொள்ளக் கூடியதும், உங்களுக்கு விருப்பமானதும் ஆகிய அறத்தையே கூறுகின்றேன் கேளுங்கள். உங்களால் ஊன் புசிப்பதை விடமுடியாது என்றல்லவோ கூறுகின்றீர்கள். ஊனைப்புசியுங்கள். ஆனால் உயிரைக் கொன்று அவ்வூனைப் புசியாதேயுங்கள். வாழ்வாங்கு வாழ்ந்து வயது முதிர்ந்து இயற்கை மரணம் எய்திய உயிர்களின் உடல்தசையைப் புசித்து உயிர் வாழ்க. கப்பல் உடைந்து கரையைச் சேர்ந்த மக்களை அடித்து அவர்களை அலக்கழிக்காதீர். அவர்களை ஓம்பி அவர்கட்கு ஆவனசெய்து வழி கூட்டி அனுப்புக" என்று இனிய மொழிகளில் எடுத்து உரைத்தனன். இவை அனைத்தும் நாகர் தலைவனுக்கும் மற்றையோர்க்கும்

ஏற்றனவாக இருந்தன. ஆகவே, அவ்வாறே செய்வதாக நாகர் தலைவனும் ஏனையோரும் வாக்களித்தனர். தனக்கும் அறவுரைகளைக்கூறிய சாதுவனுக்கு வேண்டிய அளவுக்குப் பொன்னும் பொருளும் தந்து, போமாறு செய்தனர். சாதுவனும் பொருளைப்பெற்று அவ்வழியே வந்த வங்கம் ஏறித் தன் ஊரைவந்து அடைந்து பண்டு போல் பெருஞ்செல்வனாய்ச் சிறக்க வாழ்ந்தான். பார்த்தீர்களா சாதுவன் செய்த செயலை? அவன் அறவினையைப் பொருள்கொண்டா செய்தான்? சொற்கொண்டுதானே செய்தான்? அதனையும் எங்குச் செய்தான்? தான் சென்ற இடத்தில் அன்றோ செய்தான்? இதனைத்தான் திருக்குறள் என்னும் திவ்விய நூல்,

‘ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்’

என்று கூறுகிறது.

## பயிற்சி வினாக்கள்

1. அறமாவது யாது? அதனை எவ்வெவ்வாறு ஆற்றலாம்?
2. சாதுவன் யாவன்? அவன் ஏன் கடல்கடந்து சென்றான்?
3. சாதுவன் எப்படி நாகர் தலைவனை அடையநேர்ந்தது?
4. சாதுவன் எப்படி நாகர்தலைவனுக்கு உடலில் உயிர் உண்டு என்பதைக் காட்டினான்?

5. சாதுவன் நாகர்தலைவனை எப்படி வாழுமாறு செய்தான் ?

6. சாதுவன் நாகர் தலைவனுக்கும் ஏனையோர்க்கும் கூறிய அறவுரைகளைத் தொகுத்துக் கூறுக.

7. ' ஒல்லும் வகையால் ' என்ற குறட்பாவின் பொருளை விளக்குக.

# 6. அருளும் அன்பும்

செல்வம் என்றதும் நமக்குப் பொருள் செல்வம் தான் நம் முன்வந்து நிற்கும். பொருட்செல்வம் மட்டும் செல்வமாகாது. கல்விச் செல்வமும் புத்திரச் செல்வமும் கூடச் செல்வம் எனப்படும். அவற்றுள் அருளும் ஒரு செல்வமாகும். அருளாவது, அறியாமையால் பிறர்குற்றஞ் செய்வாராயினும், அக்குற்றத்திற்காக அவர்களைச் சபித்துக்கொட்டாமல், அந்தச்சமயத்தும் தம் அருட்பண்பை வெளிப்படுத்திக் காட்டுவதாகும். தாம் குற்றமுடையவர்களை அழிக்கும் ஆற்றல் பெற்றிருந்தும், அவ்வாற்றலை அப்போது காட்டாது, குற்றம் செய்தவர்கள் அறியாமைக்கு இரங்கி அக்குற்றவாளிகள் மனம் பெரியவர்கட்குத் தீங்குசெய்ததினால் நரகம்செல்ல நேரிடுமே என்ற இரக்கத்தினால் அருட் பண்பாட்டினால் இறைவனை நோக்கி, " இறைவ ! இந்தப் பாவிகள் இவ்வாறு அறியாது குற்றம் செய்கின்றனர். அவர்களை மன்னித்துவிடுங்கள் " என்று மன்றாடுதல் வேண்டும். இப்படி மன்றாட வேண்டுமானால், அருள் பண்பும், அதற்கேற்ப அகத்தில் அன்புடைமையும் அமைந்திருக்க வேண்டும் அல்லவா? அப்படி அமையப் பெற்றவர் யார்? அவர் அருட்பண்பு உடையவர் என்பது எப்படித் தெரிகிறது

என்பனவற்றைக் கீழ்க்காணும் சரித்திர வாயிலாக உணர்ந்து கொள்ளலாம்.

நம் நாட்டில் பல சமயங்கள் நிலவி வருகின்றன அல்லவா? அவற்றுள் ஒன்று கிறிஸ்தவச் சமயம். அச் சமயத் தலைவர் ஏசுநாதர் ஆவார். அவர் தேவகுமாரன் என்றும் கூறப்படுவார்.

கிறிஸ்துப்பெருமான், கண்ட உண்மைகளை இவர் காலத்து மக்களுக்கு உபதேசித்தார். இவ்வுபதேசம் நல்லனவாக இருந்தாலும், ஏதோ புரட்சி ஏற்படக் கூடும் என்று பயந்தவர்களாய் ஏசுநாதரைப் பிடித்து பிலாத்து மன்னன் முன் அழைத்துச் சென்று, "இவன் நம் நாட்டு மக்களிடையே பிரசங்கம் செய்து அவர்கள் மனத்தை மாற்றிக் கலகம் உண்டுபண்ணத் தூண்டு கிறான். இவனே அரசனாகப் போவதாகவும், அரச னுக்கு வரி கொடுத்தல் பாவம் என்றும் கூறுகின்றான்" என்றனர்.

பிலாத்து, இயேசுவை ஒன்றும் செய்யாமல் ஏரோது என்னும் அரசனிடம் அழைத்துப் போகுமாறு ஆணை தந்தனன். அவர்களும் அவ்வாறே தேவகுமாரனை ஏரோது என்பவனிடம் அழைத்துச் சென்று "இவன் வேதவிரோதி" என்று அறிவித்து, "இவன் தண்டனைக்கு உரியவன்" என்றும் கூறினர். ஏரோதும் கட்டுண்ட தேவகுமாரனை ஒன்றும் செய்திலன். மீண்டும் அவரைப்

பிலாத்து அரசனிடம் கொண்டுபோய் விட்டுவிடக் கூறினன்.

யூதர்கள் இயேசு இறப்பதற்குரிய தண்டனையை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று எண்ணி இருந்தனர். அது நடவாமல் போகிறதே என்று அறிந்து வருந்தினார்கள். என்றாலும், எப்படியும் கொலைத்தண்டனை அவர் பெறுதற்கு விடாது முயன்றனர். ஏரோதைக் கண்டு மீண்டும் பிலாத்தை அடைந்தனர். ஏரோது நீதிமான். யூதர்கள் எண்ணப்படி இயேசுவைக் கொல்லத் தீர்மானம் செய்யாமல் நாட்டில் இராதபடி துரத்தி விடும்படி செய்யவே எண்ணினன்.

ஆனால், "யூதர்கள் வேத விரோதியாகிய இந்தத் தேவதூதனைக் கொல்வதே முறை" என்றுமொழிந்தனர். பிலாத்து இயேசுவை விடுதலை செய்ய எவ்வளவோ முயன்றும் முடியாமல் போயிற்று. இறுதியில் பிலாத்து யூதர்களைப் பார்த்து, "யூதர்களே! குற்றம் இல்லாத இந்தத் தேவதூதனுக்கு உங்கள் பொருட்டு மரண தண்டனை விதிக்கிறேன்." என்று கூறிவிட்டனன்.

இந்தவிதமான தீர்ப்பைப் பெற்ற யூதர்கள் மிகவும் சந்தோஷம் கொண்டனர். இயேசுவைச் சூழ்ந்து பலவாறு நிந்தனை மொழிகளை மொழிந்தனர். பாம்பைப்போலச் சீறி விழுந்தனர். அவருக்குச் செவ்விய ஆடை ஒன்றை அளித்தனர். முள்முடி ஒன்றை அமைத்து அவரது தலை

யில் சூட்டினர். இவ்வாறு சூட்டியதன் நோக்கம் அவரது முடியினின்று இரத்தம் பீறிடட்டும் என்பதாகும். ஒரு சில பாவிகள் கோல்கொண்டு அவரைப் புடைத்தனர். அவரைத் தூஷணமாகவும் பேசினார்கள்.

இவ்வளவு கொடுமைகளைச் செய்த யூதர்களை இயேசு ஒன்றும் செய்திலர்.

இயேசுநாதர்க்கு இடப்பட்ட தண்டனையைக் கேட்ட எருசலேம் மக்கள் மிகவும் துன்புற்றனர். துன்புற்றவர்கள் "இனி நம்குலம் நாசம்தான். இப்பட்டணம் சுடுகாடாகப் போய்விடப் போகிறது. சமுத்திரம்பொங்கி நீர்ப் பிரளயம் வந்து விடும்." என்று கூறினார்கள். சிலர் கண்ணீர் சிந்தினர். சிலர் துடிதுடித்தனர். எண்ணி எண்ணி ஏங்கினர் சிலர்.

யார் அழுது என்ன பயன்? அரச தண்டனை அகன்று விடுமா? இயேசுப் பெருமானைச் சிலுவையில் அறைந்து கொல்லக் கல்வாரி என்னும் மலையை நோக்கிப் புறப்பட்டனர் யூதர்கள். இயேசுப் பெருமானிடமே சிலுவையைக் கொடுத்துச் சுமந்துவருமாறு செய்து, எருசலேம் நகரத்தார் அழும்படி அவரைக் கட்டிக் கொண்டு போயினர். இயேசுவும் சாந்தகுண சம்பன்னராய் யூதர்களை எந்தவிதமான சுடு சொற்களாலும் வையாது, அவர்கள் செய்யும் கொடுஞ் செயல்களாகிய குற்றங்களைப் பொறுத்துக்கொண்டே போயினர்.

இயேசுப் பெருமான் எருசலேம் நகர்க்கு இடையே சென்றனர். இவரது பரிதாபமான தோற்றத்தைக் கண்ட எருசலேம் மாதர்கள் தாங்கொணாத் துயரத்தால் வருந்தினர். "குற்றமற்ற கற்புடைய தாயாகிய மரியாள் குமாரனுக்கா இந்தக் கதி ஏற்பட்டுவிட்டது?" என்று ஏங்கினர். இம்மாதர்கள் அழுத அழுகை ஓசை நகரின் எப்பக்கமும் பரவியது.

சில மாதர் "ஆ, ஆ இது அநியாயம், அநியாயம்!" என்றனர். "தருமம் அழிந்தே போயிற்று." என்று கூறினர். "இனி மரியாள் தன் மகனுக்கு ஏற்பட்ட நிலைமை கண்டு உயிர் வாழாள்" என்று கூறிக் கொண்டனர். "இக்கொடிய செயலால் முழுமுதற் பரம் பொருளுக்கே கோபம் உண்டாகி மூவுலகுமே அழிந்தொழியும்." என்றனர்.

சில மாதர்கள் இயேசுப்பெருமான் பின்னே வாய் விட்டுக் கதறி ஓடினர். இவ்வாறு மாதர்கள் தம் பொருட்டு வாடி வதங்கி வாய்விட்டு அழுவதைக் கண்ட இயேசுப் பெருமானார் அவர்களை நோக்கி, "எருசலேம் மக்களே! நீங்கள் எனக்காக அழாதீர்கள்" என்று கூறிச் சமாதானப்படுத்திச் சென்றார். இவருக்குப் பின் இவரது தாயாகிய மரியம்மாளும் நெருப்பிலகப்பட்ட புழுப்போல் துடித்தவளாய்ப் பின் சென்றாள்.

யூதர்கள் கொலைக்களத்தை அணுகினர். இயேசுவைச் சிலுவையில் நிறுத்தி அவரது, பாதங்களிலும்,

கைகளிலும் ஆணிகளை அடித்து, அடித்த அச்சிலு வையை எடுத்து நிறுத்திப் பூமியைத் தோண்டி அதில் நேரே நிறுத்தினர்.

ஆ! எவ்வளவு கொடுமை! அக்காலத்தில் இத் தகைய கொடுஞ் செயல்களைப் புரியும் கொடியவர்களும் இருந்தனர் போலும்! இத்தகைய கொடுங்குணமுடைய வர்களை எத்தகையவர்களும் வெறுத்தே தீருவர். ஆனால், அன்பே வடிவாய் அருளே உருவாகக் கொண்ட இயேசுநாதர் மட்டும் ஒன்றும் கூறிலர்; ஒன்றும் செய் திலர். அவர்கள் தம் வாயாலும் கையாலும் இழைத்த தீங்குகளையும் பொறுத்துக் கொண்டே தான் சிலுவை யில் அறைந்தபோது அவர் உயிர் போகும் தருணத்தில் இருந்தார் அல்லவா? அந்தச் சமயத்தில் வாய்விட்டுச் சில வார்த்தைகளைப் பேசினர். அவை யூதர்களைச் சபித்துப் போடுவதற்காக எழுந்த வார்த்தைகள் அல்ல. அவ்வார்த்தைகள் ஆண்டவனை நோக்கி முறையிட்ட வார்த்தைகளாகும். இயேசுப் பெருமான் பரமண்டலத் தில் இருக்கும் பரம பிதாவைப் பார்த்து, "இறைவா, இவர்கள் அறியாமை காரணமாக எனக்கு இத்தகைய தீமைகளைச் செய்கின்றனர். இவர்கள் செய்யும் குற்றத் திற்காக இவர்களைத் தண்டித்து விடாதீர். இவர்களை மன்னித்து விடுங்கள்" என்றுதான் பிரார்த்தனை செய்து கொண்டனர். இவர் அல்லவா மகா புருஷர். இவர் பிறருக்காக மன்னிப்புக் கேட்டனர் எனில், இதற்கு ஆதி

காரணம் எதுவாக இருக்கவேண்டும்? அது இவர்பால் அமைந்த அருட் குணத்தினால் என்று கூறின், அது பொய்யாகுமா? இந்த அருள் மனப்பான்மை ஒவ்வொரு வருக்கும் இருக்கவேண்டும் என்பதற்காகவே வள்ளுவர்

'அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள'

என்று கூறிப் போந்தார்.

## பயிற்சி வினாக்கள்

1. செல்வம் என்று எவ்வெவற்றைக் கூறலாம்?
2. ஏன் அருளே செல்வம் எனப்படும்?
3. ஏசுப்பெருமான் ஏன் சிலுவையில் அறையப் பட்டனர்?
4. எருசலேம் மக்கள் ஏசு உற்ற நிலைமை குறித்து எவ்வெவ்வாறு புலம்பினர்?
5. யூதர்கள் எவ்வெவ் முறையில் ஏசுவுக்குத் தீங்கு இழைத்தனர்?
6. ஏசுப்பெருமான் மகாபுருடர் என்பது எப்படி விளங்குகிறது?
7. "செல்வத்துள் செல்வம்......" என்னும் குறட் பாவை விளக்குக.

# 7. அரசன் கடமை

மன்னர்களாக இருந்தால் மகிழ்ச்சி மிக உண்டு என்று கூறிவிட முடியாது. மன்னர்களுக்கு இருக்கும் பொறுப்பு அதிகமாகும். மக்கள் வேண்டுமானால் கவலையற்று இருக்கலாம். மன்னன் அவ்வாறு கவலை அற்று இருக்க முடியாது. மாநிலத்தைக் காக்கும் மன்னன், குடிகளுக்கு வரக்கூடிய ஐந்துவகையான பயங்களையும் போக்கி அரசு செய்யவேண்டும். ஐந்துவகை பயங்களாவன: தன்னால் வரக்கூடியது, தன் பரிசனங்களால் வரக்கூடியது, பகைவர்களால் வரக்கூடியது, திருடர்களால் வரக்கூடியது, விலங்குகளால் வரக்கூடியதும் ஆகியவைகளாம். இந்த முறையில் பயங்களை நீக்கி அரசு செய்கின்ற மன்னர்களைக் குடிமக்கள் பெரிதும் போற்றுவர். அத்தகைய மன்னனைக் குடிதழுவிக் கோல் ஓச்சும் மன்னன் என்று கூறுவர். இப்பண்புடைய மன்னனது பாதங்களைக் குடிமக்களும் தழுவி நிற்பர். இவ்வாறு விளங்கிய மன்னர்கள் நம் தமிழ் நாட்டில் பலர் இருந்தனர். அவர்களுள் ஒருவன் பொற்கைப் பாண்டியன் என்பவன்.

பொற்கைப் பாண்டியன் பாண்டிய நாட்டில், மதுரை என்னும் மாநகரில் செங்கோல் செலுத்தி வந்தான். அவனது ஆட்சியில் மேலே குறிப்பிட்ட ஐவகை

பயங்களே கிடையா. அவன் பிறரைக் கொண்டு தன் நாட்டுக் குடிமக்கள் தன்னைப் பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதை அறிய எண்ணமில்லாதவனாய்த் தானே அறிந்துகொள்ளவேண்டுமென்ற பேரவா உடையவனாய் இருந்தான். அவ்வாறு இருந்து யாது பயன்? அதனை நிறைவேற்றவும் வேண்டுமன்றோ? ஆகவே, பொற்கைப் பாண்டியன் தினமும் நள்ளிரவில் வேற்றுருவுடன் நகர் சோதனை வருவான். குடிமக்கள் தம்தம் வீட்டில் என்ன கூறிக் கொள்கின்றனர் என்பதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருவான். திருடர்கள் திருட வருகிறார்களா என்பதைக் கவனிக்கவும் இவ்வாறு இரவில் நகர் சோதனை வந்தனன். இது தினமும் நடந்து வந்தது.

பாண்டிய நாட்டிலே ஓர் அந்தணர் வீதியிலே இருவர் உரையாடிக் கொண்டிருந்த அரவத்தை வழக்கப்படி நகர்சோதனைக்கு வந்த பொற்கைப் பாண்டியன் கவனிக்க நேர்ந்தது. அவ்விருவர் என்ன பேசிக் கொள்கின்றனர் என்பதை அறிய அவாவுற்றவனாய் மெல்ல அப்பேச்சு நடக்கும் வீட்டுத் திண்ணையில் உறங்குபவன் போலப் பாவனைசெய்துகொண்டு, இருவரும் பேசிய பேச்சுக்களை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

பேசியவர்கள் சதிபதிகள் ஆவர். அவர்கள் அந்தண குலத்தினர். அந்தணர் தாம் காசியாத்திரை செய்து கங்கையில் நீராடி விரைவில் திரும்புவதாகத் தம் மனையாளிடம் கூறினர். அம்மனையாள் தன் கணவனை

நோக்கி, "அன்புடையீர்! காசி என்பது அண்மையில் உள்ள பதி அன்றே. அது நெடுந்தொலைவில் அன்றோ உள்ளது? அங்குச் சென்று மீள்வதாயின் நீண்ட நாட்கள் பிடிக்குமே. நீங்கள் திரும்பி வருகிறவரையில் யான் எப்படித் தனித்து இருப்பேன்?" என்று கூறி அந்தணர் காசிக்குச் செல்வதைத் தடுத்துவிட எண்ணினாள்.

ஆனால், அந்தணர் தாம் கொண்ட எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை. எப்படியும் காசிக்குச் சென்று மீள்வது என்றே தீர்மானித்து விட்டார். என்றாலும், தம் மனையாளைச் சமாதானப்படுத்தி விட்டன்றிப் போதல் கூடாது என்ற எண்ணத்தராய்த் தம் மனாட்டியை நோக்கி, "அன்புடையாளே! நம் பாண்டிய மன்னனது அரசாட்சியில் குடிமக்களுக்குப் பயம் என்பது ஒன்று ஏற்படுமா? அவன் குடிமக்களைக் கண்ணும் ஆவியும் போலல்லவோ காத்துவருகின்றான். அப்படி இருக்க, நீ சிறிதும் சிந்தியாமல் இப்படிக் கூறுகின்றனையே! நான் வரும்வரையும் இந்நாட்டு மன்னனது செங்கோல் உன்னைக் காத்துவரும். சிறிதும் அஞ்சற்க. யான் நாளை காலை புறப்பட்டுவிடுகின்றேன். உத்தரவு கொடு" என்று கூறினன். அந்தணனது மனையாள் அதற்குமேல் ஒன்றும் பேசிலள். தன் கணவரை அப்படியே காசிக்குச் சென்றுவருமாறு கூறினாள். அந்தணரும் விடியற்காலை வடக்கு நோக்கிக் காசிக்குப் பயணப்பட்டனர்.

இவை அனைத்தையும் மன்னன் அவ்வந்தணர் வீட்டுத் திண்ணையில் இருந்து கேட்டு, அந்தணர் புறப்படுதற்குமுன் தன் அரண்மனை வந்து சேர்ந்தான்; அவ்வந்தணர் இல்லத்தைக் காவல் புரியும் பொருட்டு எந்தக் காவலாளியையும் அமைத்திலன். பொற்கைப் பாண்டியனே தினமும் இரவு பதினொரு மணிக்கு நகர் சோதனைக்குப் புறப்பட்டு, நகர்சோதனை முடிந்ததும் அந்தணர் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்துவிட்டு, விடியற்காலையில் எவர் கண்ணுக்கும் தென்படாமல் தன் அரண்மனைக்கு வந்து கொண்டிருந்தனன். இவ்வாறு பல நாட்கள் தடைபடாமல் நடந்துவந்தது.

காசிக்குச் சென்ற அந்தணர், கங்கையில் நீராடிக் காசி விஸ்வநாதரையும் காசி விசாலாட்சி அம்மையாரையும் கண்டு தரிசித்து மீண்டும் தம் நாடாகிய பாண்டிய நாட்டில் மதுரையம் பதியை அடைந்தனர். அன்று இரவு தாமும் தம் மனைவியுமாக நீண்டநேரம் காசி யாத்திரைச் சம்பவங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

வழக்கப்படி நகர சோதனைக்கு வந்த மன்னன், உள்ளே இருவர் பேச்சுக்குரல் கேட்பதை உணர்ந்து அக்குரல் யாருடைய குரலாக இருக்கலாம் என்பதைச் சிறிதும் சிந்தியாது, தான் வருவதற்கு முன் எவரோ உள் புகுந்து அந்தணருடைய மனையாளோடு பேசிக்கொண்டு இருப்பதாக எண்ணி, கதவின் அருகே சென்று, "யார்

உள்ளே?" என்று கேட்டான். இந்தக் கேள்வி கேட்கப்பட்டதும், அந்தணர், தான்தான் இவ்வீட்டிற்குரிய எசமானனுகிய அந்தணன் என்று கூறிக்கொண்டே வந்தனர். அரசன் திடுக்கிட்டுப் போனுன். "அந்தோ!



நான் அந்தணர் மனையாளுக்கு ஆபத்து வரக்கூடிய செயலைச் செய்துவிட்டேனே! தினமும் நான் வந்துபோவதாக அந்தணர் எண்ணிவிடுவாரே." என்று எண்ணி, திடீர் என்று ஒரு யோசனை தோன்ற, அந்தத் தெருவில் இருந்த எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிக்கொண்டே போய் இறுதியில் தன் அரண்மனையை அடைந்தனன்.

அந்தணர்கள் எல்லோரும் வெளியே வந்து "யாரோ திருடன் நம் வீட்டிற்கு வந்தான். நம் வீட்டுக் கதவு

களைத் தட்டிவிட்டுச் சென்றனன். இது என்றும் இல்லாத நிகழ்ச்சியாக இருக்கிறது? பயம் அற்று வாழ்ந்த இந்த நாட்டில், இப்போது பயம் வந்து புகுந்துவிட்டது. இதனை நம் நாட்டு மன்னனும் பாண்டிமாராசனுக்கு அறிவிக்க வேண்டும்." என்று தீர்மானித்து, எப்பொழுது பொழுது விடியப்போகிறது என்பதை எதிர் நோக்கி இருந்தனர்.

பொழுதும் விடிந்தது. அந்தணர்கள் ஒரே கூட்டமாகப் பாண்டியன் அரண்மனையை அடைந்தனர். எல்லோரும் மன்னன் கொலுவீற்றிருந்த இடத்தை நெருங்கினர்.

பாண்டிய மன்னனுக்குப் பிராம்மணக் குழு வந்திருப்பதற்குக் காரணம் இன்னது என்பது தெரிந்தாலும், அதனை வெளிக்காட்டாது, "பிராமணர்களே! நீங்கள் ஒரே கூட்டமாக ஏன் இங்கு வந்தீர்கள்?" என்று கேட்டனன். அந்தணர்கள் குழுவில் ஒரு வயது முதிர்ந்த அந்தணர், "அரசே! நேற்று இரவு இதுவரையில் நிகழாத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதுதான் திருடன் ஒருவன் பொருளைத் திருடுவதற்காக வந்து எங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டிச் சென்றதாகும். உம்முடைய அரசாட்சியில் இப்படி இதுவரை நடந்ததில்லை. இதனை அறிவிக்கவே நாங்கள் இங்கு வந்ததற்குக் காரணமாகும்" என்று கூறினர்.

அந்தணப் பெரியார் கூறிய அனைத்தையும் பொறுமையுடன் கேட்டு, "பிராமணர்களே! அந்தத் திருடனைக் கண்டு பிடித்தால் அவனை என்ன செய்யலாம்?" என்று கேட்டான். எல்லாப் பிராமணர்களும் ஒருசேர "அவ்வாறு எம் வீட்டுக் கதவுகளைத் தட்டிய அவனது கையை வெட்டி விடவேண்டும்." என்று கூறினர்.

இவ்வாறு அந்தணர்கள் அனைவரும் அறையக் கேட்ட அரசன், "அந்தணர்களே! அப்படித் தட்டிய கள்வன் நானேதான்" என்று கூறித் தன் உடைவாளில் இருந்த கத்திகொண்டு தன் கையை வெட்டிக் கொண்டனன்.

பிராமணர்கள் அதன்பின் பெரிதும் வருந்தினர். கதவு தட்டப்பட்டதற்குரிய காரணத்தையும் அறிந்து மேலும் வருத்தப்பட்டனர். வருத்தப்பட்டு யாது பயன்? அரசனது கை வெட்டுண்டது, வெட்டுண்டதுதான்.

ஆனால், அந்தணர்கள் ஆலவாய்ப்பெருமானை நோக்கி வெட்டுண்ட கைகள் பொற்கையாகுமாறு வேண்டிப் பிரார்த்தனை செய்தனர். நல்லவர்களுடைய பிரார்த்தனை வீண் போகாது. ஆகையால், அவ்வாறே ஆலவாய்ப்பெருமானார் அருள்காரணமாக, வெட்டுண்ட கை பொற்கையாகத் திகழ்ந்தது. இக்காரணம் பற்றியே அப்பாண்டியன் பொற்கைப் பாண்டியனென அழைக்கப்பட்டான். இத்தகைய மன்னனது அடிகளைத் தழுவிக் குடிமக்கள்

வாழ்வர் என்று கூறவேண்டுமா? இதனால்தான் வள்ளுவனார்

'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு'

என்று அறிவித்துச் சென்றார்.

## பயிற்சி வினாக்கள்

1. மன்னர்கள் எவ்வாறு தம் நாட்டை அரசு புரிய வேண்டும்?
2. குடிமக்கள் எத்தகைய மன்னரை விரும்புவர்?
3. பொற்கைப் பாண்டியன் இயல்பு யாது?
4. ஏன் பாண்டியன் அந்தணர் வீட்டுத் திண்ணையில் தினமும் வந்து தங்கிச்சென்றான்?
5. பாண்டியன் ஏன் அந்தணர் வீட்டுக் கதவுகளைத் தட்டிச் சென்றான்?
6. பாண்டியனுக்குப் பொற்கைப் பாண்டியன் எனப் பெயர் வரக் காரணம் யாது?
7. "குடிதழீஇ" என்ற குறட்கு விளக்கம் தருக.

# 8. உயர்ந்த எண்ணமே உன்னத எண்ணம்

நம்மனம் பலவாறு எண்ணும் பண்புடையது. அவ்வாறு எண்ணப்படும் எண்ணங்கள் கீழ் நோக்கிச் செல்லக்கூடிய எண்ணங்களாகவும், மேல் நோக்கிப் போகக்கூடிய எண்ணங்களாகவும் இருக்கக்கூடும். ஆனால், நாம் எண்ணும் எண்ணங்கள் மேல் நோக்கிச் செல்லக்கூடிய எண்ணங்களாகவே அமையவேண்டும். இப்படி எண்ணும் எண்ணங்கள் நம் ஊழ் காரணமாகத் தடைபட்டுப்போகும் நிலை ஏற்படினும், அதன் பொருட்டுக் கொண்ட உயர்வான நினைப்புக்களை விட்டொழிக்கக் கூடாது. விடாது உயரிய எண்ணங்களையே உன்னி வருவோமானால், அவ்வெண்ணத்தின் வன்மை, தடைகளையும் தள்ளி முற்றுவிக்கும் நிலைகளைத் தரும் தன்மையினைப்பெற்று விளங்கும். இதுவே வள்ளுவருடைய கருத்தும் ஆகும். நினைப்பவை யாவும் உயர்ந்த நினைப்புகளாக இருக்கட்டும்; அவ்வுயரிய நினைப்புகள் ஊழ் காரணமாகத் தள்ளப்பட்டாலும், நினைவுகளின் வன்மை தள்ளாத தன்மையினை உடையதாகும் என்பதன்றோ அவரது கருத்து. இக்கருத்தினை உலகம் போற்றும் உத்தமராகிய இராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய வாழ்க்கை வரலாற்றைக்கொண்டும் அறிந்து கொள்ளலாம்.

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் பரம ஏழைகளாகி விளங்கிய பிராம்மணக் குடியில் தோன்றியவர். இவர் ஆயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்றாம் ஆண்டில் பிப்ரவரி மாதம் இருபதாம் தேதியில், ஹூக்ளி ஜில்லாவில் தோன்றிய மகான் ஆவார். இவரது பெற்றோர்கள் ஏழைகளாயினும், நல்ல பண்புகள் பலவும் பெற்றவர்கள். அப்பண்புகள் நம் இராமகிருஷ்ணரிடம் அமைவதாயின. "நூலைப் போலச் சேலை, தாயைப் போலப் பிள்ளை" என்பது பழமொழியல்லவா? அந்த முறையில் பெற்றோர் பண்பினை இராமகிருஷ்ணர் பெற்றது பாராட்டற்குரியதே யாகும்.

இராமகிருஷ்ணர் இளையவராக இருந்தபோதே இவர்பால் சில அரிய குணங்கள் குறிப்பாகக் காணப்பட்டன. இவர் தமது முன்னைய பிறப்பின் நிகழ்ச்சிகளை எல்லாம் அறிந்திருந்தார். இவர் நம் நாட்டில் நல்ல உபதேச மொழிகளை உணர்த்துவதற்காகவே இறைவனால் அனுப்பப்பட்டவர் என்ற உணர்ச்சியும் அவரிடம் இளமை முதற்கொண்டே இருந்துவந்தது.

இவர் கல்வி பயிலும் பொருட்டுக் கிராமப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப்பட்டார். ஆனால், இவருடைய மனம் படிப்பில் மிகுதியும் ஈடுபடவில்லை. ஆகவே, பள்ளிக்குப் போவதையும் நிறுத்திக்கொண்டார். இதற்கிடையில் இவரது தந்தையாரும் இறந்துவிட்டனர்.



குடும்பபாரமும் இவரைத் தொடர்ந்தது. இவர் குடும்பத்தை நடத்த ஒரு வழிகாண நேர்ந்தது.

இவர் தட்சணேஸ்வரத்தில் காளி கோயிலில் பூசாரியாக நியமிக்கப்பட்டார். தினமும் காளியைப் பூசனை புரிந்து வந்தார். பூசைக்கு வேண்டிய பொருள்களைத் தினமும் சேகரித்து, அவற்றைக்கொண்டு ஒழுங்காகப் பூசை புரிந்துவந்தார். இப்படிச் சிலகாலம் நடந்தது. இராமகிருஷ்ணர் எப்போதும் உயர்ந்த நாட்டமே கொண்டவர். சிந்தனையில் ஆழ்பவர். ஆதலால், காளியின் உருவத்திலேயே இவருக்குப் பல சந்தேகங்கள் உண்டாகிவிட்டன. "இந்த உருவம் வெறும் உருவமா? அன்றி, அவ்வுருவத்தில் உயிரும் உண்டா?" என்றெல்லாம் நினைக்கத் தொடங்கினர். சிற்சில சமயங்களில் காளியை நோக்கி, "நீ இருக்கின்றாயா?" என்றுகூடக் கேட்டார். இப்படி எண்ணியும் கேட்டும் இவருக்குப் பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. இவரது கனவில் காளியின் அருளால் சில தெய்வீகக் காட்சிகள் தோன்றலாயின. ஆகவே, இவர் தினமும் காலை மாலைகளில் பூசைத் திரவியங்களைக் கொண்டு சென்று காளியைப் பூசிக்கும் பணியையும் நிறுத்திவிட்டார். அக்கோயிலுக்கு அருகே இருந்த ஒரு காட்டில் ஒரு தனி இடத்தில் அமர்ந்து, கண்மூடி மௌனியாக இருந்து உண்மை காண முயன்றார். உலகை மறந்தார். உணவை மறந்தார். இவர் இவ்வாறு உணவும், உணர்ச்சியும் இன்றி மௌன

மாக இருப்பதைக் கண்டவர் இவர் ஒரு பைத்தியக்காரர் போலும் என்றுகூட எண்ணிவிட்டனர்.

இவ்வாறு இராமகிருஷ்ணர் தமது உயரிய நோக்கத்தைப் பெறத் தவம் செய்கையில், ஒரு மாது சிரோன்மணியார் இவர் இருக்கும் இடத்தை நாடிவந்தனர். அம்மாதரார் சந்நியாசியாவார். அவ்வம்மையார் இவரது உறுதியையும் உண்மையையும் கண்டு, பல நாட்கள் இவரிடமே இருந்து இவருக்கு யோகம் செய்யும் முறைகளைக் கற்றுக்கொடுத்தார். பின்பு இந்தியாவில் இருந்த பல மதங்களின் உண்மைகளை உரைத்தருளினர். இவை யாவற்றையும் இந்த அம்மையாரிடமே ஐயம் திரிபற ஓதி உணர்ந்தார். இந்த அம்மையார் சென்றபின் ஒரு பெரிய சந்நியாசி வந்து சேர்ந்தார். அவர் இராமகிருஷ்ணருக்கு வேதங்களில் கூறப்பட்ட கருத்துக்களை விளக்கமாக எடுத்து மொழிந்தனர். அவற்றையும் சந்தேக விபரீதம் அற இராமகிருஷ்ணர் உணர்ந்துகொண்டார். ஆகவே, இராமகிருஷ்ணர் இளமையில் பயின்ற பள்ளிக்கூடப் படிப்புக் கொஞ்சமேயானாலும், காளிதேவியார் கடாச்சத்தாலும் பெரியோர்களுடைய வருகையாலும் பல வருடங்கள் படித்தாலும் அறிந்து கொள்வதற்கு அருமையான கருத்துக்களை அறிந்து கொண்டார். பேரறிஞராகத் திகழ்ந்தார்.

இராமகிருஷ்ணர் இளமையில் உலக இன்பத்தில் மிகுதியும் ஈடுபடாமல் தெய்வீக ஈடுபாட்டினும் உண்மை

யைக் காணவேண்டும் என்ற எண்ணத்திலும் பெரிதும் ஈடுபட்டிருந்ததை அறிந்த இவரது சுற்றத்தார் இவருக்கு இளமையிலேயே திருமணம் செய்துவைத்தனர். இவ்வாறு இவருக்குத் திருமணம் செய்ததன் நோக்கம், கலியாணம் ஆனபிறகேனும், உலக இன்பத்தில் ஈடுபட்டு இல்லறத்தை இனிது நடத்தக்கூடும் என்பதற்காகவே என்க. இவருக்கு மனைவியாக அமைந்தவர் மிக இளையர். அது ஒருவிதத்தில் இராமகிருஷ்ணருக்கு நன்மையாக இருந்தது. அந்த அம்மையாரை விடுத்துத் தம் நோக்கத்தை நிறைவேற்றக் காட்டிற்குப் போய்த் தவம் செய்ய வசதி தந்தது.

அம் மாதரார் வளர்ந்து பெண்மை நலம் வாய்த்த பின் தம் கணவராம் இராமகிருஷ்ணபரமஹம்ஸர் தவம் செய்திருந்த இடத்தை அடைந்து, அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கிய வண்ணம் இருந்தார். இராமகிருஷ்ணரது தவப்பயன், காணும் மாதர்கள் அனைவரையும் தாயாகவே கருதும் நிலையினைத் தந்திருந்தது. ஆகவே, தமக்கு வாழ்க்கைபட்ட அம்மையாரையும் தாயாகவே கருதித் தமக்குத்தொண்டுசெய்ய அமர்த்திக்கொண்டனர். அவ்வம்மையாரும், தம் கணவனிடம் தாம் அவரை உலக இன்பத்தில் ஈடுபடுத்துவதில்லை என்றும், சிஷ்யையாக இருந்து தொண்டு செய்துகொண்டிருப்பேன் என்றும் உறுதி கூறினர். இந்த முறையில் அம்மையார் இராமகிருஷ்ணருக்குத் தொண்டு புரிந்துவந்தார்.

இராமகிருஷ்ணர் தவம் கிடந்து பல மதங்கள் உலகில் இருப்பினும் அவைகள் எல்லாம் கடவுள் ஒருவர் உளர், அவரை அடைய உயிர்கள் முயலவேண்டும், என்பதைத்தான் உணர்த்துகின்றன என்பதையும், மக்கள் ஒழுக்க முடையவராய் நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் மக்களுக்குள் வேறுபாடு இருத்தல் கூடாது, எல்லோரும் ஒன்றே என்பதையும் நன்கு உணர்ந்து, அவற்றையே பலருக்கும் உணர்த்தி வந்தார். உலகமக்கள் பிறந்து இறந்துபோவதில் பயனில்லை. அவர்கள் நல்வழி காண வழி யாது என்ற உயர்ந்த சிந்தனையினால்தான்,அவர் பூசையை வெறுத்து,உலகஇன்பத்தை வெறுத்து, உணவை வெறுத்து, தவம் செய்யலானார். இவர் உன்னிய உன்னதமான எண்ணம் இறுதியில் இவருக்கு இன்பமே தந்து ஈடேறவும் செய்தது.

இவ்வாறு உயரிய எண்ணம் கொண்டு உண்மைகளைக் கண்ட உத்தமராம் இராமகிருஷ்ணர், பின்பு கல்கத்தா வந்து சேர்ந்தார். அங்குப் பற்பல இடங்களுக்குச் சென்று தாம் கண்ட உண்மைகளை மக்களுக்கு உபதேசித்து வந்தனர். இவரது உபதேச மொழிகளுக்குப் பலர் செவிசாய்த்து இவருக்குச் சீடர் ஆயினர். அவ்வாறு சீடர்களானவர்கள் பலருள் சிறப்பாக ஆண் சமூகத்தில் சுவாமி விவேகானந்தரையும்,பெண்கள் இனத்தில் மிஸ் மார்க்கரட்நோபா அம்மையாரையும் குறிப்பிடலாம். இவ்வம்மையாரே நிவேதித்தா என்பவர் ஆவார்.

இராமகிருஷ்ண பரமஹம்ஸரது உபதேசம் கல்கத்தாவையும் கல்கத்தா சார்ந்த ஊரையும் மட்டும் வசப்படுத்தவில்லை. இந்தியாவில் பல பாகங்களையும் வசப்படுத்தியது. அதனால், பல பாகங்களிலுமிருந்து பலரும் வந்து பல கேள்விகளைக் கேட்டுத் தம் ஐயங்களை நீக்கிக் கொண்டு சென்றனர். இவரும் சிறிதும் சளைக்காமல் யார்வந்து கேட்பினும், எந்த நேரத்தில் வந்து கேட்பினும் அவர்கட்கு இருந்த ஐயங்களையும் நீக்கி வந்தனர். இப்படி இவர் இடைவிடாமல் பேசியும் உபதேசம் செய்தும் வந்ததால் இவருடைய தொண்டை தொந்தரவு செய்ய ஆரம்பித்தது. தொண்டையில் சதை வளரத் தொடங்கியது. அதையும் பொருட்படுத்தாது, தம் உடலில் பற்று வைக்காது, மக்கள் நல்வழிப்பட்டால் அதுவே போதுமானது என்ற எண்ணத்தினராய் உபதேச மொழிகளை உரைத்தே வந்தார். வினாக்களுக்கு விடை கூறியே வந்தார்.

இவ்வாறு இவர் இடைவிடாமல் தம் தொண்டைச் செய்து வந்ததால், இவருடைய தேகம் இளைக்கலாயிற்று: சோர்வு அடையலாயிற்று. ஆகவே, இராமகிருஷ்ண பரமஹம்ஸர் தம் உடல் மெலிவைக் கண்டு தம் சீடர்களை நோக்கி, “சீடர்காள், இனி என் உயிர் என் உடலில் நிற்காது. பிரிந்தே போகும். ஆகவே, நீங்கள் என் அருகிலிருந்து வேதங்களிலுள்ள சுலோகங்களைப் பாராயணம் செய்த வண்ணம் இருங்கள்,” என்றார். அவர்களும் அவர்

இட்ட கட்டளைப்படி வேத வாக்குகளைப் பாராயணம் செய்துகொண்டிருந்தனர். இப்பாராயணங்களைக் கேட்ட வண்ணமே இராமகிருஷ்ணரது உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. அவர் பூதஉடல் விட்டுப் புகழ்உடல் பெற்றார். இவ்வாறு இவர் புகழ் பெற்றது எதனால்? இவர் எண்ணம் உயரிய எண்ணமாக இருந்ததால் அல்லவா? அத்தகைய உயரிய எண்ணங்களையே உன்னும் நிலை உங்கட்கும் உறுவதாக. இந்நிலை ஏற்படின் தெய்வ அருளும் கிட்டும். பெரியோர்களும் தாமே வந்து அருள் செய்து மீள்வர்.

'உள்ளுவ எல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து'

பயிற்சி வினாக்கள்

1. நம் எண்ணங்கள் எத்தகையனவாய் இருத்தல் வேண்டும்? ஏன்?
2. இதுபற்றி வள்ளுவர் கருத்து யாது?
3. இராமகிருஷ்ணர் ஏன் காளி கோயிலில் பூசை செய்ய நேர்ந்தது?
4. இவருக்கு வேத ஞானமும், யோக ஞானமும் எப்படி வந்தன?
5. இவர் மனைவியார் ஏன் இவருக்குச் சீடர் ஆயினர்?
6. "உள்ளுவ எல்லாம்" என்ற குறட்கு விளக்கம் தருக.

## அருஞ்சொற் பொருள்

செய்யுள் 1. அகரமுதல = "அ" என்னும் எழுத்தை முத லாக உடையன, ஆதிபகவன் = முதன்மையான கடவுள், முதற்று = முதலாக உடையது.

செய்யுள் 2. இலம் = பொருள் இல்லாதவராய் உள்ளோம், எவ்வம் = இழிவான (சொல்லை), உரையாமை = சொல் லாதபடி, குலனுடையான் கண்ணே = நற்குடியில் பிறந்தவனிடத்தில்.

செய்யுள் 3. உய்வு = தப்பும் வழி, செய்ந்நன்றி = பிறர் செய்த உபகாரத்தை, கொன்றமகற்கு = மறந்தவனுக்கு.

செய்யுள் 4. அஃதிலார் = அந்தப் புகழை இல்லாதவர், தோன்றலின் = பிறப்பதைவிட.

செய்யுள் 5. அறவினை = புண்ணியச் செயல்களை, ஒவாதே = இடைவிடாமல், ஒல்லும் வகையால் = இயன்ற அளவு, செல்லும் வாய் எல்லாம் = செல்லும் இடங்களில் எல்லாம்.

செய்யுள் 6. பூரியார்கண்ணும் = அற்பர்களிடத்திலும்.

செய்யுள் 7. குடி = குடிமக்களை, கோல் ஒச்சும் = செங் கோல் நடத்தும, மா = பெரிய, உலகு = உலக மக்கள்.

செய்யுள் 8. உள்ளுவ = நினைக்கின்ற எண்ணங்கள், உள்ளல் = நினைப்பாயாக, தள்ளினும் = விதிவசத்தால் கைகூடாமல் போயினும், தள்ளாமை நீர்த்து = ஒழிக்கப்படாத தன்மையுடையதாகும்.